Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 49 | 04 - 10 - பெப்ரவரி - 2005



## படித்ததில் பிடித்தது

# நான் மலர்களை விரும்புவதில்லை

நான் மலர்களை விரும்புவதில்லை
மரணச்சடங்குகளை... திருமணங்களை...
நடன விருந்துகளையே
அவை நினைவூட்டுகின்றன.

மேசைகளின் மீதான
அவற்றின் பிரசன்னமோ
இரவுணவுக்கு அழைப்பு விடுக்கும்.

குழந்தையாய் இருந்தவேளை
என்னை துயராற்றிவிட்ட
ரோஜாக்களின்
நித்தியமில்லா வனப்புகள்
கடந்துபோன வருடங்களில்
என் முதிசமாய் இருந்தன
வானில் மிதக்கும் நிலவு
தலைக்கு மேலே தொங்கும்
இலச்சினையாய் குளிர்விக்கும்.

மொஷாட்டினுடைய
நித்தியமாய் வாழ்கின்ற
இசைச் சந்தம்போல்
அன்பு கூறும்
மடல்களை வாசிக்க
செத்துப்போன என் கணவர்
வீட்டுக்குள் வருகிறார்.

புதிரான... மறைவான....
பூட்டுகளுடன்
ஓக் மரப்பலகைகளில்
செய்த பெட்டியை
அவர் நினைவு கொள்கிறார்

சங்கிலி பிணைத்திருக்கும்
கால்களை
அறையின் தளத்தில்
தேய்த்துத் தேய்த்து
நகர்த்துகிறார்.

சந்திப்பு வேளைகளை....
மங்கித் தெரிகின்ற ஒப்பங்களை....
பார்க்கிறார்.
அந்தவேளை வரை
உலகில்
அவர்பட்ட வேதனைகள்
போதாதா?



அன்னா அகமதோவா
தமிழில்:-வின்சென்ற் புளோறன்ஸ்

# கார சாரம்

## கொஞ்சமாவது யோசியுங்கோ...!

மதுவுக்கும் மாதுக்கும் ஒரு கால்தான் (அரவு) வித்தியாசம். மாதர்கள் பற்றிய விழிப்புணர்வு இப்போது பரவலாக எல்லா இடங்களிலும் தோன்றியுள்ளது. காரணம் எச்சைவி ஆம் எய்ட்ஸ் இன்று பரவலாக இந்தப் பயம் படித்தவர்களிடையேதான் உள்ளது. படிப்பறிவு குறைந்த கிராமப்புற மக்களிடையே கிடையாது, கிடையவே கிடையாது. அதிலும் குறிப்பாக இன்றைய போர்ச்சூழல் ஆயிரக்கணக்கான பெண்களை அதிலும் இளம் பெண்களை விதவைகளாக்கியுள்ளது. இப் பெண்களின் வயது பற்றிக் கேட்டால் மூக்கில் விரல் வைக்கலாம். பதினாறு முதல் இருபது வயதுக்குட்பட்ட விதவைகள்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லையெனில் நீங்கள் தென்தமிழீழம் சென்றுபார்க்கலாம். இருபது வயதில் இருபத்தைந்து வயதில் விதவைகளான ஏராளமான பெண்கள் வடபகுதியின் வன்னிப் பகுதியின் சந்துக் கிராமங்களில் வாழ்கிறார்கள்.

இளமை ததும்பும் பருவத்துப் பெண்களான இவர்களில் அநேகர் விதவைகள்தானேயன்றி வாழா வெட்டிகளல்ல. என்ன முரண்பாடாகத் தெரிகிறதா?

அத்தனையும் உண்மை உண்மையைத் தவிர வேறில்லை. இவர்கள்மீது யார்தான் குற்றம் சொல்லமுடியும். நேர்மையான முறையில் ஒரு பெண்ணை மணந்து அவளுக்கு வாழ்வு கொடுக்கமுடியாத சமுதாயம், அவளது நேர்மைமீது குற்றம் சொல்லித் தன் ஆதங்கத்தை தீர்க்க முயல்வதுதான் கேவலமானது. ஒவ்வொரு ஆணும் தன்தன் கற்பைக் காப்பீற்றி வைத்திருந்தால் ஒரு பெண்ணும் கற்பிழக்கமாட்டாள் என்பது ஒரு வழக்கு மொழி. ஆனால், எந்த ஆணும் அல்லது எந்தப் பெண்ணும் விரும்பிக்கெட்டுப்போவதில்லை.

ஒரு மனித உணர்வு என்றுகூட இதை அப்புறப்படுத்த முடியாது. ஏனெனில் இது உயிரியல் உணர்வு. ஜீவனுள்ள கொடியும் கொம்பைத் தேடும்போது விலங்கினம் ஒவ்வொன்றும் துணை தேடுவது என்ன அதிசயம். ஆனால், விலங்கினங்கள் அனைத்தும் பக்கவாட்டாகத்தான் வளருகின்றன. முகத்தைப் பார்க்காமல்தான் உறவு கொள்ளுகின்றன. மனிதன் அப்படியல்ல மேல்நோக்கி வளருகின்றான். முகம்நோக்கியே உறவு கொள்ளுகின்றான். ஆக,

அவனால் அவளால் சிந்திக்கமுடியும். ஒரு பெண்ணை தன் இச்சைக்குப் பணிய வைக்க பணம், உடலழகு போன்றவற்றை மட்டுமல்ல. கருணையையும் கருவியாகப் பயன்படுத்துகிறான் (ள்) தனியே ஆண்களைப் பழிசொல்ல மாளாத விடயம் இது. பெண்கள் தம் உணர்ச்சிகளை அடக்கிவைக்கவேண்டுமெனில் அதற்கான மாற்றுவழியென்ன? அகில உலகமும் சொல்லும் ஒரேவழி பக்தி, விரதம், நோன்பு, ஆன்மீகம்.

ஆன்மீகம் பற்றி அதிகம் பேசுபவர்களுக்கே நன்கு தெரியும். பக்தி மார்க்கத்தில் தியான யோகத்தைப் பயில ஆரம்பிக்கும்போது முதலில் உடலிலிருந்து கிளர்ந்தெழுவது போகம்தான். பாலியல் உணர்வுகளே அதிகம் மேலெழும். அதனை தட்டி அடக்கிய பின்தான் மற்றைய நிலையெல்லாம். இது ஒரு சோகமான உண்மை. பல சாமியார்களை சிறைகளில் சேர்த்த உண்மை.

தத்துவம் பேசும் நேரமல்ல இது. ஏமாந்து போகும் ஏராளமான பெண்களுக்குத் தெரியும் நடந்த தவறுக்குத் தாங்களும் பொறுப்பு என்பது. அவருக்கு மனைவி இருப்பது எனக்குத் தெரியும். ஆனால், எனக்குக் கணவன் இல்லையென்ற நிலையை யாரும் யோசிக்கவில்லை.

இப்போது சொல்லுங்கள். தவறான உறவுகளுக்கு யார்காரணம். இயற்கையாக ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளா? இல்லை நியாயமாக எழும் உடல் உணர்வுகளைத் தள்ளிவைக்குமளவு யாரும் யோகியரில்லை. இவைதவிர தெரிந்தோ, தெரியாமலோ சட்டமும் ஒதுங்கியே நிற்கின்றது. சமுதாயத்தில் தம்மை தீர்க்கதரிசிகளாகக்கொண்டு உபதேசிப்போர் மட்டும் சலசலக்கின்றனர். சரி மதுவைப்பற்றி ஒரு சுழற்சிப் பார்வையை வீசுவோமா? இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் தமிழீழப் பகுதிகளிலும்கூட மதுச்சாலைகள் அங்கங்குள்ள அரச அனுமதிகளுடனும் அனுமதியின்றியும் இயங்கிவருகின்றன.

இவையும் அடிப்படை வசதிகளற்ற கிராமங்களில் மிக மோசமாக விற்பனையாகின்றன. அனுமதி பெற்றசாலைகளுக்குள்ள நேரக்கட்டுப்பாடு அனுமதிபெறாதவற்றுக்குக் கிடையாது. ஒரு கசிப்பு உற்பத்தி நிலையமானது பரந்த அளவில் ஒரு கிராமத்தின் ஏறக்குறைய முழுமக்கள் தொகையையும் பங்காளர்களாகக் கொண்டே இயங்குகின்றது. எனவே இந்நடவடிக்கைக்கு எதிராக சட்டம் எதையும் செய்யமுடியாது.

பொருட்களைக் கொள்வனவு செய்தல், பாத்திரங்கள் சேகரித்தல், விறகுவெட்டுதல், ஊறல்போடுதல், வடித்தல், பங்கிடல், விநியோகம், விற்பனை என ஆண்களும் பெண்களும் பங்குபற்றும் தொழில் இது என்பதுடன் பெருமளவு கணிசமான முதலீட்டையும் அடியாட்களையும் கொண்டு இயக்கக்கூடிய இயக்கும் பெரியவர்கள்?! இதைச் செய்தும் வருகிறார்கள். காட்டிக்கொடுப்பவர்களின் வீடு பூந்து இருட்டடி நடக்கும். நடந்திருக்கிறது. இந்தப் பகுதிக்குள் அரச அதிகாரிகளே செல்வது அபூர்வம்.

இந்த மதுச்சாலைகளில் மது விற்பவர் ஒருபோதும் போதையில் இருப்பதில்லை. (ஞானிகளுக்கேயுரிய கட்டுப்பாடு) ஆனால், குடிக்கும் ஒருவரின் கையில் பணமிருந்தால் அவர் போதையேறிய பின்னும் இன்னும் ஒரு....என்று கேட்கும்போது போதும் இனி உனக்கு அதிகமாகிவிட்டது. இன்று போய் நாளை வா..."

என்று கூறவே மாட்டார்கள். காசே குறியாக மேலும் ஊற்றிக்கொடுப்பார். குடித்தவர் தெருவில் விழுந்து புரண்டு புசத்தினால்.... பார்ப்பவர்கள் அவரைப்பார்த்து ஏளனம் செய்து சிரிப்பார்கள். உண்மையில் ஏளனம் அந்த மதுவை விற்றவனைச் சேர வேண்டும். காசு பிடுங்குவதே நோக்கமாக நடந்தவன் அவன், போதை ஓரளவு ஏறியபின் அறிவு கெட்டதன் பின் குடித்தவன் இவன். கி.ஆ.பெ. விசுவநாதன் ஒரு கதை சொன்னார்.

ஒருவன் தனிவழியே காட்டில் போனானாம். ஒருபெண் கையில் குழந்தையை இடுப்பில் வைத்தபடி ஒரு கள்ளுப்பானையும் ஒரு வாளும் கொண்டு வந்தாள். "நான் இந்த வழிக்கு உரியவள் நான் சொல்வதை செய்தபின்பே நீ இதில் போகலாம் என்றாள். அந்த நிபந்தனைகள் மூன்று ஒன்று இக் குழந்தையை இவ்வாளால் வெட்டு. அல்லது இந்தக் கள்ளைக் குடி. அல்லது என்னுடன் உறவுகொள். இவற்றில் ஏதாவது ஒன்றைச் செய்" என்றாள். வழிப்போக்கன் யோசித்தான். "அறியாத குழந்தையைக் கொல்வது பாவம். வெட்கமற்ற இப்பெண்ணைச் சேர்வது அதைவிடப்பாவம். கள்ளைக்குடிப்பது நல்லது" என நினைத்துக் கள்ளைக்குடித்தான். போதையேறியதும் தன்னுணர்வு மேலெழ அப்பெண்ணுடன் உறவுகொள்ளப் பாய்ந்தான். குழந்தை அழுதது. அக்குழந்தையை வாழால் வெட்டிக்கொன்றான்.

மது எல்லாத் தீமைகட்கும் முதன்மையானது. குற்றச் செயலுக்குக்கூட போதையில் இருந்தவர் செய்திருந்தால் தண்டனையில் அதற்கென சில விதி விலக்குகள் உண்டு.

இந்தக் கிராம மட்டத் தவறுகளையெல்லாம் தூக்கியடிப்பவையாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் சரி ஏனைய இடங்களிலும் சரி தேநீர்க் கடைகள் திகழ்கின்றன். கடைகளின் அண்மையிலுள்ள பற்றைகளில் கசிப்புக்கலன்கள் மறைத்து வைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. அனுமதிபெற்ற சீல் சாராயம் அதிகவிலைக்கு விற்கப்படுகிறது. சுபாவமாகப் பெண்களே சென்று வாங்கக்கூடிய பெண்கள் விற்பனை செய்யும் மதுச்சாலைகள் வவுனியாவில் உண்டு. இதற்கெனவே வீடுகளில் ரகசிய அறைகள் கட்டப்பட்ட வீடுகள் உண்டு. தேசவிரோதக் கும்பல்களிலிருந்து விலகிய சிலர் அடியாட்களாக இவர்களால் போசிக்கப்பட்டும் வருகின்றனர். அரச உத்தியோகம் பார்க்கும் சிலர் பகுதிநேரமாகத் தோட்டம் போட்டால் அது மரவள்ளி பயிற்றை மட்டுமென்றால் உள்ளே கஞ்சாச் செடிகள் கண்சிமிட்டும். சட்டம் ஒழுங்கு யாருக்கு யாரால் அமுல் படுத்தப்படுகிறது. நான் சொன்னேன் என்பதற்காக எதையும் நிறுத்த முடியாது. மதுவை மட்டும் நிறுத்தி விட்டால், எல்லாம் சரியாகிவிடுமோ. அ...போச்சுடா! அரசாங்கம் ரிம்மில தான் ஓடும்.

மாயா

# யதார்த்தத்தை நோக்கி பயணிக்கவேண்டிய இந்தியா!

சிறி.இந்திரகுமார்

ஆழ்தியானத்திலிருந்த ஒரு முனிவரின் தவம் திடீரென கலைந்துபோனது போன்ற ஒரு நிலைமையைத்தான் இந்தியா இப்போது அனுபவிக்கிறது.

ஏன் இந்த தவம்கலைந்த நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டது. உண்மையில் சொல்லப்போனால் இப்போதுள்ள நிலைமைகளின் பிரகாரம் இந்தியா ஆழ்தியானத்திலிருந்ததும் தவறு. தியானம் கலைந்து அந்தரிக்கும் இந்த நிலையும் தவறு.

அதாவது இந்து சமுத்திர பிராந்தியத்தில் சுனாமி சுழற்றிய சுழற்றல் இந்தோனேசியா, தாய்லாந்து, இலங்கை, பங்களாதேஷ், இந்தியா என எல்லா இடங்களிலும் பெருமளவு சேதத்தை ஏற்படுத்தினாலும் இந்த சேதங்களையெல்லாம் இந்த நாடுகளின் பொருளாதார ரீதியிலான இழப்புகளுக்கூடாக பார்க்கின்ற ஒரு போக்கே இப்போது காணப்படுகிறது.

ஆனால், இந்த சுனாமிப் பேரனர்த்த பிராந்தியத்தில் இந்த விவகாரத்தை கையாள முனைந்தபோதே இதனை ஒரு பிரமாண்டமான விவகாரமாகக் கையாண்டது.

அமெரிக்காவின் இந்த பிரமாண்டமான நடவடிக்கையின் முன் இந்தியா எதுவும் செய்ய முடியாத ஒரு நிலைமையிலேயே இருந்தது.

இந்தியாவால் இந்தியாவுக்குள் மட்டும் தனது தனித்துவத்தைப் பேணிக்கொண்டதே தவிர இந்தப் பிராந்தியத்தின் வல்லரசு என்ற வகையில் தனது தனித்துவத்தை இழந்துதான் போனது.

இந்தியாவுக்குள் ஏற்பட்ட இழப்புக்களுக்கு சர்வதேச உதவிகள் எவையும் தேவையில்லையெனக்கூறி தனது இழப்பை தானே நிவர்த்திசெய்துகொள்வதும் சுனாமி எச்சரிக்கை மையம் தொடர்பாக அதனை தானே நிறுவிக்கொள்ளும் என கூறிக்கொண்டதும் இந்தியாவுக்குள் இந்தியாவின் தனித்துவத்தை பேணமட்டுமே இந்த அணுகுமுறை போதுமானதாகவுள்ளது.

இந்தியா இப்பொழுது சந்தித் தனது படைகளை அனுப்பியதுபோன்று அதிலொரு தொகையை விரைவாக வெளியேற்றவும் செய்தது.

இதனூடாக இந்தியா ஒரு செய்தியை சொல்லியது. அதாவது இனி படைவிலக்லை மேற்கொள்ளலாம் என்பதே அமெரிக்காவுக்கான அந்தச் செய்தி. ஆனால், இதற்கு அமெரிக்காவும் பதிலளிப்பதுபோன்றே தனது படைகளில் ஒரு தொகுதியை விலக்கிக்கொண்டது.

இப்பொழுது இரண்டு நாடுகளினதும் எஞ்சிய தொகை படையினர் இலங்கையில் நிலை கொண்டுள்ளனர். இதில் முதலில் யார் இனி படை விலகலை மேற்கொள்ளப்போகிறார்கள் எனபதிலும் இந்தப் புதிய ஆட்டத்தின் போக்கின் ஒரு நிலைமை இருக்கிறது.

இதுவொரு பூனைக்கு யார் மணி கட்டுவது என்கிற ஒரு நிலையாகவே இருக்கும்.

இந்த நிலையில் இனியாவது இந்தியாவின் போக்கில் இலங்கை விவகாரத்தில் புதியதொரு போக்கு தோன்றுமா என்பது

ஆனால், இந்தியா தனது பழைய கசப்பான அனுபவத்தினூடாகவே தமிழர் விவகாரத்தை இப்போதும் பார்க்கிறது.

இந்த பழைய கசப்பான அனுபவம் என்பது ஈழத்தமிழர் விவகாரத்தை முற்று முழுதாக தனது நலனுக்கூடாக அணுகியதோடு மட்டுமல்லாது தனது நலனுக்காகப் பலியிடவும் துணிந்தபோதுதான் அந்த அனுபவம் ஏற்பட்டது.

எந்தவொரு நாடும் ஒரு விவகாரத்தை தனது நலனுக்கூடாகக் கையாள்வது வழமைதான். ஆனால் அதற்கும் ஒரு வரைமுறையும் அளவுகோலும் உண்டு. இந்தியா இந்த வரை



எம்.கே. நாராயணன்

மானது இந்தியாவைப் பொறுத்தமட்டில் பொருளாதார ரீதியிலான அழிவுகளுக்கு அப்பால் இந்தியா இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பிராந்திய வல்லரசு என்ற ரீதியில் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் இழப்பை வெறும்



ஜே.என்.டிக்ஷிற்

பொருளாதார ரீதியிலான இழப்புக்களோடு மட்டும் மட்டுப்படுத்திவிடமுடியாது.

இந்த இந்தியாவுக்கான இழப்பை அல்லது தாக்கத்தை இந்த பிராந்திய வல்லரசின் அரசியல் ஸ்தானத்தில் ஏற்படுத்தியுள்ள பெரியதொரு தாக்கத்திற் கூடாகவே பார்க்க வேண்டும்.

இப்பொழுது பெருமளவு இராஜதந்திரிகளும், அரசியல் நோக்கர்களும் இந்தியாவுக்கான இழப்பை இப்படித்தான் பார்க்கிறார்கள்.

இதற்குக் காரணம் இந்த விடயத்தில் இந்தியா சந்தித்துள்ள நவீன தோல்வி ஒன்றாகவே இதனைக் கருதுகிறார்கள்.

இந்தியா எவ்வளவுதான் அமைதியாக தன்னைக் காட்டிக்கொண்டாலும் அது உள்ளூர குமறிக்கொண்டிருக்கிறது.

ஒரு பிராந்திய வல்லரசு என்ற வகையில் அதன் கௌரவத்தில் கீறல் விழுந்து விட்டதாகவே அது கருதுகிறது.

இந்த சுனாமி விவகாரத்தை இந்தியா ஒரு சின்ன நடவடிக்கைமூலம் கையாண்டு விடும் நோக்கில் தனது நடவடிக்கைகளை முடுக்கிவிட்டபோது அமெரிக்காவோ, தான் எப்படி ஒரு பேரண்ட பேரரசாக தன்னைக்காட்டிக் கொள்கிறதோ அதேபோன்று இந்தப்

துள்ள இந்த நவீன இராஜதந்திரத்தோல்வியை எனி எவ்வாறு நிவர்த்திசெய்துகொள்ளப் போகிறது என்பது இந்தியாவுக்கு ஒரு பெரும் பிரச்சினையாகவே இருக்கும்.

இந்தியா இப்போது சந்தித்துள்ள இந்த இராஜதந்திர நெருக்கடியானது இந்தியாவின் காலம் கடந்த வெளியுறவுக் கொள்கையின் இயலாமையின் வெளிப்பாடு என்பதே மெய்.

இதிலும் இந்தியாவின் இராஜதந்திர நெருக்கடியை இலங்கைக்கூடாக பார்ப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

இலங்கை விவகாரத்தில் சிறிலங்கா அரசும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் சம அந்தஸ்துக் கொண்டவர்கள் என்பதுதான் இப்போதுள்ள களநிலைவரம்.

ஆனால், இந்தவிடயத்தில் இந்தியா இலங்கை அரசை நம்பி செயற்பட்டதே தவிர, புலிகள் இயக்கத்தை அது கவனத்தில் எடுக்கவில்லை. இன்னமும் எடுக்கவில்லை.

எண்பத்து ஏழுகளின் பின்னர் இந்தியா இலங்கை விவகாரத்தில் சந்தித்த சில கசப்பான அனுபவங்களின் அடிப்படையில் ஒரு பழிவாங்கும் மனோபாவத்துடனேயேதான் தனது அணுகுமுறையை மேற்கொள்கிறதே தவிர காலத்துக்குப் பொருந்திய புதிய மாற்றத்துக்கும் அணுகுமுறைக்கும் தன்னை தயார்படுத்திக்கொள்ளவில்லை.

இதன் விளைவுகளின் ஒரு படியை இப்போது இந்தியா அனுபவித்தாகிவிட்டது. இந்தியா அனுபவிக்கும் இந்த நிலைமை இந்தியாவின் கொள்கையின் போக்கில் நீண்டகாலத்துக்கு ஒரு தாக்கத்தை செலுத்தவல்லதாகவே நிச்சயம் இருக்கப் போகிறது.

இந்தியா சிறிலங்கா அரசை தனது நண்பனாகவே கருதிச்செயற்பட்டது. ஆனால், சிறிலங்கா அரசோ இந்தியா நண்பனல்ல என்பதை தெளிவாகவே உணர்த்திவிட்டது.

இதனை இந்தியாவுடன் ஆலோசிக்காமல் அமெரிக்கப்படைகள் இலங்கைக்கு வருகைதர அழைத்தமையைப் பார்க்கலாம்.

அமெரிக்கப்படைகள் இலங்கையில் நிலைகொண்டிருக்கும்வரை இந்தியாவுக்கு அடிவயிற்றில் நெருப்பைக்கட்டிக்கொண்டிருப்பது போன்றதொரு நிலைமைதான்.

இதனால்தான் இலங்கைக்கு முதலில் முக்கியமானதாக இருக்கிறது.

இத்தகையதொரு போக்கு இந்தியாவின் கொள்கையில் ஏற்படவேண்டுமென்ற கருத்துக்கள் இந்தியாவில் உள்ள சில புத்திஜீவிகள் மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் நேருபல்கலைக்கழக பேராசிரியரும் அரசியல் ஆய்வாளருமான சகாதேவன் அண்மையில் இதனை சுட்டிக் காட்டியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

ஆனால், இத்தகையதொரு மாற்றம் நிகழுமா என்பது இன்னும் ஒரு தெளிவில்லாத ஒரு நிலைமையிலேதான் இருக்கிறது.



சோனியா. மன்மோகன் சிங்

இலங்கை விவகாரத்தில் ஒரு தவறான போக்கை காட்டிய முக்கியமானவர்களில் ஒருவரான இந்தியாவின் பாதுகாப்புத்துறை ஆலோசகராக இருந்து சுனாமியின் பின் மாரடைப்பால் மரணமான ஜே.என்.டிக்ஷிற்றின் மறைவு இந்தியாவுக்கு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, ஒரு மாற்றத்திற்கான வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது.

ஜே.என்.டிக்ஷிற் இலங்கை விவகாரத்தில் கையாண்ட அணுகுமுறையாவும் தோல் வியினை சந்தித்ததை தன் கண்களாலேயே பார்த்துவிட்டுச் சென்றுவிட்டார்.

இந்த நிலையில் தமிழ் மக்களையும் புலிகள் இயக்கத்தையும் இந்தியா நண்பர்களாக கருதலாம்.

இந்தியாவுக்கு என்றும் எதிரானவர்களாக தமிழ் மக்களோ, புலிகளோ அல்லர் என்பதை பலமுறை தெளிவுபடுத்தியாகியும் விட்டாயிற்று.

முறைகளை தாண்டியபோதுதான் அந்த கசப்பான அனுபவத்தை அது சந்தித்தது. இதனை இந்தியா புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த நிலையில் இந்தியாவின் பாதுகாப்புத்துறை ஆலோசகராக இருந்து மறைந்துபோன டிக்ஷிற்றின் இடத்துக்கு எம்.கே. நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரின் முன்னால் இந்தியாவுக்கு வேண்டப்படாத ஒரு சூழ்நிலையே இந்து சமுத்திர பிராந்தியத்தில் காணப்படுகிறது.

இந்த நிலையில் எம்.கே. நாராயணன் பாதுகாப்புத்துறை ஆலோசகராக பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்புத்துறை சார் நடவடிக்கையாக இந்திய இலங்கை கரையோரப்பாதுகாப்பைப் பலப்படுத்த எழுநூற்று நாற்பத்து இரண்டுகோடி ரூபா செலவில் புதியதிட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளதை பார்க்கும் போது இந்தியாவின் கூடுதல் கவனம் இங்கு திசைமுகப்படுத்தப்பட்டுள்ளதை காட்டுகிறது.

டிக்ஷிற்றின் இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள இந்த எழுபது வயதுக்காரரான எம்.கே. நாராயணன் இந்தியாவின் மத்திய புலனாய்வு அமைப்பின் முதல்வராக இருந்ததுடன் மன்மோகன்சிங் அரசின் காலத்தில் பிரதமர் அலுவலகத்தில் சிறப்பு செயலாளராகவும் நியமிக்கப்பட்டவர். இவர் இந்தியாவின் உள்ளகப் பாதுகாப்பு விவகாரத்தில் மிகவும் தேர்ச்சிபெற்றவர் என்றும் பாதுகாப்புச் சமூகத்தின் அதிபுத்திசாலி உறுப்பினர்களில் ஒருவர் என்ற புகழைக்கொண்டவர் என்றும் தமிழின விரோதப் போக்கை கக்கிவரும் "இந்து" பத்திரிகை புகழ்கிறது.

அத்தோடு பிரதமர் அலுவலகத்தின் விசேட செயலராக நியமிக்கப்பட்ட போதே இவர் ஜம்முகாஷ்மீர், வடகிழக்கு கிளர்ச்சி நாகா அமைதிப்பேச்சுக்கள், விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பான விடயங்கள் என்பவை தொடர்பாகக் கையாண்டு வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இந்தியா புதிய மாற்றத்துக்கு தமிழ் மக்களுடனான நியாயபூர்வமான நட்புக்கும் உறவுக்கும் தன்னை தயார்ப்படுத்துமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

# நறுக்கென...

## "எல்லாமே புஷ்"



கடைசியில் அந்த ஹெலி ஹொப்டர்கள் குறித்த விவகாரம் அரசுக்கு எதிர்பாராத ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டது. நிவாரணப் பொருட்களோடு கொழும்பு வந்து சேர்ந்ததாகக் கூறப்படும் அந்த இரு ஹெலி ஹொப்டர்கள் குறித்த விவகாரத்தை விடுதலைப் புலிகளுடன் இணைந்து பெரும் பிரச்சினையை கிளப்பி அரசியல் ரீதியில் ஆதாயங்களைப்பெற ஜே.பி.பியினரும் அரசாங்கமும் எடுத்த பகிரத பிரசார முயற்சிகள் கடைசியில் பிசுபிசுத்துப்போய்விட்டதில் பேரினவாத சக்திகளும், பேரினவாத ஊடகங்களும் இடிந்து போயுள்ளன.

குறிப்பிட்ட சிறியரக ஹெலிகளுக்கான உதிரிப்பாகங்கள் சோதனைகளின்போது கண்டுபிடிக்கப்பட்டதும், விடுதலைப் புலிகளின்மேல் அதற்கான பழியைப் போடும் வியூகத்துடன், அதுகுறித்த விசாரணைகளை பூரணமாக மேற்கொள்ளாமலேயே செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள் 'சுனாமி' யை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் நிவாரணப்பொருட்கள் என்ற பெயரில் நவீன இராணுவ ஆயுத தளபாடங்ளை இறக்குமதி செய்வதாகவும் பொய்யான செய்திகளை வெளியிட்டு மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றன.

குறிப்பாக உபாலி நிறுவனப்பத்திரிகைகள் இவ்விடயத்தில் வழமைபோன்று பேரினவாதக் கண்ணோட்டத்துடன் செய்திகளை வெளியிட்டதுடன் விடுதலைப்புலிகள் போருக்கு தயாராகிறார்கள் என்ற கருத்துப்பட பிரசாரமும் செய்தனர்.

ஆனால், நிலவைப்பார்த்து நாய் குரைத்தால் நிலவு திரும்பக் குரைப்பதில்லையே! இதுவிடயத்தில் புலிகள் இந்த விஷமத்தனமான உளறல்களுக்கு பதில் எதனையும் கொடுக்காமல் அதனை கருத்திலெடுக்காது விட்டது. அரசுக்கும் அந்த புழுகு ஊடகங்களுக்கும் நெற்றியடியாகவே இருந்தது.

கடைசியில் எல்லாமே 'புஷ்' வாணமாகிப் போய்விட்டது.

கெட்டிக்காரன் புழுகு எட்டேநாள்தான் என்பார்கள்.

இப்போது எல்லாமே வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

இந்த ஒரு பெல் 200 ரக விமானங்களையும் நிவாரணப் பணிகளில் பயன்படுத்தவென அமெரிக்காவின் 'எவர்கிறீன்' 'நியூமடிக்கா' ஆகிய நிறுவனங்களே பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெறாமல் சட்டவிரோதமாகக் கொண்டுவந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்து விட்டது.

நல்லவேளை நோர்வே போன்று வேறு ஏதாவது நாட்டின் நிறுவனங்கள் இதைச் செய்திருந்தால் அது புலிகளுக்காகவே கொண்டுவரப்பட்டது என்று முடித்திருப்பார்கள். இது அமெரிக்க நிறுவனங்களாச்சே....!

-கப் சிப் என்று வாயை மூடிக்கொண்டுவிட்டார்கள்.

-ஆனாலும் அடுத்து என்ன புழுகை அவிழ்க்கலாம் என்றும் அவர்கள் வியூகமிடலாம்....அதுதானே தொழில்....!

## பாவம் இலங்கை இரண்டு பக்க இடி



இலங்கையின் இனப்பிரச்சினையை மட்டுமல்ல, ஏனைய எல்லாப்பிரச்சினைகளையும் பயன்படுத்தி இந்த நாட்டிற்குள் தத்தமது இராணுவ- அரசியல் இலக்குகளை எட்டவும், பிராந்தியத்தில் தமது மேலாதிக்க சக்தியை வலுப்படுத்தவும் பல்வேறு வகையில் ஊடுருவல்களை, சில வேளைகளில் வெளிப்படையாகவும் பல சமயங்களில் மறைமுகமாகவும் மூலோபாயங்களை வகுத்து மேற்கொண்டுவருகின்றன.

இதனை அந்த நாடுகள் மறுத்தாலும், உண்மைகளை மறக்கமுடியாதுதானே...!

இந்த ஊடுருவல்களுள் சர்வதேச வல்லரசும், பிராந்திய வல்லரசும் ஒருவரையொருவர் பார்த்து புன்முறுவல் பூத்து, கைகுலுக்கியபடியே சவால்விட்டுப் போட்டிபோடுவதுதான் முக்கியமான விடயம்.

மிக அண்மைக்காலத்தில் இந்த ஆதிக்க சக்திகளின் மேலாதிக்கப்போட்டி பல்வேறு சம்பவங்களில் மிக உத்வேகத்துடன் அதே சமயம் மௌன உறுதியுடன் நிகழ்ந்தே வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

சுனாமி நிவாரணப் பணிகளுக்கு உதவிகளை வழங்க முன்வந்த வேகத்திலிருந்து படைகளை அனுப்பியதுவரை அந்தப் போட்டி ஆரோக்கியமானதாகத் தெரியவேயில்லை.

நாம் சொல்வது இலங்கை மீதான இந்தியாவினதும், அமெரிக்காவினதும் அக்கறையினை பற்றித்தான்....

சோழியன் குடுமி சும்மா ஆடுமா? எல்லாம் காரணத்துடனான அக்கறை காரணத்துடனான உதவி, காரணத்துடனான கருணை, காரணத்துடனான செயற்பாடுகள்.... மாதிரிக்கு ஒன்று.....

இலங்கையின் அதியுயர் மலைச் சிகரமான 'பேதுறுதாலகால' மலையுச்சியில் கண்காணிப்பு நிலையம் ஒன்றை அமைக்க அமெரிக்கா அனுமதி கேட்டதாம்.

நிவாரணத்தை வழங்கி, படைகளை நிறுத்திவிட்டு, உச்சியில் கொடிநாட்ட நினைக்கும் உத்தி...!

ஆனால், அரசு மறுத்துவிட்டதாகக் கேள்வி. காரணம் இந்தியா அதற்கு விரும்பவில்லையாம்... இலங்கையரசு அதற்கு அனுமதி கொடுத்தால் அதனால் பாரதூரமான விளைவு ஏற்படும் என இந்தியா அறிவுறுத்தல் செய்ததையடுத்து, அயலகத்தைப் பகைக்கப்பயந்த அரசு பின்வாங்கியுள்ளது...

போற போக்கைப் பார்த்தால் நிவாரணத்தை வழங்கிவிட்டு நிர்வாகத்தையே தம்வசமாக்கிக் கொள்ளும் திட்டத்துடன்தான் வல்லாதிக்க சக்திகள் இலங்கையில் காலூன்றி வேரூன்ற முயல்கின்றன போலும்....

ஊர் இரண்டுபட்டால் அயலூரானுக்குக் கொண்டாட்டம் தானே!

பாவம் இலங்கைக்கு இரண்டுபக்கமும் இடி.

## கதிர்காமர் இருக்கிறார்..!



அவ்வப்போது லக்ஷ்மன் கதிர்காமரும் தனது இருப்பை உறுதிப்படுத்த ஏதேதோ அறிக்கைகளை விடுத்தவண்ணமே இருக்கிறார். அதனை எவரும் கவனிக்கிறார்களா, எதிர்பார்த்திருக்கிறார்களா என்றெல்லாம் அவர் அக்கறைகொள்வதே கிடையாது.

கடைசியாக அவரது அறிவிப்பு இலங்கை அரசின் அறிவிப்பாகவே வெளிவந்துள்ளது.

அதாவது சுனாமி ஆழிப்பேரலை ஏற்படுத்திய அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளுக்கென சர்வதேச சமூகம் வழங்கும் உதவிகளை பகிர்ந்தளிப்பதில் விடுதலைப்புலிகள் நேரடியாகப் பங்குபற்றமுடியாது என்று இலங்கையரசு முடிவெடுத்திருப்பதாக அவர் அறிவித்துள்ளார்.

அப்படியானால் கதிர்காமரே மறைமுகமாக பங்குபற்றலாம் என்றா சொல்கிறீர்கள். நிவாரண உதவிகளை பகிர்ந்தளிப்பதில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே எந்த விதமான உடன்படிக்கையும் இதுவரை ஏற்படவில்லை. இது தொடர்பாக இரு தரப்பும் எந்த வித முடிவையும் எடுக்கவில்லை என்றும் அதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன என்றாலும் கூறி குழப்பும் கதிர்காமரே இன்னமும் ஒரு முடிவுக்கு வராத நிலையில் அரசின் முடிவாக மேற்குறித்த அறிவிப்பை ஏன் வெளியிட்டீர்கள்?

எமக்கு அரசும், சனாதிபதியும், சிறப்பாக நீங்களும் எப்படி அவ்வப்போது ஆபத்தான- தெளிவற்ற கருத்துக்களை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உளறி கோமாளித்தனம் காட்டுவீர்கள் என்பது அனுபவபூர்வமாகத் தெரிந்த விடயமேயாகும்.

இதனை மட்டுமா சொன்னீர்கள்- 'தற்போது நாங்கள் எமது விருப்புக் வெறுப்பு கதைக்கப்பால் நின்று பணிபுரியவேண்டியுள்ளது. சில வேளைகளில் நாம் விரும்பாதவர்களுடன் இணைந்து பணிபுரிய வேண்டியும் ஏற்படலாம்' என்றுமல்லவா கூறி, உங்களுக்கான சர்வதேச அழுத்தத்தை பகிரங்கப்படுத்தியுள்ளீர்கள்... அட பாவமே!

நீங்கள் 'விரும்பாதவர்கள்' என்று கூறியிருப்பது விடுதலைப்புலிகளைத்தானே! அப்படியானால் விடுதலைப்புலிகளுடன் இணைந்து பணிபுரிய வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலை உங்களுக்கு இருக்கு என்றுதானே அர்த்தம்.

அது கிடக்கட்டும் அரசாங்கமல்லாத அமைப்புடன் வெளிநாட்டு அரசாங்கங்கள் எவ்வித தொடர்பையும் வைத்திருக்க விரும்பமாட்டாது என்று திருவாய் மலர்ந்தருளி உள்ளீர்களே... இன்றைக்கு வெளிநாடுகள் பலவும் வெளிப்படையாகவே விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்து சில வருடங்களாக நெருக்கமான தொடர்புகளை பெறுவனவும் ராஜரீக முறையிலும் வைத்துள்ளது. உங்களுக்குத் தெரியாதா? பாவம் நீங்கள் பதவியில் இருந்து கொண்டு படாதபாடு படுகிறீர்கள் பேசாமல் சட்டத்தரணியாகவே இருந்திருக்கலாமே!

## "அடி உதை உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார்"



"சுனாமி ஆழிப்பேரலை ஏற்படுத்திய பேரழிவு அனர்த்தம் காரணமாக ஏற்பட்டுள்ள மாறுபட்ட சூழ்நிலையானது, நாட்டில் நிலையான சமாதானத்தை உருவாக்கிக்கொள்வதற்கான ஒரு அரிய வாய்ப்பினை . உண்டுபண்ணிக் கொடுத்துள்ளது. இந்த அரிய வாய்ப்பினை அரசாங்கம் தவறவிட்டால் சமாதானத்திற்கான சந்தர்ப்பம் சமாதியாகிவிடும்"

இதனையார் கூறியிருக்கிறார் தெரியுமோ?

ஜப்பானின் யசூஷி அகாஷியோ, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளோ, நோர்வேயின் விதார் ஹெல்கேஸனோ அல்ல....! சிறிலங்காவின் பிரதமர் மகிந்தராஜபக்ஷவேதான்.

என்ன திடீரென்று மகிந்த ராஜபக்சவுக்கு பரிநிர்வாண ஞானம் ஏற்பட்டுவிட்டதே என்று யோசிக்கிறீர்களா? சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக யாழ் குடாநாட்டுக்கு வந்து வடமராட்சிப் பக்கம் போனபோது ஐயாவுக்கு அங்குள்ள மக்கள் கொடுத்த மறக்கவே முடியாத வரவேற்பின் அகோரம் தாங்காது அவரும் அவரைப்பின் தொடர்ந்து வந்த அந்த நவ நவீன சோஷலிச பேரினவாதி விமல் வீரவன்சவும் துண்டைக்காணோம் துணியைக்காணோம் என்று தென்பகுதிக்கு ஓடித்தப்பியபின்னர் ராஜபக்ச கடுமையாக யோசித்துத்தான் இருப்பார்.

இதேவேளை அதே நோக்கோடு வடபகுதிவந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்த வித அவமதிப்பும் நிகழாததும் மகிந்தருக்கு யோசனையைக் கொடுத்துமிருக்கலாம் தனியாகபோயிருந்தால்கூட இந்த அவமானம் ஏற்பட்டிருக்காது என்று முடிவெடுத்துள்ள மகிந்தர் சமாதான முயற்சிகளுடன் ஒத்திருந்து செயற்படாது முரண்பட்டால் சுனாமியை விட மோசமான அனர்த்தம் நிகழும் அபாயம் நாட்டிற்கு ஏற்படும் என்று முடிவெடுத்துவிட்டார் போலும்!

அதுசரி வாய்ப்பை தவறவிட்டால் அரசு சமாதான முயற்சிகளுக்கு சமாதி கட்டிவிடும் என மகிந்தர் யாருக்கு அல்லது எந்த அரசுக்கு சொல்கிறாராம்?

அவர்தானே அரசுத்தலைவர்- நாடாளுமன்றத்தலைவர்- அதாவது பிரதமர். அவரே இப்படி எச்சரிக்கை விடுகிறார் என்றால் அரசிலிருந்து தன்னை வேறுபடுத்திப் பார்க்கிறாரா? தான் பிரதமராக இருந்தாலும் அரசு தனது கட்டுப்பாட்டின்கீழ் இல்லை என்று ஒப்புக்கொள்கிறாரா?

அப்படியெனில் அவரது இந்த எச்சரிக்கை சனாதிபதிக்கா? ஜே.வி.பியினருக்கா? யார் இந்த வாய்ப்பினை தவறவிடுகிறார்கள் என மகிந்தர் எண்ணுகிறார்?

எதுவானாலும் அதற்குத் தான் பொறுப்பில்லை... என்று அவர் கூறுவாரேயானால் அவர் பிரதமராக- ஒரு பொம்மையாக- ஒரு வெறும்பதவியையே வகிக்கிறார் என்பதை இதன்மூலம் வெளிப்படுத்திவிட்டார் என்றே கூறவேண்டும்.

அரசு வேறு, பிரதமர் வேறு.... இது நல்ல நாடு...!?

**செங்குட்டுவன்**

# தமிழர் பண்பாட்டு வேர்களிலிருந்து கிளர்ந்தெழும் "அவல நீக்க ஆற்றுப்படை அரங்கு"

இயற்கையின் கொடுஞ்சீற்றத்தில் ஒருபெரும் கொடுந்துயரம் உலகையே சூழ்ந்துகொண்டது. அனர்த்தம் விளைவிக்கும் பேரலைகள் 'சுனாமி' என்ற பெயரோடு உலகை உலுப்பிவிட்டன. சுமாத்திரா மாண்டு போயிற்று,மாலைதீவு மறைந்து போயிற்று, இந்தியாவில் இடிவிழுந்தது என்றெல்லாம் ஊடகங்கள் சொல்லிக்கொண்டிருந்தன.

இலங்கையில் சுனாமி அடித்தபோது அது அரசியலோடும் கலந்து விளையாடியது.

தென்னிலங்கையிலும் தமிழீழத்திலும் சற்று வித்தியாசமான நேரஇடைவெளிகளில் சுனாமி வெடித்தது. ஆனால் இலங்கை அரசு பெரிய வித்தியாசமான அளவுகளில், முறைகளில் அனர்த்த நிவாரணப் பணிகளையும் அரசியல் சதுரங்கத்துக்குள் போட்டு உடைத்துக்கொண்டிருக்கின்றது. உடைக்கட்டும்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் அதிகமான அளவில் கடற்கோளில் பாதிக்கப்பட்டதாக மதிப்பீடுகள் கூறுகின்றன. ஆனாலும் தமிழீழம்



தன்னை சுதாகரித்துக்கொண்டு எழும்பத்தொடங்கிவிட்டது.

நீண்டதோர் ஆக்கிரமிப்புப் போர் வியூகத்துக்குள் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள தமக்கே உரியவழிமுறைகளில் போராட்டம் நடத்திய அனுபவமும் வலிமிகுந்த தேசியத் தலைமையும் வழிநடத்தலும் அறிவொளி மின்னும் பண்பாட்டுப் பின்புலமும் தமிழர் தாயகத்திற்கு உண்டு.

மக்களே சுனாமிக்கு முகம் கொடுத்தார்கள். அவர்களே அதனோடு போராடி மீண்டெழுந்து வந்தார்கள். மக்களே அமைப்பாகி நின்று துயர் பகிர்ந்தார்கள். அந்த நேரத்தில் விடுதலைப்புலிகளே உடன் இருந்து உதவும் துடிப்போடு களத்தில் நின்றார்கள். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை நெறிப்படுத்தி வருகிறார்கள்.

உளவளத்துணை, counseling என்ற சொற்றொடர்கள் உலகம் முழுவதும் இன்று பேசப்படுகின்றன. அனர்த்தம் நிகழ்ந்து 10 நாட்களின் பின்னர்தான் சிறிலங்கா சனாதிபதி அம்மையார் "we need trauma counselors" என்று ஊடகங்களில் அழைப்பு விடுத்துக்கொண்டிருந்தார்.

இவை எல்லாம்பற்றி அதிகமாக அலட்டிக்கொண்டிருக்காமலே தமிழீழம் தன்பண்பாட்டுக்குள் இருந்து ஒருமுறை வழியைக்கண்டு பிடித்திருந்தது.

'ஆற்றுப்படுத்தல்' என்ற பெயர் தமிழ் பேசுவோர் நாவுகளில் இன்று அதிகமாக உச்சரிக்கப்படுகின்றன. இது தமிழர்களுக்கு இரண்டாயிரம் ஆண்டு பழமையான அரிய பெயர். இதன் வேரடியிலிருந்துதான் "அவல நீக்க ஆற்றுப்படை அரங்கு" என்ற பெயர் கிளர்ந்தெழுந்தது. அரங்க செயற்பாட்டுக் குழு இந்தப்பெயரில் ஒரு பாரிய வேலைத்திட்டத்தைத் தொடங்கியபோது அந்தப்பெயர் தெரிவில் எமது தேசத்தின் முதுநிலைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் துணைநின்றார்.

அரங்க செயற்பாட்டுக்குழு தன் அரங்க முறைமையை வேறெங்கும் இரவல் வாங்கிப் பிரயோகிக்கும் அமைப்பு அல்ல. அது தமிழர் பண்பாட்டுக்குள்ளிருந்து புதுக்கி எடுத்த முறை வழி. தேசத்தின் விடுதலைப் போருக்குள் மக்களோடு வாழ்ந்து செதுக்கி எடுத்த ஒரு அரங்கப் பண்பாடு.

தமிழ் பண்பாட்டிலே சங்க காலத்தில் வாழ்ந்த மக்களிடம் ஆற்றுப்படுத்தல் முறைவழி இருந்திருக்கிறது. பாணரும் பொருநரும் விறலியும் பிறரும்பொருள் இன்றித் துன்புற்றிருந்தபோது ஆற்றுப்படுத்தப் பட்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் ' சாவீட்டுச் சடங்கு' நுணுகிப்பார்த்தால் ஒரு அருமையான ' ஆற்றுப்படுத்தும் ' முறை வழியை தன்னுள்ளே கொண்டிருக்கிறது.

சாவு அறிவித்தல்.

உறவுகள் துடிப்புடன் ஓடி வருதல். கட்டித் தழுவி தொட்டழைந்து அழுதல். படலையிலிருந்து பறை மேளமடித்து உறவுகளின் வரவை மறுபடிமறுபடி அறிவித்துக்கொண்டிருத்தல். மறுபடி மறுபடி அழுது தீர்க்க இடங்கொடுத்தல். கூடி சுடுகாடு செல்லல், தகனம் செய்து மீண்டு வருதல், காடாற்றுதல்.

எட்டுச் செலவு செய்தல், சாப்பிடுவித்தல்.

அந்தியேட்டிவரை உறவுகள் கூடியிருந்து கதையாடுதல்.

இவற்றினூடாக இழந்த துயர் ஆறி மீள் வாழ்வுக்கு வழிகாண துணை நிற்றல்.

என்று அந்த முறைவழி நீண்டு செல்லும்.

இந்தப் பண்பாட்டு அனுபவங்களில் இருந்தே 'அவல நீக்க ஆற்றுப்படை அரங்கு' தோற்றம் பெற்றது. அதை நிகழ்த்தும் ஆற்றுப் படையாளிகள் சிறுவர் முதல் பெரியவர் வரை நிலையறிந்து தேவையறிந்து ஆற்றுப்படுத்தும் அரங்க செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். அதிலிருந்து கிளம்பிய அனுபவங்களினூடு இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

" எத்தின தூரம் போய் எத்தின கிலோ மீனோட வந்தாலும் கரையில வந்த பிறகு மனிசி கோப்பையளில கொண்டுவந்து தாற ஒரு தேத்தண்ணியிலதான் எங்கட உயிர்ப்பு தெரியிறது. உயிர் இருக்கெண்டு தெரியிறது. அப்பாடா எண்டு ஒரு பெருமூச்சு வரும்."

இந்தக்கதைபிறந்த கதைக்கு முன் ஒரு வரலாறு புரட்டிப் பார்க்கப்படவேண்டியது. முல்லைக் கடல் மடியில் வாழ்ந்து சுனாமியுடன் போராடி வென்றெழுந்து மீண்டுவந்த 55 வயது அனுபவத்தின் கதையிது. கடல் வாழ்க்கையும் அதன் கட்டிறுக்கமான உறவின் புனிதமும் இந்தக் கதைக்குள் உண்டு.

தமிழர் சரித்திரத்தில் கடல் வாழ்க்கை பற்றிய பல கதைகள் உண்டு. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை அதற்கான ஆவணங்களாக உள்ளன.

அகவாழ்வின் ஒழுக்கங்கள் பற்றி சொல்லிய சங்கப் புலவர்கள் கடல் நிலத்திற்கு இரங்கல் என்றொரு ஒழுக்கம் விசேடமாகச் சொல்லி வைத்தார்கள்.

அது என்ன இரங்கல்? ஏன் இரங்கவேண்டும்? யார் இரங்கினார்கள்?

கணவன், தகப்பன், அண்ணன், தம்பி, காதலன் இவர்கள் காரிருள் சூழ்ந்தவேளையிலே கடலுக்குப் போவார்கள். பறி நிறைய மீன் கொண்டு திரும்பி வருவதற்குள் எதுவும் நடந்து விடலாம். மழை வரலாம். புயல் வரலாம். ஆபத்து அடித்துச் சென்று விடலாம். இது தெரியும் அவர்களுக்கு. அதனால் வீட்டிலிருக்கும் மனைவி, தாய், தமக்கை, தங்கை, காதலி கடல் சென்ற தன் உறவு திரும்பி வரும்வரை கடல்வழி பார்த்து இரங்கியபடியே இருப்பார்கள்.

அகவாழ்க்கை என்று சொல்லப்படுகிற அன்பு வாழ்க்கையை கொண்டு நடத்த பொருள் தேடும் புறவாழ்க்கையில் ஈடுபடும் போது வரும் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொண்ட அனுபவங்கள் இவர்களுக்கு உண்டு. "கடற்கோள்" என்ற சொற்றொடர் தமிழிலே உண்டு.

**செ.விந்தன்**

தமிழீழத்தின் கடல் வாழ்வு பற்றி அண்மைக்காலத்தில் நிறையப் படைப்புக்கள் உண்டு.

*''பாயிறக்கிக் கரையினிலே பாதம் படும் வரையினிலே பார்த்தவிழி பூத்திருப்பாள் மனைவி என்னைப்பார்த்த பின்பே சோற்றை உண்பாள் துணைவி''*

இது தமிழீழத் தேசிய விடுதலைப் பாட்டு.

"பேரும் இன்றி ஊரும் இன்றி பெற்றவளின் முத்தமின்றி ஈர உடல் கரையொதுங்கிய'' கதைகள் நிறைய உண்டு.

தமிழ் தேசியத்தை காவு கொள்ள சிங்களாமிகளும் இந்தியாமிகளும் வந்தவேளையில் எமது தேசிய வாழ்வின் ஆன்மாவின் மூச்சை சுமந்தபடி கடலோடிக் காவியம் படைத்த கடற்கரும்புலிகளின் கதைகளை நிறையச் சுமந்த கடல் எங்களது.

எல்லாக் கதைகளின் மேலாயும் எழுந்து "சுனாமி" வந்து பல்லாயிரம் உயிர்களைப் பறித்துச் சென்றபோது போராடி மீண்டு வென்று வந்த இலட்சக்கணக்கான மக்கள் இழந்துபோன துயரில் நொந்துபோயிருப்பது உண்மையே. நெஞ்சு உறைந்துபோயிற்று அந்த நோவில்.

வாயடைத்துப்போயிற்று அந்தத் திகைப்பில்.

கல்லாய் அமத்தி முள்ளாய் குத்தி கருக்காய் அறுக்கிறது இழந்த துயர் இதயத்தை.

ஒன்றும் செய்யமுடியாது போனோமே என்று கொதிக்கும் நெஞ்சை ஆற்றவேண்டியிருந்தது.

அவர்கள் வென்று வந்த வீரத்தை அவர்களுக்கே மீள நினைவு படுத்த வேண்டியிருந்தது. அந்த நினைவுகளில் தடம் பதித்து மெல்ல மெல்ல தமது வாழ்வை மீளக்கட்டியமைக்கும் வழிகளைக் கண்டு பிடிக்க அவர்களை ஆற்றுப்படுத்தவேண்டியிருந்தது.



ஆற்றுப்படுத்தல் எங்களிற்குப் புதியதல்ல 2000 வருடம் அனுபவமான சொற்றொடர் அது. சங்க காலத்து ஆற்றுப்படைப் பிரபந்தங்கள் இதற்கு நல்ல ஆதாரம்.பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, விறலியாற்றுப்படை, பொருநராற்றுப்படை என்று ஆற்றுப்படை இலக்கியங்களின் பட்டியல் நீண்டு செல்லும்.

ஆற்றுதல் என்பதற்கு வலியடைதல், உய்தல், செய்தல், தேடுதல், உதவுதல், நடத்துதல், கூட்டுதல், பொறுத்தல், சுமத்தல் என்றெல்லாம் அருமையான அர்த்த பரிமாணங்கள் தமிழில் உண்டு.

"ஒருவீரொரு வீர்க்காற்றுதிர்-(புறம் 58) என்கிறது சங்கச் செய்யுள்.

ஆறுதல், வழிப்படுதல் என்று இரண்டு பெரிய அலுவல்கள் இன்று நடக்கவேண்டியது. காலம் கற்பித்த அனுபவமும் உழைப்பும் அரங்கின் சமூகத் தேவையை உந்தித்தள்ள "அரங்கசெயற்பாட்டுக் குழு" கடந்த காலங்களில் போர் அனர்த்தங்களுக்குள்ளான மக்களை ஆறுதல் பெறச் செய்யவும் தமிழ் தேசியம்நோக்கி வழிப்படுத்தி பொங்கு தமிழர்களாய் எழுச்சிகொள்ளச்செய்யவும் அரங்கை ஆயுதமாகக்கொண்டு செயற்பட்டது.

கடந்த டிசெம்பர் 29ஆம் திகதி வடமராட்சியில் நடைபெறவிருந்த 'வீரசுதந்திர முழக்கம்' என்ற தமிழ் தேசிய எழுச்சிக்கான 'எழுச்சி ஊட்டும் படையணியை' பயிற்றுவிக்க அரங்க செயற்பாட்டுக்குழு டிசெம்பர் 26ஆம் திகதி வடமராட்சியில் நின்றிருந்தது. ''கடல்வருது கடல வருது''என்ற அதிர்ச்சி தரும் நம்ப முடியாத கதைகேட்டு கடலைநோக்கி விரைந்தனர் அரங்காளிகள்.

சக்கோட்டை முனையிலிருந்து அலறியபடியே ஓடிவந்த மக்களை நேர்கொண்டபோது, அவர்களை அன்பாக நோக்கி அருகில் சென்று அரவணைத்தபோது, அவர்கள் கதறிக் கண்ணீர் பெருக்கிகதைசொன்ன வேளையில்: அவர்களை ஆற்றுப் படுத்தவேண்டிய பாரியதேவை உணரப்பட்டது.

'பாவம்' என்று அவர்களைப் பார்த்து கரைந்து நிற்பதைவிடவும் 'போராடிவென்றுவந்தவை' என்ற நம்பிக்கை நோக்கி நகர்த்தவேண்டிய தேவை உணரப்பட்டது. "ஆற்றுப்



படுத்தல்''அரங்கச்செயற்பாட்டுக் குழுவுக்கு புதியது அல்ல. ஆனால் அரங்கு எப்படி ஆற்றுப்படுத்தும் என்ற வித்தையும் நுட்பமும் புரிந்துகொள்வது பலருக்கு சிரமமாக இருக்கலாம்.

ஆனால், சிறிலங்கா அரசு குறைத் தூக்கத்தில் இருந்தபோது அனர்த்த நிவாரணப்பணிகளை முன்னெடுப்பதில் தம்மை அர்ப்பணித்து நெறிப்படுத்திய தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல் தலைமை 'ஆற்றுப்படுத்தும் வேலை' நோக்கி "அரங்கசெயற்பாட்டுக்குழுவை" உந்தித் தள்ளி உற்சாகம் தந்தது. அந்த உற்சாகத்தோடும் தான் "அவல நீக்க ஆற்றுப் படையரங்கு"
என்ற பெயருடன் இந்த

(22 ஆம்பக்கம் பார்க்க...)

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 04 . 02 . 2005

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## விரைந்து செய்யவேண்டும்...!

சுனாமிப் பேரழிவு புனரமைப்புக்கு 1.5 பில்லியன் அமெரிக்கடொலர் நிதி உதவி இலங்கைக்கு தேவையென உலக நிதிநிறுவனங்களான உலகவங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி, ஜப்பானிய வங்கி என்பன தெரிவித்துள்ளன.

இதில் வடக்கு - கிழக்கு பிரதேசத்திற்கே அறுபத்துநான்குவீத நிதி உதவி தேவையென இந்த நிதி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிதி நிறுவனங்களின் அறிவிப்பானது சுனாமிப் பேரலையினால் இலங்கையில் ஏற்பட்ட பேரழிவில் வடக்கு-கிழக்கு பிரதேசம் கடுமையாக பாதிக்கப் பட்டதை இந்த அமைப்புக்கள் உணர்ந்துகொண்டுள்ளதுடன், பெருமளவு உதவி எங்கு தேவையாகவுள்ளது என்பதை சரியாகவே இனங்கண்டுள்ளதை காட்டுகிறது.

ஆனால், இந்த நிதி உதவியானது எவ்வளவு தூரம் விரைவாகவும், அவசரமாகவும் இந்த மக்களை சென்றடையவேண்டிய தேவையுள்ளது என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

இரண்டு பெரும் பேரழிவுகளை சந்தித்தவர்கள் வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள். இவர்களே சுனாமியின் உண்மையான பயனாளிகளாக இருக்கமுடியும்.

இந்த நிலையில் இந் நிதி நிறுவனங்களின் அறிக்கையானது முக்கியத்துவம் பெறுகிறது.

இதேவேளை இவ்வளவு தொகை இந்த வடக்கு-கிழக்கு மக்களுக்கு உரியதொரு கட்டமைப்புக் கூடாக சென்றடையவேண்டும் என்றதேவையை புறந் தள்ளிவிட முடியாது.

வட-கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசின் மீது நம்பிக்கையற்றவர்களாகவே வாழ்ந்துவருகிறார்கள்.

இத்தகையதொரு அரசிடமிருந்து இந்த மக்களுக்கான உதவிகள் உரியமுறையில் சென்றடையும் என்பது சாத்தியமேயில்லை.

ஆகவே இந்த நிதி உதவிகள் உரிய பொதுக் கட்டமைப்புக்கூடாக வழங்கப்படவேண்டியதன் தேவையையும் உணர்த்துவதாகவே கருதவேண்டும்.

அத்தகையதொரு நிலையில்தான் இந்த மக்களுக்கான உதவிகள் உரியமுறையில் சென்றடைய முடியும்.

இதற்கு அரசு எவ்வளவு தூரம் சாதகமாக நடந்துகொள்ளப்போகிறது என்பது தெளிவில்லை.

சுனாமியின் பின்னான நாட்களின் பின்னர் பொதுக்கட்டமைப்பு ஒன்று தொடர்பாக புலிகள் இயக்கம் பிரஸ்தாபித்து வருவதுடன், சமாதானச் செயலகங்கள் ஊடாக இதுதொடர்பான பேச்சுக்களை நடாத்தியும் வருகின்றனர்.

ஆனால், அரசு விரைந்து ஒரு முடிவுக்கு வருவதாக தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவியானது உரியநேரத்தில், உரியகாலத்தில் சரியானவகையில் கிடைப்பதே அந்த மக்களுக்கு உரிய பயனை விளைவிக்கும்.

ஏனெனில் இந்த மக்கள் தமது உயிர்களை மட்டுமன்றி, தங்களது அடிப்படை கட்டுமானங்கள் யாவற்றையும் இழந்து தவிக்கின்றனர்.

இத்தகையதொரு நிலையில் மனரீதியாக சோர்ந்து போயிருக்கும் இம் மக்களை விரைவான உதவிகள் மூலமாகவே கொஞ்சமாவது அவர்களை மீள் நிலைக்குக்கொண்டுவரமுடியும்.

காலம் தாழ்த்துவது என்பது மேலும், மேலும் இம் மக்களின் நம்பிக்கையை சிதைப்பதாக அமைவதோடு, மீளவும் அவர்களை பழைய நிலைக்குக் கொண்டுவரமுடியாத ஒரு நிலையையே தோற்றுவிக்கும்.

அந்தவகையில் இந்த மக்களுக்கான விரைவான உதவிகள் தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

# அறிவு பூர்வமான சிந்தனை எம்மத்தியில் வளரவேண்டும்

பாட்டு வாய்த்தால் கிழவியும் பாடுவாள் என்றொரு பழமொழி உண்டு. இந்தப் பழமொழிக்கு ஏற்ற சூழ்நிலை இன்று எம் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்று சந்தேகிக்கும்வகையில் சில சம்பவங்கள் நடக்கின்றன. அதாவது, கடல் அலைகளால் அழிவுகளைச்சந்தித்த மக்களை ஆற்றுப்படுத்தி அவர்களின் மன உணர்வைச் சீர்படுத்தி நம்பிக்கையைக் கட்டிவளர்க்கும்வகையில் பல்வேறு செயல்திட்டங்கள் நடக்கின்றன. ஆயினும், சூழ்நிலையை சாதகமாக்கி ஆரூடங்களையும் எதிர்வு கூறல்களையும் சிலர் கூறி வருகின்றனர். எவ்வித ஆதாரமும் அற்ற இவ்வகையான எதிர்வு கூறல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் குழப்பத்துக்குள்ளாகி வருகின்றனர். இவ்வாறான விடயங்கள் மக்கள்மத்தியில் காட்டுத்தீயாகப்பரவி பரபரப்பை ஏற்படுத்துகின்றன. செவிவழியாக வதந்தி வடிவில் பரவும் இந்த வகையான விடயங்கள் இறுதியில் பல மாற்றங்களுக்கு உள்ளாகி அதிர்ச்சியூட்டும் வகையில் அனைத்துத் தரப்பினரையும் குழப்பிவிடுகின்றன.



மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து இயற்கையின் சீற்றத்தால் அழிவுகளுக்கு உள்ளாகி வந்துள்ளது. இயற்கை இன்னல்கள் ஏற்படும்போது அவற்றிலிருந்து எவ்வாறு தப்பித்துக்கொள்வது என்ற மாற்றுவழிகளை காலப்போக்கில் மனிதன் அறிந்துகொண்டான். மனித வாழ்வுக்கு அச்சுறுத்தலான விடயங்களை- இயற்கையின் தாக்கத்தை- எதிர்த்துவாழும் வழிமுறைகளை கண்டு கொண்டான். இதுவே பூமியில் மனித இனம் நிலைத்து வாழ்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. அந்த வகையில் அழிவுகளிலிருந்தும் இழப்புக்களிலிருந்தும் மீண்டெழுந்து மனிதன் தனது இருப்பை நிலைநாட்டிக் கொள்கிறான். துன்பங்களைக் கண்டு துவண்டுபோகாமல் நிமிர்ந்து நிற்கும் சமூகமே முன்னேற்றகரமான மக்கள் கூட்டமாக நிலைத்துவாழ முடியும்.

கடவுள் நம்பிக்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் கடவுளின் பெயரால் சில போலி ஆசாமிகள் மக்கள் மத்தியில் மூட நம்பிக்கைகளை விதைத்து பணம் சம்பாதித்து வருகிறார்கள். இதனுடைய தாக்கம் வழித்தோன்றல்களாக எமது இளம் சந்ததிக்கும் பரவுவது விரும்பத்தக்கவிடயமல்ல.

நாம் எமது இளைய தலைமுறையினரை அறிவுரீதியாகச் சிந்திக்கும் நபர்களாக உருவாக்கவேண்டும். மூடநம்பிக்கைகள், சம்பிரதாயங்கள் பற்றி தெளிவாக அறிந்துகொள்ளாமல் சிறுவர்களையும் அதையே பின்பற்றுமாறு வற்புறுத்தி அவர்களையும் ஈடுபடுத்தக் கூடாது. பேய்பிசாசுகள், தெய்வக் குற்றம்போன்ற விடயங்களை சிறுவர்களிடத்திலும் எடுத்துச் சொல்லக்கூடாது. அதாவது எம்மத்தியில் இவ்வாறான பழக்கவழக்கங்கள் எவ்வாறு ஏற்பட்டன என்பதை உணர்ந்து அதிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கவேண்டும். இதைச் செய்யக்கூடாது. அதைச் செய்யவேண்டாம் என எதுவித காரணங்களும் தெரியாமல் செய்யும் ஒவ்வொரு செயலையும் தர்க்க ரீதியாக- விஞ்ஞானபூர்வமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதன்மூலம் எம்மத்தியிலுள்ள தவறான கொள்கைகள், பழக்கவழக்கங்களை களைந்தெறிவதுடன் எதையும் அறிவுபூர்வமாக சிந்திக்கும் மனிதராக மாறமுடியும்.

முன்னறிவிப்பு அல்லது ஆரூடம் கூறும் ஒருவர் அது பற்றி ஊடகங்களில் வெளிப்படையாக அறிவிக்கவேண்டும். அப்போது அவர் அதற்கு அதாவது தனது கண்டுபிடிப்பிற்கு சரியான விளக்கத்தையும் கூறியாக வேண்டும். இதன்மூலமாக மக்கள் அதன் நம்பகத் தன்மையை தீர்மானித்துக் கொள்வார்கள். அதேநேரம், குறிப்பிட்ட அவ்விடயம் பற்றி வல்லுனர்களும் அறிஞர்களும் அதன் உண்மைத்தன்மையை ஆராய்ந்து கருத்துக் கூறுவார்கள். பொறுப்புவாய்ந்த நபர்களுக்கு பதில் சொல்லவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். இந்த வகையில், நம் மத்தியில் உள்ள போலி அறிஞர்கள் (ஆசாமிகள்) வெகுசன ஊடகங்களில் தலை காட்டுவதும் இல்லை. சிக்கல்களில் மாட்டிக் கொள்வதுமில்லை. மக்களை ஏமாற்றும் வேலையை மட்டும் கச்சிதமாகச் செய்து வருகிறார்கள் என்பதை இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

போலி ஆசாமிகள், ஆரூடம் கூறுவோர், கடவுள் கூறியதாகக் கூறுவோர் ஆகியோர் பற்றி விழிப்பாக இருக்கவேண்டும். மக்களைக் குழப்பும் சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் இயல்பான வாழ்வியக்கத்துக்கு இடையூறு விளைவிப்பவர்களாகக் கருதி இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய செய்தியொன்றை சரியான ஆதாரத்துடன் ஒருவர் கூறுவாராயின் அதனை மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். இதன்மூலம் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றும் வாய்ப்புக்கூட ஏற்படலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் ஏமாளிகளாக இருக்கக் கூடாது. அறிவுரீதியான கேள்விகளைக் கேட்கப் பழகிக்கொள்ளவேண்டும். அவர் சொன்னார், இவர் சொன்னார், மக்கள் எல்லோரும் கதைக்கிறார்கள் என்றவகையில் இல்லாமல் எதிர்கால அழிவுகள், இன்னல்கள் பற்றி கூறும் நபரை இனங்கண்டு அவரைச் சரியானமுறையில் அணுகி அவ்விடயத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

எனவே, மக்கள் இல்லாமல் தற்காலத்துக்கு ஏற்ற அறிவு ஜீவிகளாக இருக்கவேண்டும். கடவுளின் பெயரால் மக்களை குழப்புவோரை இனங்கண்டு ஒதுக்கவேண்டும். இதனூடாக வதந்திகளையும், வீணான குழப்பங்களையும் தவிர்க்க முடியும்.

------- சன்

# சிறிலங்காவில் அரசியல் வியாபாரமாகும் கரையோர அமைவிடம்



சிறிலங்காவிலும் தமிழர் தாயகத்திலும் சுனாமி பேரலைகளினால் ஏற்பட்ட அழிவுகளில் இருந்து மீள்வதற்கான வேலைத்திட்டங்கள் வகுக்கப்படுவதும் நடைமுறைப்படுத்தப்படுவதுமாக ஏற்பாடுகள் தீவிரமடையத்தொடங்கியுள்ளன.

முதற்கட்ட மீட்புப்பணிகள் ஏறக்குறைய முடிந்துவிட்ட சூழலில் அடுத்த கட்டமான இந்நடவடிக்கைகள் சூடுபிடிக்கத் தொடங்கும் தருணத்தில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் எழத் தொடங்கியுள்ளன. சிறிலங்காவில் கரையோர இட அமைவு பற்றி பெரும் போரே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

கடற்கரையோரத்தில் இருந்து எவ்வளவு தூரத்துக்கு அப்பால் கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவது என்ற அதிகார மட்டத்திலான மோதல்கள் ஆளும் கட்சிக்குள்ளே இடம்பெறுகின்றன. பிரதமர் மற்றும் தீர்மானம் எடுக்கவல்ல தரப்பினர் நூறு மீற்றர் தூரத்துக்குள் எந்தக் கட்டடங்களும் அமைக்கப்படக்கூடாது என்பதை தீர்மானமாக அறிவித்துள்ளனர்.

இதனை சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவும் வேறுசில அரசியல்வாதிகளும் தீவிரமாக எதிர்த்துவருகின்றனர். மக்களின் உயிர், உடமை பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டபோதிலும், அவர்கள் தத்தமது அரசியல் நலன்களுக்காகவே இதனை எதிர்த்து வருகின்றார்கள்.

இந்த ஆண்டில் கூடுதலான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என்று கூறும் அனுரா பண்டாரநாயக்க அதை இந்த விதிமுறை நாசமாக்கிவிடும் என்றும் அதனால் இலங்கைக்கு கிடைக்கக்கூடிய வருமானமும் இழக்கப்படும் என்றும் சொல்கின்றார். அதேவேளை அகதிகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகராலயமும் இதனை மறுபரிசீலனை செய்யுமாறு அரசைக் கேட்டிருக்கின்றது.

பாதுகாப்பு என்ற பெயரால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை இன்னும் பலரை ஏதிலிகளாக்கி நிர்க்கதி நிலைக்குள் தள்ளும் என்று அது தெரிவித்திருக்கின்றது. இப்போதைக்கு ஒரு சுனாமி அலை இலங்கைத்தீவைத் தாக்கும் என்பதற்கான திடமான கணிப்புக்களோ தாக்காது என்பதற்கான நம்பிக்கையோ இல்லாத நிலையில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அவரவர் தத்தமது நோக்கில் விமர்சித்து வருகின்றனர். அதற்கு மனிதாபிமான மற்றும் பொருளாதார காரணங்களும் காட்டப்படுகின்றன. ஆனால், மிகப்பெரும் உயிரழிவைச் சந்தித்தபகுதி மக்களிடம் இருந்துதான் இந்த எதிர்ப்புக்கள் வருகின்றனவா என்பது தெளிவாக இல்லை. உண்மையில் அத்தகைய தரப்பை பிரதிநிதித்துவம் செய்யும் தரப்பிடம் இருந்து எதிர்ப்புக்கள் வரவில்லை. ஆயினும், சாத்தியமான வழிமுறைகளில் கூடியளவுக்கு அவரவரின் பழைய இடங்களுக்கே திரும்பிச்செல்லக்கூடியதான முறையையே கையாளவேணடும் என்று அவர்கள் விரும்புகின்றார்கள்.

இயற்கைச் சூழலுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்பு, அழிவை மிகப் பெரிதாக்கி இருக்கின்றது. அதனை ஈடுசெய்யும் வழிவகைகளைக் கையாண்டு கூடுதல் நிலப்பரப்பை இழக்காது பாதுகாக்கும் செயற்றிட்டங்களை வகுக்கவேண்டும் என்று பேசப்படுகின்றது.

ஆனால், அது தொடர்பாக முன் வைக்கப்பட்டிருக்கும் சிறிலங்கா அரசின் கரையோரப் பாதுகாப்புக் கருதிய கரையோர நிலங்களை வெறுமையாக விடும் திட்டம்கூட பாரபட்சமானதாகவே உள்ளது. கிழக்கு மற்றும் வடக்கின் பெரும்பாலான கரையோரப் பகுதிகளில் இருநூறு மீற்றர் தூரம் வரை குடியிருக்கவோ கட்டடங்கள் அமைக்கவோ அனுமதிப்பதில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தென்னிலங்கைப் பகுதியில் அதிகம் நிலத்தை கைவிட விரும்பாத அரசு அதனை நவீன உத்திகளைப் பயன்படுத்தி பாதுகாப்பு முறைகளை கையாளவுள்ளது என்றும் தமிழர் தாயகப் பகுதிகளை அது விடயத்தில் மாற்றாந்தாய் முறையில் அணுகும் நோக்கோடு கூடுதல் நிலப்பகுதியை கைவிடச்செய்கின்றது என்றும் விமர்சனங்கள் உண்டு.

அதை விடவும் நில அபகரிப்பிற்கான உள்நோக்கமும் அதற்குள் உண்டு. ஏற்கனவே பேரலைகள் தாக்கி இடம்பெயர்ந்த பகுதிகளில் சிறிலங்கா படையினர் புதிதாக படைநிலைகளை அமைப்பதும் மக்களின் எஞ்சிய உடமைகளை அதற்கு பயன்படுத்துவதும் செய்திகளாக வெளிவந்துள்ளன.

ஏற்கனவே தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புப் படைகளாக நிலைகொண்டுள்ள சிறிலங்கா படையினர் யாழ்ப்பாணத்தில் மட்டும் முப்பது வீதத்துக்கும் அதிகமான நிலப்பரப்பை உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி கையகப்படுத்தி வைத்துள்ளனர். அதுபோன்று வவுனியா, மன்னார், திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் அதிகளவான மக்கள் குடியிருப்புக்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

அதனால் பல இலட்சம் மக்கள் ஏதிலிகளாக தமது பொருளாதார அடிப்படைகளையே இழந்துள்ளனர். ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களாகத் தொடரும் இந்த துன்பியல் வாழ்வும் அதற்கு எதிரான குரல்களும் சிறிலங்காவினாலும் உலகத்தினாலும் கண்டுகொள்ளப்படாது உள்ளன.

சமாதானத்துக்கான இக்காலத்திலும் அதில் எந்த விட்டுக்கொடுப்புக்களுக்கும் இடமின்றி அழுங்குப் பிடியாக சிறிலங்காப் படைகள இருக்கின்றன. அதற்கு எதிராக எந்தக் குரலும் எழுப்பத்தெரியாத, கண்டுகொள்ளாத சக்திகள் பெரும்பான்மையினரின் பொருளாதார நலன்களை வாழ்வுரிமையை மையப்படுத்தி இப்போது குரல் எழுப்புவது அப்பட்டமான அரசியல் ஆதாயம் தேடும் நடவடிக்கையே ஆகும்.

இந்த இடத்தில் விடுதலைப் புலிகளின் மீள்குடியேற்றத் திட்டம் யதார்த்த நிலைகளைப் புரிந்து கொண்ட தமிழர் தாயகத்தின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டதாக இருப்பதை வேறு கோணத்தில் புரிந்து கொள்ளவேண்டும். சிறிலங்கா அரசிடம் இருந்து போதிய உதவிகள் மறுவாழ்வுத் திட்டங்கள் எதனையும் எதிர்பார்ப்பது இத்தனை காலப் பட்டறிவுக்கும் முரணானது. அதனால் நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டங்களை வகுக்கவேண்டியவர்களாக தமிழர்கள் இருக்கின்றனர்.

அதன் முன்னோடித் திட்டத்தை இப்போது விடுதலைப்புலிகள் முன்னெடுக்கின்றனர். அவர்கள் கரையோரத்தில் இருந்து சுமார் 400 மீற்றருக்கு அப்பால் மீள்குடியேற்றத்தை நிறுவுவதற்கு தீர்மானித்து, அதனை நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர். கரையோரத்தில் இருந்து 300 மீற்றருக்கு அப்பாலேயே இப்பகுதிகளில் மீள்குடியேற்றத்தை மேற்கொள்வதென முதலில் தீர்மானித்திருந்தபோதிலும் பாதுகாப்புக் கருதி தூரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதனால் சிறிலங்காப் படையினர் ஆக்கிரமித்து தமது நிரந்தர பாதுகாப்பு வலயங்களாக கையகப்படுத்தும் அச்சுறுத்தல் இல்லை. மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மட்டுமே எடுக்கப்படுகின்றது. எதிர் காலத்தில் தாயகத்துக்குக் கிடைக்கக்கூடிய இயற்கையிடம் இருந்து தற்காத்துக்கொள்ளும் தொழில்நுட்பங்களுடன் அமைந்த வாய்ப்புக்கள் கிடைக்கும்போது கரையோரம் முழுவதையும் பயன்பாட்டுக்கு உட்படுத்த இயலும்.

இது தொடர்பாக எந்த எதிர்வினைகளும் கண்டனங்களும் இல்லாதபோது தென்னிலங்கையில் ஏன் இந்தக் கூக்குரல்கள்? ஆளும் தரப்புக்குள்ளேயே முரண்பாடுகள்? அதுவும் சிறிலங்கா சுத்திரக் கட்சிக்குள்ளேயே. அதுவிடயத்தில் வேறுபாடான கருத்துக்களும் பகிரங்கமாக ஒருவரை ஒருவர் தூக்கி எறிந்து பேசும் வார்த்தையாடல்கள்?

இது ஒரு விடயத்தை தெளிவாகக் காட்டுகின்றது. தென்னிலங்கையின் ஆளும் தரப்பையோ எதிர்த் தரப்பையோ சேர்ந்த முக்கியஸ்தர்கள் எவருமே மக்கள் நலனை மட்டும் கருத்தில் கொண்டவர்களாக இருக்கவில்லை. வெறுமனே தமது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்கான முதலாளிய சமூகத்தின் நலன்களை பிரதிபலிப்பவர்களாகவே உள்ளனர்.

அல்லது அதன் மறுபக்கமாக நோக்கின் உண்மையில் மக்களின் நலன்கள் பாதிக்கப்படும் என்று கருதுகின்றார்களேயானால் எந்த மக்களின் நலனை அவர்கள் கருதுகின்றார்கள். தமது நீண்ட கால வாழ்வமைந்த இடங்களை விட்டு இடம்பெயர்வதனால் அவர்களது பல்வேறு நலன்களும் சேதமடையும் என்று எண்ணுகின்றார்களா?

யாரும் கட்டுப்படுத்தவியலாதது என்று இப்போது கருதப்படும் இயற்கை அனர்த்தத்தில் இருந்து தற்காத்துக் கொள்ளும் முகமாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்காகக கவலைப்படுபவர்கள் தமிழ் மக்கள் பற்றி இந்த இருபது ஆண்டுகாலமாக கவலைப்படாமல் இருப்பது ஏன்?

வலிந்த இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழின அழிப்பையும் தமிழர்களின் பொருளாதார, கலாசார கூறுகளையும் இல்லாதொழிப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்ட செயற்பாடுகள் பற்றி ஏன் கவலைப்படவில்லை? இது பற்றிய கவலையற்ற மகிழ்ச்சிகரமான அவர்களது வெளிப்பாடே உயர் பாதுகாப்பு வலயங்களாக தமிழர்களது தாயகப் பகுதிகளை கையகப்படுத்தி வைத்திருப்பதாகும்.

இது தொடர்பாக எத்தனை இலட்சம் மக்கள் தமது அதிருப்திகளையும் வேதனைகளையும் சொல்லிவிட்டார்கள். இவை யாவும் செவிசாய்க்கப்பட்டனவா? மனிதாபிமான ரீதியிலோ அல்லது குறைந்தபட்சம் அவர்களது சட்டத்தின் படியோ தானும் தீர்க்கப்பட்டதா?

இப்போது வலிகாமம் வடக்குப் பகுதியில் தமிழ் மக்கள் தம்மை மீளக்குடியேற அனுமதிக்கக்கோரி தொடுத்த வழக்கிற்கு கூட வலிந்து திணிக்கப்பட்ட பாதுகாப்பை காரணம் காட்டி சிறிலங்கா அரச தரப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

மணங்கள் திறந்தால் திறக்கக்கூடிய வழிகளையே திறக்க மறுக்கும் இந்த ஆட்சியாளர்கள், இயற்கையை வெல்லமுடியாது மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கையை கேள்விக்குள்ளாக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

அது அப்பட்டமான இனவாத அரசியல் வியாபாரமாக இல்லாமல் வேறெதுவாக இருக்க முடியும்?

**ஞாபகன்**

---

## காத்திருப்பு..

காத்திருப்பு என்பது ஈழத்தமிழருக்கு எழுதப்படாத விதியாகி விட்டது.

பயமற்ற வாழ்வுக்கு ஏங்கினோம், எங்கள் நிலத்தில் நாங்கள் வாழ ஏங்கினோம். எங்கள் உறவுகளை போருக்கு பறி கொடுத்து விடுவோமோ என ஏங்கினோம்.

இப்படி ஏங்கி....ஏங்கி நிச்சயமற்ற வாழ்வுக்குள்ளிருந்து அச்சமற்ற வாழ்வுக்காக காத்திருந்தோம்.

ஆனால், உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து படையினர் விரைவில் வெளியேறுவர் என்றும் சமாதானம் விரைவில் மலரும் என்றும். எல்லாம் எல்லோருக்கும் கிடைக்கும் என காத்திருந்தோம். ஆனால், எதுவுமேயில்லை.

இன்று அலை தந்த அவலத்தால் ஏங்கியபடி காத்திருக்கிறோம்.

எங்களது காத்திருப்பை எவருமே என்றுமே புரிந்து கொண்டதேயில்லை.

அவரவர்க்கு அவர்களின் காத்திருப்புக்கு பலன் வேண்டும்.

எந்தப் பெரிய இடர்வரினும், எந்தப்பெரிய துயர் தரினும் அவர்களுக்கெல்லாம் தங்களுக்கான பலன் கிட்ட வேண்டும்.

இப்படித்தான் இன்று ஆயிரமாயிரம் சிறுவர்கள் தாயை இழந்து தந்தையை இழந்து தங்கள் உறவுகளை இழந்து காத்திருக்க அந்த காத்திருப்புக்குள்ளும் அற்ப இலாபங்களை தேடும்



காரியங்களில் கால்களில் சில்லுப்பூட்டி நடமாடுகிறார்கள்.

ஏவி விட்ட யுத்தத்தில் அநாதையாக்கப்பட்ட ஆயிரமாயிரம் சிறுவர்களில் எவரும் தமிழர் தாயகத்தின் வீதிகளில் அலையவில்லை. எவரும் அநாதரவற்று வாழவும் இல்லை.

இந்தத் தேசத்தில்தான் அவர்கள் மனிதர்களாக வாழ்கின்றார்கள்.

செஞ்சோலை என்னும் காந்தரூபன் அறிவுச்சோலை என்னும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பராமரிக்கப்படும் பல சிறுவர் நல நிலையங்கள் என்றும் கல்வியிலும் வாழ்விலும் உயர்ந்தவர்களாக இந்த தேசத்தில் வாழ்கிறார்கள்.

ஆனால்,

தென்னிலங்கையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் வியாபாரம் என அரசியல் இயலாமைகளின் தோல்விகளால் பாதாள உலக வியாபாரம் உச்சத்தில் இருக்கிறது.

இதைப்பற்றிப் பேச, எழுத, அறிக்கை விட ஏனோ சர்வதேசத்தொண்டர் நிறுவனங்களும், சர்வதேச நாடுகளும் துணிவதாயில்லை.

காரணம் அதுவொரு இறைமையுள்ள நாட்டின் அரசு அப்படியானால் வேலியே பயிரை மேய்வதில் தவறில்லை என்பது போல.

ஒருவரோ பலரோ குற்றம் செய்தால் அதற்கான தண்டனை வழங்கப்படுவது அவசியம். அதேபோல் குற்றம் செய்ய தூண்டினால் அதற்கும் அதேயளவு தண்டனை வேண்டுமல்லவா.

அப்படியானால் அரசின் அசமந்தப் போக்கினால் நிகழும் ஆயிரமாயிரம் குற்றங்களுக்கு தண்டனை.

இதற்காக எதுவரை காத்திருக்கவேண்டும்.

**வேழினி**

# சுனாமி ஏற்படுத்திய சமாதான சூழலை அரசு உதாசீனம் செய்து வருகிறது

சுனாமியின் தாக்கத்தால் இலங்கையின் அரசியல், பொருளாதார சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார நெருக்கடியிலும் அரசியல் உறுதித் தன்மையின்றியும் இருந்த அரசாங்கம் இவையிரண்டிலிருந்தும் ஓரளவுக்கு மீண்டு ஆறுதலாக மூச்சுவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் அரசின் அணுகுமுறையில் அதாவது இனரீதியான மேலாதிக்க உணர்விலிருந்து ஆட்சியாளர்கள் இறங்கிவரவில்லை. குறுகிய இனவாத அரசியலை நடத்துவதில் இன்னமும் நாட்டம் காட்டி வருகின்றனர். இனவாத நோக்கில் சிந்திக்கும் சிந்தனை வட்டத்திலிருந்து தம்மை மீட்டுக்கொள்ள முன்வரவில்லை. சிறுபான்மை தமிழ் பேசும் மக்களை நாட்டின் இரண்டாந்தர பிரஜைகளாக நோக்குவதுடன் நீண்டகால நோக்கில் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். அதற்கு ஏற்ற வகையில் சில செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள் என்று கூறுமளவிற்கு அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

அரச செயல் திட்டங்கள் பாரபட்சமின்றி நடப்பதாக ஊடகங்கள் மூலம் அறிவித்து வந்தாலும் அதில் உண்மை இல்லை. நிவாரணப் பொருட்களை சில இடங்களுக்கு அனுப்பிவைத்துள்ளபோதும் அரசின் ஒவ்வொரு நகர்வும் கடந்த காலங்களில் இருந்ததைப் போன்று பாரபட்சமானதாகவும் உள்நோக்கம் கொண்டதாகவும் இருக்கிறது. வெளிப்பார்வைக்கு சில விடயங்கள் தெரியாவிட்டாலும் அரசாங்கத்துக்கு அதாவது குறுகிய பேரினவாத சிந்தனையாளருக்கு நன்மையளிக்கும் பல செயற்பாடுகள் திரைமறைவில் நடந்து வருவதாகக் கூறப்படுகிறது. மூடி மறைக்கமுடியாத வகையில் சில செயற்பாடுகள் அமைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

நாட்டில் பேர் அனர்த்தம் நிகழ்ந்து அழிவுகள் ஏற்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் அரசை குறைகூறிப் பயனில்லை. அரசுடன் இணைந்து பணியாற்றவேண்டும். நாட்டில் இன,மத, பிரதேச வேறுபாடுகள் களையப்பட்டு ஒரு நாடு ஒரு தேசியம் • என்ற கருத்துருவாக்கம் வலுப்பெற்று வருகிறது. இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் ஊடகங்கள் குறுகிய நோக்கில் செயற்பட்டு மக்களைக் குழப்புவதுடன் அரசின் செயல்களை அநீதியாக விமர்சிப்பதாக தெற்கில் கூக்குரலிடுகின்றனர். இதில் எந்தளவு உண்மை உள்ளது? இவர்கள் நியாயபூர்வமாக சிந்தித்து தமது கருத்துக்களைக் கூறுகிறார்களா? இவ் விடயத்தை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

தற்போதைய சூழலில் அனைவரும் செயற்படவேண்டும் என்பதிலும் இனங்களுக்கிடையேயான வேறுபாடுகள் மறைந்து மக்கள் மத்தியில் ஒருமைப்பாடு ஏற்பட்டுள்ளது என்பதும் உண்மை தான். ஆனால், இந்த உணர்வு எந்த மட்டத்தில் ஏற்பட்டுள்ளது? மனிதாபிமான அடிப்படைக்கு அப்பால் வளப்பங்கீடு, வசதிவாய்ப்புக்கள், சலுகைகள் போன்ற விடையத்தில் இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்குமா? பொதுமக்கள் மத்தியில் அவ்வாறான உணர்வு இருந்தாலும் அதிகார தரப்பினரை மீறி மக்கள் எந்த மட்டம் வரை இவ் விடயத்தில் முன்னேறிச் செல்லமுடியும்? போன்ற சந்தேகங்கள் உள்ளன. உண்மையில் பொதுமக்களின் உதவிகளும் மனிதாபிமானப் பணிகளும் ஒருகால எல்லைவரைதான் சாத்தியமாகும். அதற்கு அடுத்தகட்டப்பணியான கட்டுமான-புனர்நிர்மாணப்பணிகளை முன்னெடுக்கக் கூடியவலுவும் அதிகாரமும் பொதுமக்களிடம் இல்லை. இதற்குத் தேவையான நிதியினை வெளிநாடுகளிடமிருந்து பெற்று நீதியான பங்கீட்டு அடிப்படையில் கூட்டுச் செயல்திட்டம் ஒன்றை உருவாக்கி அதைச் செம்மையாக நடைமுறைப்படுத்தவேண்டும். இதுவே இன்றைய தேவையாகவுள்ளது. இதற்கான முன்னோடி நடவடிக்கையில் அரசாங்கம் நீதியான பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதனை மெய்ப்பிக்கும் வகையிலான செயல்கள் பல கோணங்களில் பார்க்கப்படுகின்றன. அவற்றுள் பிரதானமாக,

ஒன்று நிவாரண- புனரமைப்பு- மீள் கட்டுமானப்பணிகளில் வடக்கு - கிழக்கு பகுதிகளும் தெற்கில் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கென அமைக்கப்பட்ட செயலணியானது மையப்படுத்தப்பட்டதாகவும் சந்திரிகாவின் நெருங்கிய- விசுவாசமானவர்களை உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது என்று கூறப்படுகிறது. அரசுடன் இணைந்துள்ள ஜே.வி.பி எதிர்க்கட்சிகள், தமிழ், முஸ்லிம் தரப்பினர் என பலதரப்பட்டோர் ஒதுக்கப்பட்டுள்ளனர். இந்த வகையானது ஒன்று.



விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுடன் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் தொடர்பை கட்டுப்படுத்துவதுடன், சமாதான முயற்சிகளைப் பலப்படுத்தும் வகையிலான செயல்பாடுகளை மேற் கொள்ளாமை, அரச கட்டமைப்புகளூடாக செயற்திட்டங்களை முன் நகர்த்தி அரசியல் இராணுவ நோக்கங்களை அடைய திட்டமிடும் வகையிலான முயற்சிகள் மற்றொன்றாக நோக்கப்படுகின்றது.

இந்த இரண்டு வகை நடவடிக்கைகளினுள்ளும் பல்வேறு திட்டங்கள் வெவ்வேறான நோக்கங்களுக்காக உள்ளடக்கப்பட்டுள்ளன. அதே நேரம், இவைகள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததாகவும் உள்ளன.

அரசாங்கம் இந்த இயற்கை அனர்த்தத்தை தனக்குக் கிடைத்துள்ள ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளைப் பலப்படுத்தும் வகையில் சில நகர்வுகளைச் செய்திருக்கவேண்டும். சுனாமிக்கு முன்னரான நிலையில் தமிழ் மக்கள் அரசின் மீது நம்பிக்கை இழந்து விரக்தியுற்று சமாதான முயற்சிகளின் அடைவுகளை மீள் பரிசீலனை செய்யவேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். சுனாமியின் பின் கிடைத்த பொருளாதார வளத்தையும் அரசிடமிருந்த இயந்திரங்கள், வாகனங்கள் போன்றவற்றையும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உரிய முறையில் பங்கீடு செய்து தனது நல்லவிப்பிராயத்தை கட்டி வளர்த்திருக்கமுடியும். மாறாக அரசின் செயல்கள் மக்களின் விரக்தியை மேலும் அதிகரிக்கவே வழி செய்யப் போகின்றன.

நாடு இதுவரை கண்டிராத அழிவுகளைச் சந்தித்துள்ளதை உணர்ந்துகொண்ட அரசாங்கம் சர்வதேச நாடுகளின் உதவியைக் கோரியது. நாட்டில் செய்யவேண்டிய மீள் கட்டுமானப்பணிகளுக்கு தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க சர்வதேச சமூகம் முன்வந்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு உதவியினைப்பெற்று சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய பகுதிகளையும் மீளக் கட்டியமைக்கமுடியும். நீண்ட கால நோக்கில் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய வகையில் மீன்பிடியை உள்ளடக்கிய தொழில் துறையை வளர்க்கக்கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்தமுடியும். இவ்வாறு அரசின் முன்னால் பல்வேறு தேவைகள் இருக்கும்போது ஈரானிடமிருந்து ஆயுதங்களை வாங்க முற்படுவது ஏன்? இது ஒருவிடயத்தை எமக்கு உணர்த்துகிறது. அரசாங்கத்துக்கு எவ்வாறான வாய்ப்புகளும் வசதிகளும் வந்தபோதும் இனப்பிரச்சினையை தீர்ப்பதில் அதாவது சிறுபான்மை மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதில் சிறிதளவும் விருப்பம் இல்லை. இராணுவ பலத்தின் மூலம் சிறுபான்மை மக்களை அடக்கியாளவே தனது திட்டங்களைத் தீட்டிச் செயற்பட்டு வந்தது. இனியும் அப்படியான வழிகளையே நாடதிட்டமிட்டுள்ளது. அதைத்தான் அரசின் செயற்பாடுகள் வெளிப்படுத்தி வருகின்றன. செக்கு மாடு போல இனவாதத்தைச் சுற்றி வரவே நாட்டம் காட்டுகிறது.

இந்த வகையில், அரசாங்கத்துக்குச் சார்பான சூழ்நிலை ஒன்றைச் சுனாமி அனர்த்தம் ஏற்படுத்தியபோதும் அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. அதாவது, அரசின் பேரினவாத சிந்தனைப் போக்கில் மாற்றம் இல்லை. இனவாத பாதையில் பயணிக்கும் அரசாங்கம் சமாதானத்தை நோக்கியதான பல திருப்பங்கள் வருகின்றபோதும் அவற்றை எல்லாம் விட்டு தனது இனவாத பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறது. அந்த வகையில் சமாதானத்துக்கு வாய்ப்பான சுனாமி ஏற்படுத்திக்கொடுத்த திருப்பத்தையாவது இலங்கை அரசாங்கம் பயன்படுத்துமா? நாட்டை நல்லவழியில் இட்டுச் செல்லுமா?

**து.சபேசன்**

---

# இது உங்களின் நேரம்



“இன்று உங்கள் கையில் கிடைக்கும் ஒருநாள் நாளை வரப்போகும் இரண்டு நாட்களிற்குச் சமனானது.” என்கின்றார் ‘பிரான்சிஸ் பேகன்’. இக் கூற்றின் மூலம் ஒவ்வொரு மணித்துளியின் பெறுமதியும் புரிந்திருக்கும். எனவே நேரம் பொன்னானது அதை மண்ணாக்கி விடக்கூடாது. ஆகவே நேரத்தை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு வாழ்க்கையில் திட்டமிடல் எனும் ஒன்று மிகவும் முக்கியமானதாகும். திட்டமிடல் அற்ற அவ் வாழ்க்கை அநாவசியமாக வீணடிக்கப்படுகிறது. எனவே நாம் செல்ல வேண்டிய பாதை எது? எந்த இலக்கை நாம் சென்றடைய வேண்டும்? போன்ற கேள்விகளிற்கு முதலில் விடைகாணுங்கள்.

அனைவர்களுக்கும் இருப்பது. இருபத்து நான்கு மணி நேரமே, அவ் நேரத்தில் அரிய பல சாதனை புரிந்து வெற்றிநடை போடவேண்டுமாக இருந்தால் நேரத்தை பொன் போன்று பயன் படுத்த வேண்டும். எனவே நேரத்தை சரியான முறையில் திட்டமிடுங்கள். அவசியத்திற்கும், அநாவசியத்திற்கும் இடையேயான வேறுபாட்டை முதலில் இனங்காணுங்கள். அதன்படி அன்றைய வேலையை தரம் பிரியுங்கள்.

நீங்கள் ஒன்பது மணிக்கு ஒரு வேலை செய்வதாக இருந்தால் பத்து நிமிடங்கள் முன்னதாகவே தயார் நிலையில் இருங்கள். இதனால் பாதிப்பு எதுவுமில்லை. எப்போதும் நீங்கள் தயார் நிலையில் இருந்தால் வெற்றி உங்கள் கைகளில்தான்.

நீங்கள் சரியான முறையில் நேரத்தை கடைப்பிடிக்காமல் இருந்துவிட்டு, வேலைச்சுமை அதிகரித்தவுடன் அதை பிறர் மீது சாதிக்காதீர்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் உங்களை ஒருவர் சந்திக்கவந்துள்ளார் எனின் நேரம் இல்லாது போன்று முகத்தைத் திருப்பிக்கொண்டு செல்லாதீர்கள். எது எப்படியிருந்தாலும் சிறு புன்னகையுடன் இன்று சந்திக்க முடியாததற்கான காரணத்தைக் கூறி வேறு ஒரு நாள் சந்திப்பதற்கான வாய்ப்பைக் கொடுங்கள். அப்போதுதான் பிறரிற்கு உங்கள் மீது நம்பிக்கை பிறக்கும். சின்னச் சின்ன விசயங்களிற்கெல்லாம் மனமுடைந்து போகாதீர்கள். இதனால் உங்களுடைய நேரம்தான் வீணடிக்கப் படுகின்றது. நீங்கள் ஒன்றைமட்டும் புரிந்துகொள்ளுங்கள் உங்கள் அனுமதியின்றி உங்கள் மனதை பிறரால் காயப்படுத்திவிட முடியாது. எனவே அவ்வாறான சந்தர்ப்பத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனதை எப்போதும் ‘ரிலாக்ஸ்’ ஆக வைத்திருங்கள்.

சில வேளைகளில் எந்த வேலையை எப்படிச் செய்வதென்றே தெரியாமல் திண்டாடி உங்களை நீங்களே சலித்துக் கொள்வீர்கள். எனவேதான் ‘தாமஸ்கார்லைல்’ என்பவர் கூறியுள்ளார். “கைக்கு அருகிலுள்ளதைச் செய்யுங்கள் அடுத்த கடமை என்ன என்பது தன்னாலே புலப்படும் என்று” ஆகவே நீங்கள் இன்று என்ன வேலை செய்யவேண்டியுள்ளதோ அதை அன்றே, அதே நிமிஷத்தில் செய்து முடியுங்கள். நாளை என்று ஒரு போதும் ஒத்திப்போடாதீர்கள்.

நாளை என்பது இல்லை என்பதற்கு அறிகுறி எனப் பலர் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள்; சில வேளைகளில் நீங்களே பிறருக்கு கூறியிருப்பீர்கள். அதை உங்கள் நிஜவாழ்விலும் கடைப்பிடியுங்கள். எமது சில ஒழுங்கீனங்களால் வாழ்வு தட்டுத் தடுமாறி சீரழிந்து போக அனுமதிக்காதீர்கள்.

ஒரு வேலையைச் செய்வது ஒரு விதை விதைப்பது போலாகும். அது உரிய காலத்தில் நடப்படவில்லையாயின் அது காலம் கடந்த நடவு தானே. காலம் தவறியநடவின் பலன் அதற்கேற்பதானே இருக்கும். அதே போன்றுதான் காலம் கடந்து சென்ற பின் நாம் செய்யும் செயலின் பலாபலனும் கிடைக்கப்பெறும்.

வாழ்க்கையில் முன்னேறியவர்களைப் பார்த்தோமாயின் அவர்கள் நேரத்தைச் செலவிடுவதில் பெரிய உலோபியாகவே இருந்துள்ளார்கள் என்பது நன்கு புலப்படுகின்றது.

உதாரணமாக ‘ தியோட்டர் ரூஸ்வெல்ட் ’ மகா நிபுணர், ஒருவரைச் சந்திக்கப்போவதாக இருந்தால் அவருடன் எவ்வளவு நேரத்தைச் செலவிடவேண்டும் என முற்கூட்டியே தீர்மானித்து விடுவாராம். ஒரு நண்பர் அவருடைய அறைக்கு நுழைந்ததும் தாம் அவரை வெகு காலம் சந்திக்க விரும்பியது போன்ற உணர்ச்சியை அவருடன் கைகுலுக்கும் போதே அக்கைகுலுக்கலிலே காட்டிக் கொள்வாராம். ஆனால் அந்த அன்பான வரவேற்புக்கு மத்தியில் வந்தவர் கூறவேண்டிய விசயத்தை மட்டும் கூறவேண்டும் என்றும், மற்றும் எத்தனையோ நண்பர்கள் தன்னைச் சந்திப்பதற்காகக் காத்து நிற்கின்றார்கள் என்பதை தெரியப்படுத்தி விடுவாராம். எனவே வந்தவர்கள் கூறவேண்டிய விசயத்தை மட்டும் கூறிவிட்டுச் சென்றுவிடுவார்களாம்.

ஆனால், எவ்வளவு பேர் தமது நேரத்தை நண்பர்கள் களவாடிக் கொண்டுசெல்ல அனுமதித்து விடுகின்றனர். அவர்களுடன் கூட்டம் போட்டு வீண் பேச்சுப் பேசி, பிரயோசனம் இன்றி அவ் நேரத்தை வீணடிக்கின்றனர். நீங்கள் நண்பர்களுடன் கதைக்கும்போது உங்களிடமே சில கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள். நீங்கள் பேசிக்கொண்டிருக்கும் விசயம் என்ன? இதனால் உங்களின் நண்பனுக்கு நன்மை உண்டா? அல்லது உங்களிற்கு நன்மையுண்டா? அல்லது நீங்கள் அவ்விசயத்தைக் கதைப்பதால் வேறு யாராவது நன்மையடைகிறார்களா? இல்லை இது யாருக்குமே பிரயோசனம் அற்ற அரட்டையடிப்பு என நீங்கள் உணர்கின்றீர்களானால் அதை உடனே நிறுத்துங்கள். நீங்கள் உணர்ந்ததை உங்கள் நண்பனுக்குத் தெளியப்படுத்துங்கள். அவர் உண்மையில் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை உள்ளவர் எனின் அவரும் நிச்சயமாக நீங்கள் கூறும் கருத்தை ஏற்றுக் கொள்வார்.

எனவே நாம் ஒவ்வொருவரும் சரியான ஒழுங்கில் நேரத்தைக் கடைப்பிடிப்போமாக இருந்தால் பதட்டம், பயம், கவலை, சலிப்பு, வெறுப்பு, மனவிரக்தி போன்ற பல கெட்ட குணங்களிலிருந்து விடுதலை பெறமுடியும். ஆகவே கடிகார முள் எவ்வாறு ஓடிக்கொண்டிருக்கின்றதோ அதே போன்று நாமும் எமது இலக்கை அடைவதற்காக ஒழுங்காக இயங்குவோம்.

**த.யாழ்வேங்கை**

# சந்திரிகாவிற்கு அழுத்தம்?

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சியானது கடைத்தேறுவதற்கான இறுதிச்சந்தர்ப்பம் இது. அல்லது இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் என்பது இன்று உலகப் பொது அபிப்பிராயம். அதாவது சுனாமி அனர்த்தம் இலங்கையில் பேரழிவை ஏற்படுத்தியிருக்கின்றபோதிலும்- அது எந்தவகையிலும் தவிர்க்கமுடியாது போய்விட்ட நிலையிலும்கூட- இதனால் பாதிப்புற்ற மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதன்மூலம் இலங்கையில் அமைதிதோன்ற நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தமுடியும் என்பது உலகத்தின் பொதுவான கருத்தாகும்.

அதனையே விடுதலைப் புலிகளும் கொண்டிருக்கின்றனர். அதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாராகவும் இருக்கின்றனர் என்பதை வெளிப்படுத்தியிருப்பதுடன், அதற்கு ஆக்கபூர்வமானவகையில் ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக இருக்கின்றனர். இதற்கு அமைவாக அரசாங்கத்துடன் இவ்விடயத்தில் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தப் பேரனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட பெருந்தொகையான தமிழ் மக்கள் இராணுவ அனர்த்தத்தைவிட கடும் பாதிப்பைச் சந்தித்திருப்பதை எவரும் மறுத்துவிடமுடியாது. எனவே கடந்த காலங்களில் அவர்கள் மீண்டெழுந்ததுபோல மீண்டும் அவர்கள் செயற்படமுடியாது. அதற்கான பொருளாதார உளப்பலம் அவர்களிடம் இல்லை. எனவே யுத்த அனர்த்தத்திலிருந்து மீள என ஏற்பட்ட சமாதான காலம் போல இதற்கெனவும் பேச்சுவார்த்தைகளையும் கட்டமைப்புகளையும் உருவாக்கக் காலத்தைச் செலவிடமுடியாது. உண்மையில் நாட்கணக்கில் ஏற்படும் தாமதங்கள்கூட பலவிளைவுகளை- விரும்பத்தகாதவற்றை ஏற்படுத்திவிடக்கூடும். இதனை சிறிலங்கா அரசாங்கம் கருத்திற் கொள்ளவேண்டும்.

உதாரணமாக அதிகாரிகள் மட்டத்தில் செய்யக்கூடிய உடனடி நிவாரண உதவிகளில் ஏற்பட்ட இழுபறிகூட துன்பமுற்ற மக்களை மேலும் சிரமத்திற்கு உள்ளாக்கியது. பல இடங்களில் மக்கள் தமது பாதிப்புக்களால ஏற்பட்ட மன உளைச்சலின் மத்தியிலும்கூட போராட்டம் நடத்தவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டிருப்பதை அண்மைய சம்பவங்கள் புலப்படுத்துகின்றன. எனவே இவ்வாறான நிலைதோன்ற அனுமதிப்பது பலவிளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும்.

இதேவேளை இந்தச் சந்தர்ப்பத்தை சமாதானத்துக்கான இறுதிச்சந்தர்ப்பமாக சிறிலங்காவின் பிரதமர் மகிந்தராஜபக்ச பார்ப்பது ஒரு சிறந்த மதிப்பீடாகும். சமாதான முயற்சிகள் அனைத்தும் தோல்வி நோக்கிச் சென்று சமாதான முயச்சியாளர்களாகிய நோர்வேத்தரப்பினர் நம்பிக்கையிழந்துகொண்டிருந்தவேளையில் நிகழ்ந்த கடலனர்த்தத்தால் ஒரு மாற்றம் நிகழ்ந்திருப்பதாகவே அனைவரும் கருதுகின்றனர்.

அதனை சிறிலங்கா சனாதிபதி வாயளவில் ஏற்றும்வருகிறார். விடுதலைப் புலிகள் தமக்கு ஒத்துழைப்பதாகவும் கூறிவருகிறார். ஆனால், செயல்முறையில் அதற்கான பிரதிபலிப்பை சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 5 வாரங்களுக்கு மேலாகியும் சனாதிபதி காட்டாதது இதனையும் வழமையான அவரது தந்திரோபாயமாகவே கொள்ளத்தூண்டுகிறது.

1995 இல் ஆட்சிபீடம் ஏறுவதற்காக "தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு" என்று ஏற்றுக்கொள்வதாகக்கூறிய அவர் பத்து வருடங்களாக அவ்வாறு "பிரச்சினைகள் உண்டு" என ஏற்றுக்கொண்ட ஒரே தலைவி தானே எனத் தம்பட்டமடித்துக்கொண்டு செய்த அழிவுகள் மறுக்கப்படமுடியாதவை.

எனவே இன்றும் கிடைக்கின்ற உலக உதவிகளைப் பெறுவதற்காக சில அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கிறாரே தவிர செயற்பாட்டில் எதனையும் காணவில்லை.

இவ்வாறான சூழலில் அதே ஆட்சியில் அடுத்த இடத்திலிருக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ச கடந்த சில தினங்களாக வெளியிட்டு வரும் கருத்துகள் குறித்து பல்வேறு ஊடகங்கள் வெளிவருகின்றன.

ஒன்று அவரும் சந்திரிகாவின் வழியில் தொடர்கின்றாரா? என்பது. அதாவது சுனாமி அனர்த்தம், ஏற்படுத்தியிருக்கின்ற சர்வதேச நிலைப்பாட்டை பிரதமர் என்ற ரீதியில் தான் உணர்ந்துகொண்டிருப்பதாக, வெளிப்படுத்துவதன்மூலம் ஆட்சியாளரின் நிலைப்பாடும் அதுவே எனக்காட்ட முயல்கிறாரா? அவ்வாறு பேச்சுகளில் மாத்திரம் வெளிப்படுத்தமுயல்கிறாரா? என்பது ஒன்று.

அடுத்ததாக சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பிரதமர் மகிந்த ராஜபக்சவின் மாவட்டமாகிய அம்பாந்தோட்டை மாவட்டமும் ஒன்று. ஆனால், இந்த நிவாரண நடவடிக்கைகளில் சனாதிபதி சந்திரிகா



குமாரதுங்க காலி மாவட்டத்தை முதன்மைப் படுத்துகிறார். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று அம்பாந்தோட்டை பிரதமரின மாவட்டமாக இருப்பதால் அநுராவின் போட்டியாளராகிய அவரின் செல்வாக்கு அதிகரித்துவிடும் என்ற சனாதிபதியின் அச்சம். இரண்டாவது உடனடி நிவாரணப் பணிகளில் காலிமாவட்டத்தில் ஜே.வி.பி களமிறங்கிப் பணியாற்றியதால் அதற்கு ஏற்பட்ட செல்வாக்கை முறியடிப்பது.

எவ்வாறாயினும் அம்பாந்தோட்டை மாவட்டம் கவனிப்பில் முதலிடத்தைப் பெறாமை பிரதமர் மகிந்தராஜபக்சவிற்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை உலகப் பொது அபிப்பிராயத்துக்கு எதிராக ஜே.வி.பி உள்ளபோது அதற்கு எதிரான கருத்தை வெளியிடுவதற்காக மகிந்தராஜபக்ச எண்ணியிருக்கலாம்.

அதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஜே.வி.பியின் ஆதரவைப்பெற உலகத்தின் அபிப்பிராயத்திற்கு எதிராக நடந்துகொள்வாராயின் அதனால் ஏற்படும் பின் விளைவுகளிலிரு தான் விடுபடும் நோக்கத்தை கொண்டதாக பிரதமரின் இக்கூற்றுக்கள்.

எவ்வாறாயினும் மகிந்தராஜபக்ச கூறும் கருத்துக்கள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அழுத்தத்தைப் பிரயோகிப்பதாகவேயிருக்கும். ஒரு புறம் சனாதிபதி இவ்விடயத்தில் சாதகமான நகர்வை வெளிக்காட்டாத அதே வேளை, ஜே.வி.பி அதற்கு எதிரான கருத்துக்களை கூறிவருகிறது. இந்நிலையில் பிரதமர் மகிந்தராஜபக்ச சனாதிபதி சந்திரிகாவின் எண்ணத்துக்கு மாறாக இவ்வாறு கருத்துக்களைத் தெரிவிப்பாராயின் அது அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுக்கும் நோக்கத்தைக்கொண்டதாகவே இருக்கும்.

அதாவது உலகம், புலிகள், பிரதான எதிர்க்கட்சியாகிய ஐ.தே.க வின் பட்டியலில் சிறிலங்காப் பிரதமர் மகிந்தராஜபக்சவும் சேர்ந்துகொள்கிறாரா? அவ்வாறாயின் சந்திரிகா ஜே.வி.பியுடன் தனித்துவிடப்படுகிறார் என்றே அதனை அர்த்தப்படுத்தலாம்.

வேலவன்

## நேர்நோக்கு

# மீனவரின் இயல்பு வாழ்வுக்கு அக்கறை செலுத்தவேண்டும்

தமிழர் தாயகப் பகுதி மீன்பிடியானது கடந்தகால யுத்தத்திலும் பொருளாதாரத் தடையினாலும் நலிவடைந்து பாரம்பரிய மீன்பிடி முறைகளாகவே காணப்பட்டது. தொடர்ந்து சமாதான காலத்தில் தாயக மீன்பிடியானது கணிசமான அளவு வளர்ச்சிப்போக்கை மீனவர்களின் முயற்சியினால் கண்டுவந்தது. கடந்த டிசெம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக தாயகப் பகுதியின் பெரும்பாலான மீன்பிடித் துறைகள முற்றாக அழிவடைந்துள்ளதுடன் ஏனைய பகுதிகளும் கணிசமான அளவு பாதிப்புக்குள்ளாகியும் உள்ளன. சுனாமி அனர்த்தம் காரணமாக சிங்கள தேசம் பாதிக்கப்பட்டுள்ளது என்பது குறைவாகவே



இருந்தாலும் அவற்றை துரித கதியில் அபிவிருத்தி செய்வதற்கான உடனடி நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளில் இருந்து சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் அபிவிருத்தி செய்வதற்கென ஒதுக்கப்படும் நிதியினைக்கொண்டு சிங்கள தேசத்தையும், சிறிலங்கா கடற்படைக் கட்டுமானத்தையும்கட்டி வளர்க்கவே, அரசு தொடர்ந்தும் ஆர்வம் காட்டி வருகின்றது. அதனையும் செயற்படுத்தி வருகின்றது. என்றுமில்லாதவாறு வளர்ச்சிபெற்ற விடுதலைப்புலிகளின் கடற்படையை வெல்வதே அரசின் முக்கிய இலக்காக இருந்தாலும். அதனை எந்த ஆட்சியாளர்களாலும் ஏற்படுத்த முடியாது என்பது உலகறிந்த விடயம் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை. கடல் வளம் நிறைந்த பகுதியாக உள்ள தமிழர் தாயகப் பகுதியின் கடற்றொழில் நவீன முறையில் கட்டி எழுப்பப்படவேண்டும். இதுவே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.

சிறிலங்காவில் தற்பொழுது குவிந்துகொண்டுவரும் வெளிநாட்டு உதவிகளை வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கே கொண்டு வருவதற்கு அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக தமது உடன்பிறப்புக்களை உடமைகளை, உரிமைகளை இழந்து இன்று ஒருமாத காலத்திற்கு மேலாகியும் எமது மக்கள் குறிப்பாக முல்லைத்தீவு, வடமராட்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் இன்றும் நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதிகள் இன்றி அவல வாழ்வு வாழ்கின்றனர். அதைவிட இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இராணுவத்தினரின் கெடுபிடிகள், தேசவிரோதிகளின் அத்துமீறல்கள் அடாவடித்தனங்கள், சமாதானம் என்ற போர்வையே தவிர எமது மக்களுக்கான அடிப்படை உரிமைகள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், மாறாக பாதிக்கப்பட்ட அம்பாந்தோட்டைப் பகுதி சிங்கள மக்களுக்கு உடனடியாக தேவைக்கதிகமான வளங்கள் வசதிவாய்ப்புக்கள் தற்காலிக இருப்பிடங்கள் அமைக்கப்பட்டு குடியமர்த்தினாலும் 500 சதுர அடி கொண்ட சகலவசதிகளுடனும் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனைவிட நவீனவசதிகளுடன் கூடிய மீன்பிடியை அறிமுகப்படுத்தி அதற்கமைவாக உபகரணங்களையும் வழங்கி கடன் திட்டங்கள் மாணியங்களையும் வளங்கிச் சிங்களதேச மீன்பிடியை வளர்ப்பதில் அரசு கண்ணாகவே இருந்து வருகின்றது.

யாழ்மாவட்ட மீன்பிடியை எடுத்துக்கொண்டால் /1983 ஆம் ஆண்டிற்கு முன்னதாக 14 மீன்பிடி வலயங்கள் பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 9 மீன்பிடி வலயங்கள் முற்றாக அழிந்துபோயுள்ளன. என்பதைவிட படையினரால் அழிக்கப்பட்டுள்ளன என்றே கூறவேண்டும். இவ்வாறு அழிக்கப்பட்ட வலயங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது வெறுமனே சிறிய படகுகளையும், வலைகளையும் வழங்காது படகு கட்டுமானங்களையும் நவீன வசதிகளையும் குளிரூட்டப்பட்ட களஞ்சிய வசதிகளையும் ஏற்படுத்தி இம் மீன்பிடி வலயங்கள் கட்டி எழுப்பப்படவேண்டும்.

எமது மீனவர்கள் கட்டுமரம் சிறிய பிளாஸ்ரிக் படகு, என்பவற்றை வைத்து ஆழ்கடல் தொழிலை மேற்கொள்ளாது கரையோரத் தொழிலை மேற்கொண்டு வந்தனர். இதற்கு அவர்களிடம் உள்ள வசதி வாய்ப்பை வைத்துக்கொண்டுதான் இவ்வாறான பாரம்பரிய தொழில்களை மேற்கொண்டனர். இன்று அதுவும் அழிந்துபோயுள்ளது. அன்றைய சூழலில் அரசு பாரபட்சம் காட்டாது சிங்கள மீனவர்களுக்கு எவ்வாறான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கின்றதோ அதே வசதி வாய்ப்புகளை எமது மீனவர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். தென்னிலங்கை மீனவர்கள் பல நாட்கள் கடலில் தரித்து தொழில செய்யக்கூடிய மல்ரிபோட் எனப்படும் பல நாட்கலங்களை வழங்கி மீன்பிடியை விருத்தி செய்துவருகின்றது. ஏதோ கடந்தவாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த நோர்வே நலன்புரி அமைப்பினர் யாழ் மீனவ சமாசத்திடம் ஒரு மல்ரிபோட் வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளது. இது போன்று அரச சார்பற்ற நிறுவனங்களே ஏதோ இயன்ற உதவிகளைச் செய்து எமது மக்களின் உடனடித் தேவைகளை செய்து வருகின்றது. அவர்களினது இயல்பு வாழ்விற்கான தொழிலை வளர்ப்பதில் எவரும் அக்கறை கொள்ளவில்லை. இதனை அரசு எள்ளளவும் அக்கறைகாட்டாது தனது சிதைந்துள்ள பொருளாதாரத்தையும் ஆட்டம் கண்டுள்ள கடற்படையையும் கட்டி எழுப்பவே முனைந்து வருகின்றது.

சு.பாஸ்கரன்

# சிரமதானப்பணிமூலம் வெளிக்கொணரப்படும் மனித மனம்

வடக்கு கிழக்கில் சுனாமி அனர்த்தத்தினால் தமது வாழ்விடங்களை இழந்து பாடசாலைகளிலும் நலன்புரி நிலையங்களிலும் வாழ்பவர்களிற்கு மறுவாழ்வு அளிப்பதான நடவடிக்கைகளை அரசு இதுவரை மேற்கொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் எத்தனை நாட்களிற்கு மேற்படி இடங்களில் தங்கியிருக்கமுடியும். தொடர்ந்து இவ்வாறான இடங்களில் இருப்பதினால் உளரீதியான பாதிப்பு ஏற்படுவதுடன் சுகாதாரச் சீர்கேடுகளினால் தொற்று நோய்களுமே ஏற்படும்.

ஆசியாவின் பதின்மூன்று நாடுகளில் இடம்பெற்ற சுனாமிப் பேரலையினால் இலட்சக்கணக்கானோர் இறந்துள்ளனர். குறிப்பிட்ட சில மணித்துளிகளில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் மதிப்பிடமுடியாத உயிர்களும் மதிப்பிடக்கூடிய பல கோடிரூபா பெறுமதியான சொத்துக்களும் காவுகொள்ளப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களை பாதிப்பில் இருந்து மீட்டெடுக்க அவர்களது வாழ்விடங்களில் குடியமர்த்தி அவர்களிற்கான தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். பாடசாலைகள், தேவாலயங்கள், கோயில்கள், பொது மண்டபங்கள், குடிமனைகள் இவை யாவும் பேதமின்றி அழிக்கப்பட்டுள்ளன. இவ் அழிவுகளை அகற்றி புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள சிரமதானம்



மூலமாக பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இடிபாடுகளை அகற்றி தம்மாலான உதவி களை மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொண்டர்கள், விளையாட்டுக் கழகங்கள், சங்கங்கள், சமாசங்கள் என பல்வேறு வகையான சமூக சேவையாளர்கள் பாதிக்கப்பட்ட இடங்களை சிரமதானப் பணிகள் மூலமாக துப்புரவாக்கி வருகின்றனர். வடமராட்சிப் பகுதியில் பாதிக்கப்பட்ட இடங்களை சிரமதானப் பணி மூலமாகப் புனரமைக்க வலிகாமம், தென்மராட்சிப் பகுதி மக்கள் முன்வந்து செயற்படுகின்றமை உண்மையான மனித மனங்களை ஞாபகப்படுத்துகின்றது.

வயது, பால் வேறுபாடின்றி சிரமதானப்பணிகளை மேற்கொண்டு வருவோர் நாளிற்கு நாள் அதிகரிக்கின்றபோதிலும், இன்னும் தேவையாகவே உள்ளன. இச்சிரமதானப் பணியாளர்களிற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உணவு, குடிநீர் வசதிகளை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. சிரமதானப்பணிகள் மூலமாக மனித மனங்கள் வெளிக்கொணரப்படும் அதேவேளை பல சமூக உறவுகள் கட்டியெழுப்பப்படுகின்றன.

சுனாமிப் பேரலையினால் 40000 பேர் பலியானதுடன் 6000 பேர் காணாமல் போயுள்ளனர். 117000 வீடுகள் சேதமடைந்ததுடன் 176 பாடசாலைகள் அழிவடைந்துள்ளன. 30 மருத்துவமனைகள் முற்றாகச் சேதமடைந்ததுடன் 25 தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையங்களும் செயலிழந்து போயுள்ளன. 80% ஆன கடலோர மீன்பிடிப் பகுதிகள் பாதிப்படைந்ததுடன் 77300 மீனவக் குடும்பங்களும், 13000 கடற்றொழில் மீனவக் கடல் கலங்களும் அழிவடைந்துள்ளன.

கடற்கரையில் இருந்து குறிப்பிட்ட அளவு தூரத்திற்கு அப்பாலே குடியிருப்புக்கள், பாடசாலைகள், தேவாலயங்களை அமைக்கவேண்டுமென்ற அரசாங்கத்தின் அறிவிப்புக்களினால் சிரமதானப்பணிகள் முழுமை பெறாமல் உள்ளன. கடற்கரையில் இருந்து 100 மீற்றரிற்கு உள்ளேயே 75% ஆன குடிமனைகளும் 73 பாடசாலைகளும் உள்ளன. இவற்றில் வடக்கு கிழக்கில் 20 பாடசாலைகள், கடற்கரையோரமாக வுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது. இவ்வாறான அறிவிப்புக்களினால் கடற்கரையை அண்மித்ததான பகுதிகளில் சிரமதானப்பணிகள் இடம்பெறுவதில்லை.

மணற்காட்டுப் பகுதியில் பல தன்னார்வத் தொண்டுநிறுவனத்தினர் சிரமதானப்பணிகளை மேற் கொண்டனர். அவர்களுடன் உரையாடிய போது அவர்கள் பகிர்ந்துகொண்ட கருத்துக்கள்.

இளவாலை மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலை அதிபர் சூ-றோபேட் உதயகுமார் கருத்துத் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்ட எமது மக்களிற்கு எங்களால் செய்யக்கூடிய ஆகக்குறைந்த உதவி அவர்களது இருப்பிடங்களை சிரமதானப் பணிமூலமாக துப்புரவாக்கிக் கொடுப்பதே. இதனால் இலகுவாக இம்மக்கள் குடியேறுவார்கள் என்ற நம்பிக்கையிலேயே இப்பணிகளை மேற்கொள்கிறோம். இவ்வாறானதொரு பாரிய இழப்பை எதிர்பார்த்து நாங்கள் வரவில்லை. கட்டடத்தைத் தூக்கி வேறு இடங்களில் கடல் அலை வைத்திருக்கிறதென்றால் மக்கள் எவ்வாறான அவலங்களைச் சந்தித்திருப்பார்கள். இவற்றை நினைத்துப் பார்க்கும்போது பயமாக இருக்கின்றது.

நாங்கள் வலிகாமத்தில் இருந்து வடமராட்சிப் பகுதிக்கு வந்து சிரமதானப் பணிகளை மேற்கொண்டாலும் மன நிறைவான பணியையே மேற்கொண்டுள்ளோம். என்னுடன் வந்தவர்கள் போட்டிபோட்டு முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையைக் காணமுடிந்தது. இம்மக்களது இழப்புகளை எங்களால் ஈடு செய்யமுடியாது. இவ்வாறான பணிகள் மூலமாவது பாதிக்கப்பட்டவர்களை ஆற்றுப்படுத்தலாம் என்ற எண்ணத்திலேயே சிரமதானப்பணிகளை மேற்கொள்கிறோம் என தனது கருத்துக்களை நிறைவுசெய்தார் பாடசாலை அதிபரான சூ-றோபேட் உதயகுமார்.

கரணவாய் கிழக்கு தாமரை மகளிர் குழுத்தலைவியான சோமசுந்தரம்- பரமேஸ்வரி பகிர்ந்துகொண்ட கருத்துக்கள் எங்கட உறவுகள் என்ற நிலையில் எங்கள் குழுவுடன் சிரமதானப்பணியினை செய்துவருகிறோம். இவர்களிற்கு ஏற்பட்ட இழப்பு நாளைக்கு எங்களிற்கும் வரலாம். எங்களால செய்யக்கூடிய ஒரே ஒரு உதவியாக பாதிக்கப்பட்டவர்களது வாழ்விடங்களை சிரமதானம் மூலமாக துப்புரவுசெய்வதே. சிரமதானப் பணிகளின்போது ஓரளவு பாவிக்கக்கூடியபொருட்களை எடுத்து வீட்டுக்காரர்களிடம் கொடுக்கும்போது அவர்கள் அதனை ஏற்கமறுக்கின்றனர்.

இவ்வளவும் போயிற்றிது இது என்னத்திற்கு என்ற மன நிலையில் உள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் தமது உறவுகளை இழந்த துயரில் இருந்து மீளவில்லை. வீடுகளைத் துப்புரவாக்கும்போது பெரும்பாலானவர்கள் வசதியாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அவதானிக்கமுடிகிறது. அப்படி இருந்தவர்கள் இப்படி ஆகிவிட்டார்களே என்று எங்களிற்கே கஷ்டமாக இருக்கிறது. அவர்களது மனநிலை எவ்வாறு இருக்கும். இடிபாடுகளை அகற்றி வீடுகளை துப்புரவாக்குவதை மட்டுமே நாங்கள் செய்துவருகிறோம். சம்பந்தப்பட்டவர்கள் இம்மக்கள் இயல்பு வாழ்விற்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளை மிக விரைவாக மேற்கொள்ளவேண்டும். இதன் மூலமாகவே இம்மக்களை சகஜ நிலைக்குக் கொண்டு வரலாம் என தனது கருத்துக்களை நிறைவு செய்தார் மகளிர் குழுத்தலைவி சோமசுந்தரம்- பரமேஸ்வரி.

மாரீசன்கூடல் பகுதியில் இருந்து வந்து சிரமதானப் பணிகளை மேற்கொண்ட சுகாதாரத் தொண்டராகக் கடமையாற்றும் சந்தியாப்பிள்ளை -சோபா பகிர்ந்துகொண்ட கருத்துக்கள் எங்கட மக்களிற்கு ஏற்பட்ட இழப்புக்களைப் பார்க்கவேணும். என்னுடைய உதவியும் இந்த மக்களிற்கு இருக்கவேணும் என்ற நிலையில்தான் இங்கு வந்தனான். முன்பு நான் இந்த இடங்களிற்கு வந்திருக்கிறன். ஆனால், இப்ப இந்த இடங்களைப்பார்க்க சரியான கஷ்டமாக இருக்குது. என்னால இயலுமான உதவியை இம் மக்களிற்கு தொடர்ந்து வழங்கவேண்டுமென்ற மனநிலையிலேயே நான் இருக்கிறன்.

எல்லாத்தையும் இழந்து மனரீதியாக மிகவும் நொந்த நிலையில் கடவுளும் இருக்கிறாரா என்ற ஆதங்கத்தில் உள்ளனர். 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வை எனக்கு ஞாபகப்படுத்தியது. நாவற்குழிப் பாலத்திற்குள்ளால நாங்கள் வரேக்க எங்கட புத்தகங்கள், உடுபுடவைகள் எல்லாம் கடலோட போட்டுது. அன்றைய இடப்பெயர்வின் போது எங்களிற்கு ஏற்பட்ட அவலம் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இழப்புக்கள், பாதிப்புக்களை, நலன்புரி நிலைய வாழ்க்கை மீண்டும் எம் மனக்கண்முன் வருகிறது.

இப்பாரிய இழப்புடன் அவற்றை ஒப்பிடமுடியாவிடினும் கடலில் ஏற்பட்ட அன்றைய நிகழ்வை என்னால் மறக்கமுடியவில்லை. இவ்வாறான இயற்கை அனர்த்தங்கள் இனிமேலும் இடம்பெறக்கூடாதென இறைவனிடம்தான் கேட்கவேண்டும் என தனது கருத்துக்களை நிறைவு செய்தார் சந்தியாப்பிள்ளை- சோபா.

கியூடெக் நிறுவன வடமராட்சிப்பகுதி ஊக்கிவிப்பாளரான அழகராசா- விமலேசன் தனது நிறுவனத்துடன் சேர்ந்து தொடர்ச்சியான சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகிறார். அவர் எம்முடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள், இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு மீளமுடியாத துன்பத்தில் இருக்கும் மக்களை இயல்பு வாழ்க்கைக்கு கொணர்ந்து அவர்களை மீளக் கட்டியெழுப்பும் நோக்கிலேயே இச் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். ஏனைய நிறுவனங்களைப் போல கியூடெக் நிறுவனமும் யாழ்ப்பாணத்திலுள்ள குழுக்களைக் கொணர்ந்து தொடர்ச்சியான சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வெற்றிகண்டுள்ளனர். எமது குழுக்கள் மனிதாபிமான முறையில் முழுமையாக தங்களை அர்ப்பணித்து சிரமதானப்பணிகளைச் செய்கிறார்கள். தங்களது இடங்களை துப்புரவு செய்வதுபோல் உணர்வுபூர்வமாக வயது வேறுபாடின்றி சிரமதானப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

உறவுகளை சொத்துக்களை இழந்து வாழ்வு என்னத்திற்கு என்று மிகவும் மனமுடைந்த நிலையிலுள்ளனர். இவர்களிற்கு தொடர்ச்சியாக தேவைப்படுவது உளநல ஆற்றுப்படுத்தல், மாணவர்கள் கல்வி கற்பதற்கான களச்சூழலை நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. வேறு இடங்களில் இருந்து மக்களைக் கொணர்ந்து சிரமதானப் பணிகளை மேற்கொள்ளும்போது பாதிக்கப்பட்ட மக்களிற்கு ஓரளவு ஆறுதலாக இருக்கிறது.

எங்கட துன்பத்தில் பங்கு கொள்கிறார்கள். எங்கள்மீது கருசனையாக இருக்கிறார்களே என்று இப்பகுதி மக்கள் ஓரளவு மன ஆறுதல் அடைவதனை அவதானிக்க முடிகிறது என தனது கருத்துக்களை நிறைவு செய்தார்.

தென்மராட்சி முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய வலய இணைப்பாளர் சிவதர்மிகா இராஜேந்திரம் பகிர்ந்துகொண்ட கருத்துக்கள் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களில் அவர்களிடம் கலந்துரையாடினோம். இதன் பின்னரே நாம் இவ்வாறான முடிவுக்கு வந்தோம். இம் மக்களினது வீடுகளை துப்புரவாக்கி இடிபாடுகளை அகற்றிக்கொடுத்தால் அவர்கள் ஓரளவு சந்தோசமடைவார்கள் என்ற ஒரு காரணத்திற்காக எமது வலய ஆசிரியர்களும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். தொடர்ச்சியாக இப் பணிகளை மேற்கொள்ளத்தீர்மானித்துள்ளோம். பல தன்னார்வத் தொண்டர்கள் தாமாக முன்வந்து சிரமதானப் பணிகளை மேற்கொள்வதினால் இம் மக்கள் வழமையான நிலைக்குத் திரும்புவதற்கு வசதியாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

கடந்த காலப்போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்தவேளை இயற்கை அனர்த்தத்தினால் இவ்வாறானதொரு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது போன்று இனியும் இடம்பெறக்கூடாது.

இவர்களது செயற்பாடுகளையும் கருத்துக்களையும் பெற்ற நிறைவில் மணற்காட்டில் இருந்து திரும்பினோம்.



**இரா-வின்**




# சக்தி மூலங்களை தெரிவு செய்ய அடிப்படைக் காரணிகள்

சில வருடங்களுக்கு முன்னர் 'பசுமையான சக்தி மூலங்கள்' (Green Current) பற்றிப் பேசியவர்கள் பலரும் சக மனிதர்களால் பரிகாசிக்கப்பட்டிருப்பார்கள், நடைமுறைச்சாத்தியமற்ற கற்பனைகளால் பொழுதுகளை வீணடிப்பவர்களாக அவர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். இருந்த போதிலும் கிட்டத்தட்ட சக்தி மூலங்களுக்கான பெரிய தயாரிப்பாளர்கள் அனைவருமே தற்போது, 'பசுமையான சக்தி மூலங்கள்' இன் உற்பத்தியாளர்களாக மாறி விட்டார்கள். என்ன காரணம் ? இன்று நாம் பயன்படுத்தி வரும் மின்சாரத்தின் பெரும் பகுதி கோடானகோடி ஆண்டுகளாக பூமியிலே சேகரிக்கப்பட்டு வைத்திருந்த சக்திமூலங்களை அழிப்பதுடன், வளிமண்டலத்தையும் வேறு அசுத்தமாக்குவதனால் பெறப்படுகின்றது. இப்படியானதொரு இயற்கைக்கு முரணான வழக்கத்தினைத் தொடர்ந்தும் நாம் கொண்டிருக்க அனுமதிக்கக் கூடாது என்ற விழிப்புணர்ச்சி சகல மட்டங்களிலும் உணரப்படுகின்றது. தீர்ந்து போகக்கூடிய வளங்களின் இருப்பைப் பேணுவதுடன், நாம்வாழும் சூழலையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு இதுவே அடிப்படையாகின்றது.

இந்த வகையிலே சூரிய ஒளியைக் கொண்டு மின்னுற் பத்தி செய்யும் 'போட்டோ வோல்ற்றைக்' தொழில்நுட்பமானது முக்கிய இடத்தைப்பெறுகின்றது. உற்பத்தித்தராதரத்தின் ஆரம்பப்படிநிலைகளைக் கடந்து, பலரினதும் மதிப்பைப்பெற்றுவரும் இத் தொழில்நுட்பத்தை ஊக்குவிப்பதற்காக, பல அரசுகள் 'கவர்ச்சிகரமான மானியத் திட்டங்கள்' பலவற்றையும் அறிமுகம் செய்கின்றன.. இவற்றில் எடுத்துக்காட்டாக '100 000 சூரியக்கூரைகள்' திட்டத்தைக் கூறலாம். இதன்படி கூரையிலே குறிப்பிட்ட பகுதியிலே ஓடுகளுக்குப் பதிலாக, 'போட்டோ வோல்ற்றைக்' கலங்களே பொருத்தப்படும். ஒரு குடும்பத்திற்குப் போதுமான 2.5 கிலோவாற்ஸ் தொகுதியை



இவ்வாறு பொருத்திக் கொள்வதன் மூலம், ஒருவருடத்திற்குக் கிட்டத்தட்ட 2.5 தொன் காபனீரொட்சைற் உருவாகுவதைத் தவிர்க்கலாம்.

**ஒளிவோல்ற்றா மின் கலங்கள் (Photovoltaic Cells)**

சிலிக்கன், காலியம் அர்சனைட் அல்லது வேறொரு அரைக் கடத்தி-பளிங்கினால் ஆக்கப்பெற்ற இரு வெவ்வேறு மெல்லிய தட்டுக்களினாலான ஒளிவோல்ற்றா (PV) மின்கலங்களிலே, ஒளிபடுவதினால் இலத்திரன்கள் தூண்டப்பட்டு, மின்சக்தி பெறப்படுகின்றது. இந்த அடிப்படையிலேயே ஒளிச்சக்தி நேரடியாகவே மின்சக்தியாக மாற்றப்படுகின்றது.

சிலிக்கன் அல்லது 'ஜெர்மனியம்' போன்ற பளிங்கு மூலகங்களின் அணுக்களிலே வழமையாக இலத்திரன்கள் 'கட்டுப்பட்ட' ஒரு நிலையிலேயே உள்ளன. இப்படியிருக்க ஒளிக் கதிர்களால் இந்த அணுக்கள் தூண்டப்பெற்ற நிலையிலே, ஒவ்வொரு அணுவுக்குள்ளும் 'சிறைப்பட்டிருந்த' இலத்திரன்கள் தங்களை விடுவித்துக் கொள்வதற்கான சக்தியைப் பெற்றுக் கொண்டு, குறித்த பளிங்கின் ஒரு அணுவிலிருந்து மற்றொன்றிற்கு தாவிக்கொள்ளத் தொடங்குகின்றன. தங்களை விடுவித்துக்கொண்ட இந்த இலத்திரன்களால் வெவ்வேறுபட்ட பளிங்குகளுக்கிடையிலான சந்தியினை ஊடறுத்துச்செல்லும் போது ஒரு திசையில் செல்வது அவற்றிற்கு சுலபமாக உள்ளது. இதன்படி குறிப்பிட்ட சந்தியின் ஒரு முனை மறையேற்றத்தினால் மறை-மின்னையும், மற்றையது நேரேற்றத்தினால் நேர்மின்னையும் பெற்று நிற்கின்றது. இவ்வாறாக மின் கலத்துக்குத் தேவையான இருவாய்களும் நமக்குக்கிடைத்து விடுகின்றன. இரு படைகளும் ஒளிக்கதிர்களைப் பெற்றுக்கொள்ளும் வரை, இந்த அடிப்படையில் ஒளிவோல்ற்றா (PV) மின்கலங்களால் மின்னை உற்பத்தி செய்துகொள்ள முடியும். இதைப்பயன்படுத்தி சூழல் வெளிச்சத்தினை அளந்துகொள்ளவும், சூரியமின்கலங்கள் மூலம் தேவையான மின்சக்தியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

வழக்கத்திலுள்ள ஏனைய சக்தி மூலங்களோடு ஒப்பிடுகையில், 'போட்டோ வோல்ற்றைக்' மின் கலங்கள் இன்னும் முழுமையான முதிர்ச்சி அடையவில்லை. இருந்தும் ஆரம்பக்கட்டங்களிலிருந்து அதன் தற்காலத்துக்கான பாய்ச்சல் மிகவும் நம்பிக்கை தரக்கூடியதாகவே உள்ளது. பூமியின் வளிமண்டலத்திற்கு வெளியே சூரியப்பார்வை கிடைக்கும் ஒரு சதுரகிலோமீற்றர் பரப்பளவில் கிடைக்கும் ஒளிச்சக்தி 1400 மெகாவாற்ஸ் மின்வலுவிற்கு இணையானது. தாம் பெறும் ஒளிச்சக்தியின் 30 விழுக்காட்டினை மின்சக்தியாக மாற்றக்கூடிய 'போட்டோ வோல்ற்றைக்' மின் கலங்கள் தற்போது விற்பனைக்கு வந்துவிட்டன. இனிவரும் காலங்களில் இவற்றின் வினைத்திறன் இன்னும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.



இரண்டு மில்லியன் மக்களைக் கொண்ட அமெரிக்காவின் மேற்கு மாநிலமான நெவாடாவின் 89% மான மின் சக்தி (1400 மெ.வா) இந்த நீர் வீழ்ச்சியில் இருந்து தான் பெறப்படுகிறது. இதன் விளைவலுவாகிய 1400 மெகா வாற்ஸ் அளவு பூமிக்கு வெளியிலே ஒவ்வொரு சதுரக்கிலோமீற்றர் பரப்பிலும் வீணாக்கிக் கொண்டிருக்கிறது. எங்கள் வளிமண்டலத்தை எட்டும் அரைவாசி கூட, முகில்களாலும் ஏனைய வழித்தடைகளாலும் உறிஞ்சப்பட்டு விடுவதால், தனது பெரும் பகுதியை இழந்து விடுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

1999 ஆம் ஆண்டு இலங்கை மொத்தமாக 6000 மெகா வாற்ஸ் மின்னை தனது தேவைகளுக்காக உற்பத்தி செய்ததென்பது ஒப்புநோக்கத்தக்கது.

வழமையிலிருக்கும் தீர்ந்து போகக்கூடிய சக்தி மூலங்களுக்கான மாற்றுவழிகளை, ஊக்குவிக்கும் முகமாக ஜேர்மனி தனது மக்களிடையே பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒருசில விரல் விட்டு எண்ணக்கூடிய நாடுகளைத் தவிர ஏனையவை இத்துறையில் பெரிதாக ஆர்வம் காட்டாத காரணத்தினாலே, இத்துறைசார் ஆராய்ச்சிகளையும், உற்பத்திகளையும் தன்னளவில் முடுக்கிவிட்டுள்ளது. இதனால் இது பற்றிய தொழில்சார் அனுபவத்தினையும், ஒப்பற்ற நிபுணர்களையும் பெற்றுக்கொள்ள முடிவதுடன், சர்வதேச அளவில் இந்தப் பாய்ச்சலால் தனது பேரில் பல 'காப்புரிமை'களையும் பதிந்து கொள்ளலாம் என்ற தீர்க்கதரிசனம், இன்று வேறு சில நாடுகளாலும் உணரப்பட்டுப் பின்பற்றப்படுவது, மொத்தத்தில் சூரியமின்சக்தியைப் பயன் படுத்திக்கொள்ள விரும்பும் ஒவ்வொருவருக்கும் இவ்வாறான 'உற்பத்தியாளர்களுக்கிடையிலான போட்டி' மகிழ்ச்சி தரும் செய்தியே!




# ஒரு பெண் தாயாகிறாள்...

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் தாய்மை அடைவது என்பது மிக சந்தோசமான விடயமே. இந்த காலத்தில் அவளது உடலில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த மாற்றத்தால் முதலில் கருத்தரிக்கின்ற பெண் பயப்படுகிறாள். அல்லது வெறுப்படைகின்றாள். அதிலும் குறைந்த வயதில் திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் இதனால் எதுவும் புரியாமல் விழிக்கின்றனர். காரணம் அவர்களே ஒரு குழந்தை நிலையில் உள்ளபோது அவர்கள் ஒரு குழந்தைக்குத் தாயாக மாறுகின்ற நிலைமையில் விபரம் தெரியாமல் கஷ்டப்படுகின்றனர். எனவே அவ்வாறானவர்கள் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றங்களை அறிந்துகொள்வது நல்லதல்லவா?

நீங்கள் கருவுற்றபின் முதல் மூன்று மாதங்களில் அதாவது பதினான்கு வாரத்தில் எந்த நேரத்திலும் வாந்தி எடுப்பதற்கான உணர்வு ஏற்படும். அல்லது சில வேளைகளில் வாந்தி எடுக்கலாம். இதற்கு உங்கள் உடலில் மாறும் ஓமோன்களே காரணம். அத்தோடு உங்கள் மார்பகம் தாய்ப்பால் கொடுக்க தயாராகின்ற நிலையில் வீங்கும் அல்லது மிருதுவாகும். மேலும் மூக்கடைப்பு, சோர்வு, அடிக்கடி சிறுநீர் கழித்தல், உடலில் சிலவேளைகளில் மச்சங்கள் தோன்றலாம். வயிற்றில் குழந்தை வளர வளர கருப்பை வளர்ச்சி அடைந்து அது சிறுநீர்ப்பை அழுத்துவதால் அடிக்கடி சிறுநீர் கழிக்கும் உணர்வு தோன்றும். மேலும் அதிக சக்தி குழந்தை வளர்ச்சிக்குப் பயன்படுவதால் சோர்வு நிலையும் ஏற்படும். அடுத்து இரண்டாவது மூன்றாவது மாதத்தில் ஏற்படும் மாற்றங்கள் இவை.

முதல் மூன்று மாதகால மாற்றங்கள் மறைந்துகொண்டு செல்ல நீங்கள் ஆரோக்கியமான உணர்வை பெற்றுக்கொள்வீகள் மற்றும் உங்கள் இடுப்புப்பகுதி தடிப்பாகின்ற அதே சமயம் அடிவயிறு வட்டமாவும் மொத்தமாகவும் மாறுகின்றது. மேலும் நெஞ்சு எரிவு ஏற்படும் இதற்குக் காரணம் கர்ப்பப் பை வளரும் போது வயிற்றை அழுத்துவதால் உணவு செல்லும் குழாய்களையும் அது அழுத்துகிறது. இதனால் வயிற்றில் அதிகளவான அமிலம் உற்பத்தியாவதே காரணம். அத்தோடு மார்பகம், வயிற்றுப் பகுதி தோள்களில் சில மாற்றமும் ஏற்படும். மேலும், வயிற்றில் மெதுவாக உதைப்பது போன்று உணர்வு ஏற்படுகிறது. இதற்குக் காரணம் குழந்தை வயிற் றில் அசைவதாகும்.

இனி மூன்றாவது மூன்று மாத காலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கவனிப்போம்.

உங்கள் முதுகுப் பகுதியில் உள்ள தசைநார்கள் மற்றும் தசைகள் மீது அழுத்தம் அதிகமாவதால் முதுகு வலி ஏற்படும். மேலும், மூச்சு திணறல் ஏற்படும். காரணம் சுவாசப்பை விரிந்து கொடுப்பது இல்லை. அத்தோடு உங்களுக்குத் தேவையான அளவு வாயு கிடைக்காமையாகும். இவற்றோடு உறங்குவதில் சிக்கல். எடை அதிகரிப்பு, என்பவற்றோடு குழந்தையின் முழுமையான அசைவையும் உணர்வீர்கள். இவையே கர்ப்ப காலத்தில் உங்கள் உடலில் ஏற்படுகின்ற மாற்றங்கள். இவற்றை தெரிந்து வைத்திருந்தால் இந்தச் சுமை சுகமானதாகவே இருக்கும். தாய்மை அடையும் அந்நாளை மகிழ்வுடன் எதிர்பார்த்த வண்ணம் இருப்பீர்கள்.

# காது கேட்கும் திறனை அதிகரிக்கும் உப்பு

காது கேட்கும் திறனை அதிகரிக்கும் சக்தி அயடீன் உப்பில் அதிகம் உள்ளது.

அயடீன் உப்பு காதிலுள்ள கேசெல்லா என்ற உள எலும்புகள் வலுப்பெற உதவுகின்றன இவ்வுப்பில் தைரொக்சின் எனும் ஹொர்மோனை உற்பத்தி செய்யும் சத்து உள்ளது. இந்த ஹொர்மோன் மூளையில் வளர்ச்சியையும், செயல்பாட்டையும் தூண்டும் ஆற்றல் படைத்தது. மூளையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இருதய தசைகளின் வலிமைக்கு உதவுகிறது.



குடிக்கிற நீரில் அயடீன் சத்து நமக்குத் தேவையான அளவு இருக்கிறது என்பது பலருக்கு தெரியாது. இது தைரொய்டு சுரப்பி சுரப்பதை சமநிலைக்குக் கொண்டுவந்து உடலில் இயக்கங்களை கட்டுப்படுத்தி உடலில் சதை பிடிப்பதை குறைக்க உதவுகிறது.

அயடீன் உப்பு, கடல் உப்பு, முட்டை, முள்ளங்கி, நூல் கீரை, முலாம்பழம், அன்னாசிப்பழம், பேரிக்காய், நெல்லிக்காய், ஒரேஞ்சு, போன்றவற்றில் உள்ளது.

# மனித மூளையில் உள்ள டி.எச்.ஏ மீன்களில் அதிகளவு உள்ளது

மனித மூளையில் உள்ள கொழுப்புப் பொருளில் 25 சதவீதம் டி.எச்.ஏ. என்ற அமிலப் பொருள் உள்ளது. இந்த டி.எச்.ஏ. மீன்களிலும் அதிக அளவு உள்ளது. எனவே மீன்களை உண்ணும் போது நமது மூளை சிறப்பாக வளர்ச்சிபெறுகிறது. மூளை மற்றும் நரம்பு மண்டலத்தை பலப்படுத்துகிறது. அத்துடன் கண் பார்வையும் மீன் உணவு மேம்படுத்துகிறது.

கர்ப்பிணிகள் குழந்தை பெற்ற தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்கு மீன் இன்றியமையாத உணவு என்றும் கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மார்களும் வாரத்துக்கு குறைந்தது மூன்று முறையும், மற்றவர்கள் இரண்டு முறையும் மீன் உண்ண வேண்டும்.

வளர்ந்த ஆண், பெண்களுக்கு மன இறுக்கம், ஆவேச மனோபாவம் உள்ளிட்ட மன நோய்கள் டி.எச்.ஏ பற்றாக்குறையால் ஏற்படுபவை. எனவே அதற்கும் மீன் உணவு மருந்தாகப் பயன்படுகிறது.

# தடங்களைப் பற்றியபடி...



ஆனையிறவு அன்று எமது கைகளில் இல்லையென்பதால் சென்றவர். வந்தவர் எல்லாம் எம்மை அடக்கியாள இறுதியில் சிங்களமும் தன் அட்டூழியத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தது. ஈழத்தாயவளின் தொண்டைக் குழியினைத் திருகிக் கொண்டிருந்த அந்த இராணுவ முகாம் எம் தாயவள் மேனியைப் புண்படுத்திக்கொண்டிருந்தது. எப்போது மீட்பர்கள் வருவார்கள்? எப்போது என்னை மீட்டெட[illegible]கள்? என ஆதங்கப[illegible]கொண்டிருந்தது ஆனையிறவு மண்.

என்றைக்கும் போலவே அன்றைக்கும் கரிய இருளிற்குள் புதைந்து போயிருந்த அந்தக் கரும்புலிகள் பாசறையில் சிரிப்பும் கும்மாளமும் நிறைந்து மெதுவாக மேனிவருடிச்சென்ற தென்றலூடே கரைந்து சூழலிற்குள்ளும் பரவிக்கொண்டிருந்தது. ஒரு சிலர் முகமலர்ச்சியுடன் இருக்க ஏனையோர் முகம் இருண்டு ஏதோ சோகங்களை நெஞ்சுக்குள்ளே புதைத்து அதை மறைத்தபடி இன்னும் சிறிது நேரத்தில் தங்களை விட்டு நிரந்தரமாகவே பிரிந்து செல்லப்போகின்ற அந்தக் கரிய புலிகளை மகிழ்விக்க சிரித்து நகைச்சுவையாக கதைத்தபடி இருந்தனர்.

தூரத்திலே ஒரு வாகனத்தின் இரைச்சல்.... வரவர அச்சத்தம் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் அவர்களின் கலகலப்பு அமைதியாகி விடும், அந்த வாகனம் கரிய வேங்கைகளை சுமந்து செல்லும், அவர்கள் தேசப் புயல்களாய் வீசி வெற்றிகரமாக பணி முடிப்பார்கள், சிலர் கந்தகத்துடன் சங்கமமாகிவிட ஏனையோரை சுமந்தபடி அவ் வாகனம் முகாம் ஏகும்.

தலைவன் சுட்டுகின்ற பணியை செய்து முடிக்கின்ற நேரம்தான் கரும்புலிகளினது உன்னதநேரம். அந்தப் பணி முடிக்கப்போகின்ற நேரம் குறுகி மிக அருகில் வந்தபடி இருந்தது. எல்லாப்போராளிகளும் மாறிமாறிவிடைபெற்றுக் கொள்கின்றனர். ஆசை முத்தங்களிற்குள்ளும், ஆரத்தழுவல்களிற்குள்ளும் சிக்கி அவ்வீரர்கள் திணறிக் கொண்டிருந்தார்கள். பலருக்கு அதுதான் கடைசி முத்தம்.

எல்லோரும் அந்த வாகனத்தில் ஏறி அமர்ந்துகொள்கின்றனர். பிரியாவிடைக்குள் திளைத்திருந்த சுபேசனும் ஏறி அமர்ந்து கொள்கிறான். வாகனம் புறப்பட இன்னும் சிறிது நேரம் இருந்தது. அப்போது சுபேசனிற்கு ஓர் இன்ப அதிர்ச்சி! ஆம் அங்கே அவன் ஊட்டிவளர்த்த ஆசை தங்கை, அண்ணன் இயக்கத்திற்கு வந்ததும் அண்ணனைப் பிரிந்திருக்க மாட்டாமல் பிஞ்சு வயதிலேயே இயக்கத்திற்கு வந்தவள் அவள். இன்று தன் அண்ணன் பிரிந்து செல்லப்போவதை அறிந்து அந்த வாகனத்தின் அருகிலே... வாகனம் புறப்பட இன்னும் சிறிது நேரம் இருந்தது, தன் ஆசை தங்கையுடன் இறுதியாகச் சில வார்த்தைகள் கதைத்துவிட சுபேசன் துடித்தான். வார்த்தைகள் வர மறுத்தன. இரும்பு மனிதர்கள் என்று உலகம் வியர்ந்தாலும் அருகில் இருப்பவர்களுக்குத்தானே தெரியும் அவர்களின் இளகிய நெஞ்சம்.

சுபேசன் தான் அந்த மௌனத்தை உடைத்தான் "என்ன தங்கச்சி ஒன்றுக்கும் யோசிக்காதேங்கோ எல்லாத்துக்கும் அண்ணை இருக்கிறார்" மனதுக்குள் எரிமலை குமுறிக்கொண்டிருந்தாலும் ஒவ்வொரு வார்த்தையையும் நிதானமாகவே உச்சரித்தான். ஆனால், தங்கையினது மனமோ "அண்ணன் சீனன் குடா தாக்குதலுக்குச் சென்று தப்பி வந்தது போல இம்முறையும் தப்பிவரவேணும்" என பிரார்த்தித்துக் கொண்டிருந்தது. சுபேசனின் உதட்டில் சிறுபுன்னகை இறுதியாக தன் ஆசை தங்கையிடமும் எதிர்பார்த்தது அதைத்தான். அந்த பாசஉறவு எப்படி புன்னகைக்கும், ஆனாலும் அண்ணனை திருப்திப்படுத்துவதற்காக கஷ்டப்பட்டு போலியாக புன்னகைத்தாள்.

வாகனம் மெதுமெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. அந்தக் கரிய புலிகளிற்கும் வழியனுப்ப வந்தவர்களுக்குமிடையிலான தூரம் அதிகரித்துக் கொண்டிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் அது நிரந்தரமானதாகவே மாறிவிடும். இறுதியாக தங்கையின் முகத்தை ஒருமுறை பார்த்துவிட சுபேசன் துடித்தான். வாகனக்கண்ணாடியின் ஊடாக டோச்சை அடித்து தங்கையின் முகத்தைப் பார்க்கிறான். அவளின் முகம் வாடிப்போய் கண்களில் நீர் துளிகள் கசிந்துகொண்டிருந்தன. மனதை எவ்வளவு கல்லாக்கினாலும் அந்தக் கல்லும் கசியத்தானே செய்யும். இறங்கி மீண்டும் ஒருமுறை அவளை ஆறுதல் படுத்த மனம் விரும்பினாலும் தேசம் எதிர்பார்க்கின்ற, தலைவர் எதிர்பார்க்கின்ற பணி பாசத்தால் பிந்திவிடக்கூடாது என அவன் மனம் எண்ணியது. அவ் ஆசையை மனதிலே புதைத்துக் கொள்கிறான். கண்களில் கசிவை விடப் பிரகாசமே அதிகரித்திருந்தது.

தலைவர் ஒரு போராளியை எப்படி வளர்க்கவேண்டும் என விரும்பினாரோ அவர் எண்ணத்தின் பிரதிபலிப்பாக திகழ்ந்தவன் சுபேசன். கனரக ஆயுதங்களை இலாவகமாகவும், நேர்த்தியாகவும் குறிபார்த்து சுடுவதில் வல்லவனாக திகழ்ந்த சுபேசனின் ஆழ் மனதிலே தான் கரும்புலிகள் அணியிலே இணைந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் வளர்ந்து கொண்டே இருந்தது. தனது உடல்நோ, கடினத்தன்மை என்பவற்றால் எந்தக் கடமையிலிருந்தும் ஒதுங்கிப் போகாதவன் சுபேசன். ஒருமுறை ஆனையிறவு தளத்தினிலே இலக்கு ஒன்றை வேவுபார்த்து உறுதிப்படுத்துவதற்காக உள் நுழைந்தது சுபேசனின் அணி. எதிர்பாராத விதமாய் எதிரி அவர்களைக் கண்டுவிட வேவு அணி தாக்குதலில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம். ஆனாலும் சண்டைசெய்வதை விடுத்து காப்புச்சூடுகளை வழங்கியப்படி அணி பின்வாங்கியது. அதில் சுபேசனிற்கு தோல் மூட்டில் காயம் ஏற்பட்டது. அன்றில் இருந்து கடுமையான வேலைகளில் அல்லது பயிற்சிகளில் ஈடுபட்டால் மூட்டு கழன்றுவிடும், உயிர்போகின்ற வலி எடுக்கும். ஆனால், அவன் கடமையிலிருந்தோ பயிற்சியிலிருந்தோ ஒருபோதும் ஒதுங்கியதில்லை.

1993 இல் கரும்புலிகள் அணியில் இணைந்து கொண்ட சுபேசன் 1998.02.01 வீரச்சாவடையும் வரைக்கும் இலட்சியம் ஒன்றையே நெஞ்சிலிருத்தி அதற்காகவே அல்லும் பகலும் தன்னை உருக்கி மெருகூட்டிக் கொண்டிருந்தான். அவனது நெஞ்சம் இளகியது. போராளிகளோடு, மக்களோடு பழகுகின்ற போது அவன் அவர்களுடன் கரைந்தே போய் விடுவான். அவர்கள்படும் சிறுதுன்பத்திற்காய்க் கூட கண்ணீர் சிந்துவான்.

ஆனையிறவை மீட்பதற்காய் நடந்த ஆகாயக் கடல் வெளித் தாக்குதலில் தோல்வியின் விளிம்பிற்கு வந்த இராணுவம் இறுதியில் வெற்றிலைக் கேணியில் தரையிறங்கி ஆனையிறவு நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அதை மறித்து சண்டையிட்ட அணிகளில் வேவு அணியின் ஒரு தலைவனாக சுபேசனும் நின்று கொண்டிருந்தான். முதல்நாள் வேவிற்குச் சென்ற சுபேசன் அன்று சண்டை திட்டமிடல் காரணமாக முகாமில் தங்கிவிட அவனது அணியினர் வேவிற்குச் சென்றனர். உணவு விநியோகம் என்பது அந்தப்பகுதிகளில் முற்று முழுதாக பாதிக்கப்பட்டிருந்தது. அவனது அணிக்கென இரண்டு உணவுப்பொதிகள் கொடுக்கப்பட பசி வயிற்றைப்பிடுங்கி அமிலம் அபரீதமாகச் சுரந்து உடல் எங்கும் அதன் பிரதிபலிப்புத் தெரிந்தாலும் பசித்துக்களைத்து வரும் தன் தோழர்களுடன் உண்பதற்காய் அப்பொதிகளை வைத்துவிட்டுகளைப்பாலே கண்ணயர்ந்துவிட்டான். அணிகள்வர அவன் உணவுப் பொதிகளைப் பார்த்தபோது அது யாராலேயோ தெரியாத்தனமாக உண்ணப்பட்டிருந்தது. அன்று விம்மி விம்மி அழுத அவனது அழுகையை யாராலேயும் கட்டுப்படுத்தவோ, தேற்றவோ முடியவில்லை. இப்படியாகத் தோழர்களிற்காய் அழுகின்ற மென்மையான மனது அவனுடையது.

எந்த நேரத்திலும் தன்னைப் பற்றி சிந்திக்காது மற்றவர் படும் துன்பத்திற்காய் விழி நீர் சிந்தும் இதயம் அவனிற்குத்தான் சொந்தம். நாட்டிற்காகவே சுவாசித்து, நாட்டிற்காகவே வாழ்ந்து இறுதியில் அதற்காகவே மடிந்த அந்த அற்புதமான உணர்வுகளிற்குச் சொந்தக்காரன் அவன். அவன் மனதுக்குள் யாராலும் ஆழம் காண முடியாது வேரோடியிருந்த இரக்கமும், அன்பும் இறுதிவரை அழிக்க முடியாத ஒன்றாகவே இருந்தது.

அந்த நள்ளிரா நேரத்தில் வளைந்து, நெளிந்த கிரவல் வீதிகளில் குலுக்கலுடன் ஓடிக் கொண்டிருந்த வாகனம் திடீரென அமைதியாகியது. அந்த இடத்திலிருந்து தான் கரும்புலிகள் தமது இலக்கை நோக்கி நகரப் போகிறார்கள்.



கரும்புலி மேஜர் குமுதன் தலைமையிலான சுபேசனின் அணி இலக்கை நோக்கி நகரத்தொடங்கியது. இலக்கினை அழித்துவிட வேண்டும், இலக்கினை அழித்துவிட வேண்டும் எனத் துடித்துக் கொண்டிருந்த மனங்களைப்போலவே அவர்களின் கால்களும் இலக்கின் திசை நோக்கி நிதானத்துடன் கூடிய வேகம் எடுக்கின்றன.

குறிப்பிட்ட நேரத்தில் வெடியதிர்வுகள் ஆனையிறவு வெட்டைவாண வேடிக்கைக்களமாகியது. அவ் வீரர்கள் இலக்கின் திசை நோக்கி தாக்குதலை செறிவாக்கியபடி முன்னேறிக்கொண்டிருந்தனர். இரவின் அமைதி கலைந்து எங்கும் குண்டுச் சத்தங்களே எதிரொலித்துக் கொண்டிருந்தன.

சுபேசனுடன் சென்ற அணி தனது பணியை முடித்து விட்டு குமுதனிற்கு அறிவித்தது. அங்கிருந்து பின்வாங்கும் படி கட்டளை கிடைத்தது. ஆளையாள் இனங்காணமுடியாத கும்மிருட்டில் , அதைவிட ரவைகளின் சீறல் அதன் மத்தியிலும் அணிகள் பின்வாங்கிக் கொண்டிருந்தன. அவ்வணியில் சுபேசனில்லை "சுபேசன், சுபேசன்..." பதில் இல்லை. சிறிது தூரத்திலே ஒரு உருவம் ஆம் அது சுபேசன் தான் மார்பிலும், காலிலும், பெரிய காயத்துடன் விழுந்துகிடந்தான் அவ் வீரன். அந்த இக்கட்டான நேரத்திலும் காயத்துடன் கிடந்த சுபேசனை வீரன் ஒருவன் தூக்கமுயல "வேண்டாம் என்னை தூக்கவேண்டாம் நீங்களும் காயப்படவேண்டாம் என்னை விட்டிட்டு விக்ரோ பண்ணுங்கோ" சுபேசன் உறுதியாய்க் கூறினான்.

ஆனாலும் யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாத கட்டளையல்லவா. அது எப்படி முடியும் அவர்களால். அதை நினைத்துப்பார்க்கவே நெஞ்சம் வெடித்தது. எல்லோருக்கும் தாயும், தந்தையுமாய் எமது துயரங்களில் கண்ணீர் சிந்தும் உற்ற தோழனாய் நின்றவனை அந்த நள்ளிரவில் பகைகளின் மத்தியில் விட்டுவிட்டு வரஎப்படி முடியும். இப்பொழுதும் விட்டுவிட்டால் இனி எப்போதும் காணமுடியாதே....

"நீங்கள் நிறையச் சாதிக்கோணும் என்னைப்பார்க்காமல் போங்கோ. நான் சார்ஜ் இழுக்கப் போறன்." அந்த நேரத்தில் அதைத் தவிர வேறு எந்த முடிவும் எடுக்க முடியாது. ஆனால் அவர்களால் அதை ஜீரணித்துக்கொள்ளமுடியாதிருந்தது. சுபேசனும் எடுக்கும் முடிவில் உறுதியானவன். சுபேசனை விட்டு அணிகள் பின்வாங்கிக் கொண்டிருந்தன.

இன்னும் சில கணங்களில் சுபேசன் காற்றுடன் கலந்து எல்லோர் மனங்களிலும் நிறையப்போகிறான். நேரம் நகர்ந்துகொண்டிருக்க ஒரு பெரிய ஒளி வெள்ளம், பூகம்பமாய் அதிர்வு அவன் நேசித்ததேசம்,மக்கள், ஆசைத்தங்கை, எல்லாவற்றிற்கும் மேலாய் தலைவர் ஒரு கணம் விம்பமாய் மனத்திரையில் தெரிய "புலிகளின் தாயகம் தமிழீழத்தாயகம் என்ற தாரகமந்திரம் அவன் கரைந்த அந்தக் கந்தகப்புகையுடன் சேர்ந்து ஆனையிறவுப் பெரு வெளியிலிருந்து தமிழீழம் பூராகவும் பரவிக்கொண்டிருந்தது.

அண்ணா!....
உன் பெயர் சுமந்த பட்டறையில் -
இன்று
ஆயிரம்,ஆயிரம் அக்கினி சுமந்த
செந்தழல்களாய் நாங்களும்
நீ தொட்ட தடங்களைப் பற்றியபடி
எம் சுவடுகளும்...
எம் உள்ளத்தில் வீரேற்றி
எதிரிக்கு விடை தேட
எம் நெஞ்சில் உரமேற்றிய
கரிய புலியே
உன் நினைவை சுமந்த படி
பயணிக்கிறோம்.
என்றும் எம் அருகிருப்பாயாக...




# சுற்றுலா



முகுந்தனுக்கு எல்லாமே கனவு போல இருந்தது. எவ்வளவு சுவையான மறக்கமுடியாத அனுபவங்கள். ஐந்து நாட்களும் எவ்வாறு கழிந்தன என்றே தெரியவில்லை. இந்தத்தடவை முதலாம் தவணை விடுமுறையின் போது பத்தாம், பதினோராம் வகுப்பு மாணவர்கள் எல்லோரையும் திருகோணமலைக்கு ஐந்து நாட்கள் கல்விச் சுற்றுலா அழைத்துச்செல்ல எமது கல்வி நிலையம் முடிவு செய்துள்ளது. சுற்றுலாவில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் ஆயிரம் ரூபா பணம் செலுத்துங்கள். செவ்வாய்க் கிழமை காலை ஒன்பது மணிக்கு எமது சுற்றுலா ஆரம்பிக்கிறது என்று கல்வி நிலைய இயக்குநர் அறிவித்த போது மாணவர்களின் சந்தோச ஆரவாரத்தால் கல்வி நிலையமே சில நிமிட நேரம் அதிர்ந்தது. அப்போது முகுந்தனுக்கு மட்டும் அது பேரிடியாக இருந்தது.

இருநூறு முன்னூறு ரூபாய் என்றால் பரவாயில்லை. ஆயிரம் ரூபாய்! ஐயாவால் கொடுக்க முடியுமா? அவர் கொடுப்பாரா? அவரிடம் எப்படிக் கேட்பது? எல்லா மாணவர்களும் பணம் கட்டி சுற்றுலா செல்லும் போது நான் மட்டும் பணம் கட்டாவிட்டால் அவர்கள் என்ன நினைப்பார்கள். அதன் பின்பு எந்த முகத்துடன் தொடர்ந்து கல்வி நிலையம் செல்வது?

எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தில் முகுந்தன் தான் தலைப்பிள்ளை. அம்மா, ஐயாவை விட அவனுக்குக் கீழே மூன்று தங்கைகளும், இரண்டு தம்பிகளும் இருக்கிறார்கள். எல்லோருடைய சீவியமும் ஐயாவின் கூலி உழைப்பை நம்பித்தான் நடந்து கொண்டிருக்கிறது. முகுந்தன் தலைப்பிள்ளை மட்டுமல்ல அவன்தான் ஐயாவின் செல்லப்பிள்ளையும் கூட. எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அது அவனுக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. அவனுக்கு வரும் எந்தப் பிரச்சினையையும் ஐயா தீர்த்து வைத்துவிடுவார். பாடசாலையில் படிப்பிலும் விளையாட்டிலும் எப்போதுமே அவனுக்குத்தான் முதலிடம்.

உங்கள் மகன் நல்ல கெட்டிக்காரன். ஒரு காலத்தில் பெரிய ஆளாக வருவான் நன்றாக படிக்கிறான். ஆனாலும் எங்கள் பாடசாலையில் எல்லாப் பாடத்திற்கும் ஆசிரியர்கள் இல்லை, குறிப்பாக கணித பாடத்திற்கும் ஆங்கில பாடத்திற்கும் நல்ல ஆசிரியர்கள் இல்லை. சிரமத்தைப் பார்க்காமல் அவனை ஒரு தனியார் கல்வி நிலையத்திற்கு அனுப்பிப் படிக்க வையுங்கள் என்று ஒரு நாள் அவனுடைய வகுப்பாசிரியர் வீட்டில் தென்னை மரங்களுக்கு அதர் வெட்டப் போனபோது அவனுடைய வகுப்பாசிரியர் ஐயாவிற்கு சொல்லிவிட்டாராம். அன்றிலிருந்து அந்த ஆறாம் வகுப்பிலிருந்து இன்றுவரை இந்த பத்தாம் வகுப்புவரை முகுந்தனும் ரியூசனுக்குப் போகிறான். அவனுக்கு எது வேண்டுமென்றாலும் கொப்பியோ புத்தகமோ உடுப்புகளோ எதுவானாலும் ஐயா எப்படியும் வாங்கிக் கொடுத்துவிடுவார். வீட்டில் அவனை ஒரு வேலையைக் கூட செய்யவிடமாட்டார். இதனால் ஐயாவிற்கும், அம்மாவிற்கும் இடையில் எத்தனையோ முறை சண்டை கூட வந்திருக்கிறது.

அவனுடன் கூடப் படிப்பவர்கள் எல்லோருடைய வீடுகளிலும் அவர்களுடைய தகப்பன் மாரை அவர்கள் அப்பா என்று அழைப்பதை முகுந்தன் அவதானித்திருக்கிறான். ஆனால் அவனுக்கு மட்டும் அவனுடைய தந்தை ஐயா என்ற வடிவிலேயே விபரம் தெரிந்த நாள் முதல் அறிமுகமாகியிருக்கிறார். இது ஏன் என்று அவன் ஆராய்ந்ததும் இல்லை அதைப்பற்றி கவலைப் பட்டதும் இல்லை. கல்வி நிலைய இயக்குநரின் விரும்பத்தகாத... விருப்பமிருந்தாலும் விரும்பக் கூடாத அந்த அறிவிப்பைக் கேட்டுக்கொண்டு வீடு வந்தவன் அன்றிரவு சாப்பிடவுமில்லை. பசிக்கவில்லை என்று அம்மாவிடம் கூறிவிட்டு படுத்துவிட்டான். மனது ஒரேயடியாக உடைந்துபோய் இருந்தது. நூறா, இருநூறா? ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று பாவம் ஐயாவை எப்படிக் கேட்பது? ஒரேயடியாக அவ்வளவு பணத்திற்கு அவர் எங்கே போவார்? அவர் சம்மதித்தாலும் அம்மா விடுவாளா? ஷெல் வீச்சினால் இடம் பெயர்ந்து சென்று மீண்டும் இடம்திரும்பி இப்போது இருக்கும் இந்த சிறிய வீட்டைக் கட்டவே ஐயா எத்தனை பேரிடம் கடன்பட்டு விட்டார். அவை எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கூலி வேலை செய்துதான் அடைக்க வேண்டுமாம்.

மன உளைச்சலோடு படுக்கையில் புரண்டு கொண்டிருந்தபோது, அடுப்படியில் பெரியவன் சாப்பிட்டுவிட்டானா? என்ற ஐயாவின் விசாரிப்புக் குரல் கேட்கிறது. அவனைப் பெரியவன் என்றுதான் ஐயா எப்போதும் கூப்பிடுவார். அதற்கு அம்மா கூறிய பதிலைக் கேட்டாரோ கேட்கவில்லையோ தெரியாது ஐயா மோப்பம் பிடித்துக்கொண்டு அவனது

## புதுக்கவி

படுக்கைக்கே வந்து விட்டார். என்ன நடந்தது? பிரச்சினையைச் சொல் என்ற ஐயாவின் கேள்வியைத் தட்ட முடியாமல் முகுந்தன் மெது மெதுவாக விடயத்தை கூறினான். அட மடையா இவ்வளவுதானா? நான் பெரிதாக நினைத்து பயந்து விட்டேன். கவலைப்படாதே இரத்தினம் விதானையாருக்கு ஆயிரம் கண்டு கத்தரித்தறை கொத்த வேண்டுமாம். இப்போதுதான் ஓடர் கொடுத்தார். நாளைக்கு அவரிடம் போய் முற்பணமாக வாங்கி வந்து தருகிறேன். நாலு, ஐந்து, நாட்களில் வேலை செய்து கழித்து விடலாம். இப்போது எழும்பிவா சாப்பிடு- சொல்லியது போல அடுத்தநாள் காலையிலேயே ஐயா ஆயிரம் ரூபாய் கொண்டு வந்துவிட்டார். இவ்வளவு கடன் இருக்கும் போது இப்போது இதுதான் ஒரு குறைச்சலா என்று அம்மா முணுமுணுத்த போது 'அடியே கூடப் படிக்கும் எல்லாரும் போகும் போது அவன் மட்டும் போகாமல் நிற்பதா? அவன் என்ன வெட்டிப் பொழுது போக்கவா போகிறான். ஊர் சுற்றிப் பார்க்க அதுவும் கல்விச் சுற்றுலாதானே போகிறான். திரும்பவும் பிரச்சினை வந்தால் இப்படிப்போய் ஊர் பார்க்க முடியுமா? ' என்று அதட்டி அம்மாவை அடக்கிவிட்டார்.

சுற்றுலா புறப்படும் போது பயணமனுப்ப வந்தவர் அம்மாவிற்கு தெரியாமல் இடுப்பு மடிப்பில் வைத்திருந்த கொஞ்சப் பணத்தையும் (இருநூற்று ஐம்பது ரூபாய்) எடுத்துக்கொடுத்து இந்தா இதை கைச் செலவிற்கு வைத்திரு என்று கூறி அனுப்பி வைத்தார். திருகோணமலையில் கோணேசர் கோயில், கன்னியாய் வெந்நீர் ஊற்று, துறைமுகம், நிலாவெளிக் கடற்கரை, புறாமலை, வடக்குக் கிழக்கு கல்வி அமைச்சு அலுவலகம் எல்லாமே பார்த்தாகிவிட்டது. நெல்சன் தியேட்டரில் படமும் பார்த்து விட்டார்கள். இப்படியொரு சுகமான அனுபவம் இனிமேல் கிடைக்குமா? ஊர் திரும்பும் போது வீட்டாருக்கென்று முகுந்தன் எதுவுமே வாங்கி வரவில்லை. வாங்குவதற்குப் பணமும் இருக்கவில்லை. ஐயா தறை கொத்தும் போது போட வேண்டுமென்று எழுபத்தைந்து ரூபாவிற்கு ஒரு தொப்பி மட்டும் முதலிலேயே வாங்கி வைத்துவிட்டான்.

ஊரை அடைந்த போது பிற்பகல் மூன்று மணிக்கு மேலாகிவிட்டது. பயண அலுப்புடன் வீட்டு வாசல்வரை வந்தவன் வீட்டு வாசலில் திரண்டு நின்ற சனக்கூட்டத்தை பார்த்து திகைத்துவிட்டான். என்ன இது? இவ்வளவு சனக்கூட்டம்? வாசலில் வாழைமரம், தோரணங்கள் யாருக்கு என்ன நடந்தது? எவரும் எதுவும் சொல்கிறார்கள் இல்லை. ஏதோ பாவப்பிறவியை பார்ப்பது போல எல்லோரும் அவனையே பார்க்கிறார்கள்! என்ன நடந்தது என்று அறிவதற்காக உடுப்புப் பெட்டியையும் போட்டுவிட்டு உள்ளே ஓடியவனை பக்கத்து வீட்டு செல்லாச்சிக் கிழவிதான் ஓடி வந்து கட்டிப்பிடித்தாள்.

"ஊர் பார்க்கப் போன மகராசா உன் ஐயாவின் கோலத்தைப் பார்த்தாயா?"

நிலைமை புரிந்தும் புரியாத நிலையில் குச்சு விறாந்தையில் குத்துவிளக்கின் முன்னால் கிடந்த ஐயாவின் முகத்தை பார்த்து ஐயா என்று அலறியவன் அப்படியே விழுந்துவிட்டான்.

சுடலைக் காரியங்கள் முடிந்து வீடு வந்தபோது வீடு கூட்டி மெழுகப்பட்டிருந்தது. ஒரு சில நெருங்கிய உறவுகளைத் தவிர எல்லோருமே வீடு சென்றுவிட்டார்கள். வீடு வெறிச்சோடிக் கிடந்தது.

'என்ரை ஐயா எப்படி ஐயா எங்களை விட்டுப் போனாய் நாங்கள் இனி எங்கை ஐயா போவம்'- அடுப்படிக்குள் இருந்து அம்மா புலம்பிக் கொண்டிருக்கிறாள். முகுந்தனுக்கு ஏனோ அழுகையே வரவில்லை. ஐயா இவ்வளவு விரைவில் அவனை விட்டுப் போய்விட்டார் என்பதை அவனால் நம்ப முடியவில்லை.

இரத்தினம் விதானையாரின் கத்தரித்தறை கொத்தும் போது நிலத்தில் புதைந்து கிடந்த ஷெல் குண்டின் மேல் ஐயாவின் மண்வெட்டி பட்டுவிட்டதாம். ஐயாவை தூக்கி வந்த போது அவரின் இடுப்புக்குக் கீழே எதுவுமே இருக்கவில்லையாம். பிரமை பிடித்தவனாக வீட்டு முற்றத்தையே பார்த்துக் கொண்டிருந்த அவனது பார்வையில் அது பட்டது... என்ன அது? முற்றத்து மாமரத்தின் கீழே பிடி சிதறியபடி கிடப்பது ஐயாவின் மண்வெட்டியா? தன்னையே மறந்த நிலையில் ஓடிச் சென்று அதை எடுத்தவன் முதன் முதலாக ஐயா என்று அலறிவிட்டான். ஐயா உண்மையிலேயே போய்விட்டார். அவர் இருந்தால் இந்த மண்வெட்டி முற்றத்தில் இப்படிக் கிடைக்குமா? சேறும் சகதியுமாகத் தோட்டத்து மண் அப்பியபடி...... ஐயா ஒவ்வொரு நாளும் வேலை முடிந்ததும் எவ்வளவு பக்குவமாக அதை செதுக்கித் து[illegible]ு குச்சு விறாந்தை [illegible]யில் கொழுவி விடுவார்.

ஏதோ ஒரு அர்த்தத்துடன் சிறிது நேரம் அந்த மண்வெட்டியையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றவன் மளமளவென்று அதனைச் செதுக்கித் து[illegible]க்கிறான். ஐயாவின் ஞாபகமாக அதற்கு பிடி போட்டு பக்குவமாக குச்சி விறாந்தை வளையில் இனிமேல் அதைக் கொழுவி வைக்க வேண்டும். வளையில் மட்டுமா?




இனியும் என்ன
அலை பெயரும் கடலும்
கரைமுழுதும்
நிலவும் விண்மீனும்
வெறித்துக் கிடக்கட்டும்.
சருகு பத்திப் போயிருக்கும்
பனைவடலி
சடைத்தபடியிருந்த மலைவேம்பு
கடற்கரையோரத்தின்
மணலில் புதைந்தபடி
நீலக்கடலின் பின்னழகில்
நிமிர்ந்திருந்த
சவேரியார் கோயில்
முழுதும் உடைந்துபோயிற்று
மிஞ்சிய ஓர்தூணில்
தனித்தபடி சவேரியார்
சோகம் ததும்பநிற்கின்றார்.
இடிபாடுகளுக்குள் நிக்கின்ற
ஓர்பக்தனின் கோபம்
அவர் மீது திரும்பிற்று.
நீரே எமைப் படைத்தீர்
நீரே எமையழித்து விட்டீர்
ஆண்டவரே சொல்லும்
நாங்களென்ன செய்தோம்.
அழுகை கடலை மிஞ்சிற்று
எல்லாம் முடிந்து போயிற்று.
முல்லைத்தீவு!
ஒரு பெருநகரத்தை
இடிபாடுகளுக்குள்
தாயைத் தேடும் சிறுவன்போல
கண்ணீரோடு தேடுகிறேன்.
முருகைக் கற்களால்
யாரோ கட்டிய
கோட்டையின் சுவர்களும்
கடற்கரை வீடும்
கற்களாய்த்தெரிவதாய்
யாரோ சொன்னார்கள்
மனது அதன்மேல் சொல்லவில்லை.
மிஞ்சிய மரங்களின் கிளையில்
சேலைத் துண்டொன்று
காற்றில் ஆடுறது.
செல்வபுரம் கோயில் குடியிருப்பு
கள்ளப்பாடு எல்லாம்
கல்லாய் போக.
மீதமுள்ள தமிழனின்
கடற்கரையும்
கடல்கொண்டு போயிற்றாம்.
கடலே சொல்லு
நாமென்ன செய்தோம்
நாதியற்றுப் போவதற்கு
நீரே இரும்
வெறித்தபடியிருக்கும் கரைக்கு
மனிதர்கள் இனிவரமாட்டார்கள்
காலாற நடப்பதற்கு முடியாது
கடலே நீரே இரும்
கரையே நீரே இரும்
சவேரியாரே நீரே இரும்
நாங்கள் என்ன செய்வோம்
எனது முல்லைத்தீவே!
எனது முல்லைத்தீவே!!

முல்லைக் கமல்.



திருமறைக் கலா மன்றம் காலத்திற்குக் காலம் காத்திரமான படைப்புக்களை வெளிக்கொணர்கிறது. கடந்த காலங்களில் கலை நிகழ்வுகள், கலைப் பயணங்கள் ஊடாக இன ஐக்கிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி வருகின்றது. இன்றைக்கு நான்கு தசாப்தங்களிற்கு முன்னர் அருட்தந்தை கலாநிதி நீ-மரிய சேவியர் அடிகளாரின் முழு முயற்சியினால் தோற்றி விக்கப்பட்டதே திருமறைக் கலாமன்றம். இன்றைக்கு ஆசிய ஐரோப்பிய நாடு களிலும் இலங்கையின் பல பாகங்களிலும் கிளைகளை வியாபித்து செயற்பட்டு வருகின்றது.

# “புதுயுகம் நோக்கி” நாடகமும் பகிர்வும்

திருமறைக்கலாமன்ற மூவின இளம் கலைஞர்கள் இணைந்து சமாதானத்தை வலியுறுத்தியதான கலைக் கதம்ப நிகழ்வை கடந்த மாதம் கொழும்பு ஆயர் கல்லூரி மண்டபத்தில் நடாத்தினர். இனம், மொழி, சமய ரீதியாக ஒன்றித்து கலாசாரங்களை பின்பற்றி நடன, நாடக நிகழ்வுகள் இடம்பெற்றன.


பீற்றர் சேவியர் - கலீஸ் (இயக்குநர்)

வார்த்தைகள் அற்று உடல் மொழிகளின் ஊடாக 90 வரையான இளைஞர் யுவதிகள் இணைந்து “புதுயுகம் நோக்கி” என்ற மௌன நாடகத்தை ஆற்றுகை செய்தனர். இளம் கலைஞரான பீற்றர் சேவியர்-கலீஸின் நெறியாள்கையிலேயே இப்படைப்பு மேடையேற்றப்பட்டது.

நாடக நெறியாளரும் வளர்ந்துவரும் இளம் கலைஞருமான பீற்றர் சேவியர்- கலீஸ் (வயது 23) புதுயுகம் நோக்கி என்ற நாடகத்தின் ஊடாக வெளிக்கொணர்ந்த கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

இந்த நாடகம் தேசிய ரீதியில் மூவின இளைஞர்களையும் இணைத்து மேற் கொள்ளப்பட்டமை எனது வயதிற்கும், அனுபவத்திற்கும் கிடைத்த ஒரு வெற்றியாகக் கருதுகிறேன். கடந்த பல ஆண்டுகளாக திருமறைக் கலாமன்றம் சமாதானத்திற்கான கலைப் பயணங்களை பல்வேறு வடிவங்களில் மேற்கொண்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியே எனது புதுயுகம் நோக்கி என்ற நாடகமும், இந்த நாடகத்தில் உடல்மொழிப் பயன்பாடும் இசையின் ஆதிக்கமுமே அதிகளவில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மொழிப் பரிமாற்றங்கள் இன்றி 45 நிமிடங்களை உள்ளடக்கியதாகவுள்ளது.

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே ஏற்பட்ட உறவுகளையும் இவர்களது கலாசார, சமய, பண்பாட்டு விழுமியங்களையும் மையப் பொருளாகக் கொண்ட நாடகத்தில் கடந்தகால போரின் அவலங்களை மிகத் தெளிவாக வெளிக் கொணரும் அதேவேளை அடக்கு முறையாளர்களிற்கு எதிராக அணி திரளும் மக்களின் ஒருமித்த ஒன்றிணைவையும் மக்கள் பலத்தின் வீரியத் தன்மையுமே இன் நாடகத்தின் ஊடாக வெளிக்காட்ட முடிந்தது.

தர்ஷனா, அசோகா போன்ற வார்த்தைகளற்ற நாடகத்தில் நடித்த அனுபவமும் அருட்தந்தை கலாநிதி என்-மரிய சேவியர், ஜோ. ஜோண்சன், ராஜ்குமார், சாம்பிரதீபன் போன்றவர்களது



அறிவுரையும், பயிற்சிகளும், தட்டிக் கொடுப்புக்களுமே என்னை இந்த மாதிரியான பிரமாண்டமான படைப்பை நெறிப்படுத்த முடிந்தது. அரங்கவியலாளர்களான ஜேறோம் டிசில்வா, சோமலதா சுபசிங்க, ஜேம்ஸ் தொம்சன் போன்றவர்களிடம் அரங்க ஆளுகை தொடர்பான பயிற்சிகளைப் பெற்றமை இந்தப் படைப்புக்கு மட்டுமன்றி இனி வரும் காலங்களிலும் அரங்கியல் செயற்பாடுகளிற்கு பேருதவியாக அமையும். இவர்களைப் போன்று எனது வளர்ச்சிக்குப் பங்காற்றி வருபவர்களையும் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

திருமறைக்கலாமன்றித்தின் 20 நிலையங்களினூடாக 80இற்கு மேற்பட்ட சிறுவர், இளைஞர் யுவதிகளைக் கொண்டு மேடையேற்றப்பட்ட நாடகத்தை நான் ரசித்தது ஒரு வகை. பார்வையாளர்களை நான் ரசித்தது இன்னோர் வகை. இப்படியான இனிமையான அனுபவங்கள் இனி மேலும் வரவேண்டும். இந் நாடகத்தின் உயிரோட்டமான இசையை அற்புதராஜ் குழுவினர் மிகத் திறமையாக காட்சிக்குக் காட்சி மாற்றி அற்புதமாக இசையமைத்தமையே எனது வெற்றிக்கு காரணமாகும். மூவின சகோதரர்களும் பங்கு கொண்டமையால் ஏற்பட்ட மொழிப் பிரச்சினையை மிக நிதானமாக கலை நயத்துடன் சிங்களத்தில் மொழிமாற்றம் செய்த கப்புத்தளை திருமறைக் கலா மன்ற அங்கத்தவர் ஏ. லத்தீனின் பங்களிப்பு அளப்பரியது.

நான் இன்றை வரை 25 இற்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளேன். இவற்றை விட 8 நாடகங்களை நெறியாள்கை செய்துள்ளமையுடன் “இந்த வழியால் வாருங்கள்” என்ற தொலைக்காட்சி நாடகத்திலும் மிக முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளேன். சமூக மேம்பட்டிற்கான விழிப்புணர்வை நாடகத்தின் ஊடாக வெளிக்கொணர்வதற்கு நாடகத்தை ஒரு ஊடகமாகப் பயன்படுத்தலாம். அதனையே நானும் செய்துள்ளேன் என தனது கருத்துக்களை நிறைவு செய்தார்.

“புதுயுகம் நோக்கி” என்ற நாடகத்தின் நெறியாளர் பீற்றர் சேவியர் கலீஸ்.

இந்நாடகத்தில் நடித்த அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் இளம் கலைஞர்களது கருத்துக்களாக, வவுனியா திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த பி.துஸ்யா பகிர்ந்து கொண்டவை. நாட்டில் சமாதானம் மிக முக்கியம். சமாதானத்திற்கான உந்துதலாக அமைந்த இந்த நாடகத்தில் எனது பங்களிப்பு தேவை என்பதால் இப்படைப்பில் நானும் இணைந்து கொண்டேன்.

இவ் நாடகத்தில் கடந்த கால அவலங்களை வெளிக் கொணரும் போது உணர்வு பூர்வமாக பங்களித்ததுடன் உண்மையாகவே இவ் நாடகத்தில் நடித்தமையால் மனநிலையில் இருந்த பாதிப்புக்களை வெளிகாட்ட முடிந்தது. பங்குபற்றிய அனைத்துக் கலைஞர்களும் அரங்கை, தம்மை மறந்து கதாபாத்திரங்களாக மாறிச் செயற்பட்டமையானது எனக்கு நாடகத்தின் ஊடாகக் கிடைத்த பெரும் அனுபவமாகக் கருதுகிறேன் என்றார்.

மாத்தளை திருமறைக்கலாமன்ற அங்கத்தவரான லால் பியந்த குமார பகிர்ந்து கொண்ட கருத்துக்கள். மனித இதயத்திற்குள் சமாதானத்தை உருவாக்க வேண்டுமாக இருந்தால் அவர்களது இதயத்தை ஊடுருவுவதற்கு சரியான வழி கலைவழிதான். சமாதானத்தை உருவாக்கவேண்டுமென்ற ஒரு இலக்கில்தான் இப்படைப்பு உருவாக்கப்பட்டது. நாமும் இவ் நோக்கத்திலேயே இவ் நாடகத்தில் நடித்துள்ளோம்.

யுத்தப் பாதிப்புக்கள் வடக்கு கிழக்கில் இவ்வாறான பாரிய அவலங்களை ஏற்படுத்தியுள்ளது. இதனை தென்பகுதி மக்கள் கட்டாயம் பார்க்க வேண்டும். இதனை நான் ஒரு தென்பகுதி இளைஞன் என்ற வகையில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ ஒரு மாற்றம் இவ் நாடகத்தில் நடித்ததன் மூலமாக எனக்கு ஏற்பட்டுள்ளது. இதே போல் நாடகத்தைப் பார்த்தவர்களிற்கும் ஏனைய நடிகர்களிற்கும் ஏற்பட்டிருக்குமென நினைக்கின்றேன் என்றார்.

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களது பாரம்பரிய கலைகலாசார பண்பாட்டு, விழுமியங்கள், விளையாட்டுக்களைத் தழுவியதான இந் நாடகத்தில் சமூகங்களிடையே கலைகளினூடாக சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்ற கருப்பொருளில் இந் நாடகத்தை அவதானிக்க முடிந்தது.

முரசு, முரசறைவோன் சிற்பங்கள், அடக்குமுறையாளர்களாக பேய்கள் என வித்தியாசமான கோணத்தில் நாடகம் நகர்கின்றது. இனங்களிடையே முரண்பாடுகள் ஏற்படப்போவதை சிற்பங்களின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து இசையின் ஊடாகக் கதையை நகர்த்துவதுடன் பின்னணிக் குரல்களையும் சரியான வடிவத்தில் உரிய இடங்களில் பயன்படுத்தியமை இவ் நாடகத்திற்கு மேலும் சிறப்புக்களை ஏற்படுத்துகின்றது. இளைஞர் அணியால் இவ்வாறான படைப்பை தேசிய ரீதியில் அரங்கேற்றியமையானது இளைஞர்களிற்கு கிடைத்த வெற்றியும் சமாதானத்திற்கு கிடைத்த ஆதரவும் அரவணைப்புமாகும்.

இராணுவத்தால் தீவாக்கபட்ட தீவகம்.

அசாதாரண அமைதிக்குள் புங்குடுதீவு வீழ்கிறது.

புங்குடுதீவுக்குள் ராணுவம் நுழைந்த சில நாட்களாக ஏதோ ஒரு ஆபத்தை எதிர்பார்த்திருப்பது போன்ற உணர்வால் பீடிக்கப்பட்ட நிலை. இராணுவம் நுழையும் பூமியெங்கும் இரத்த வாடையின் கனதி. ஒவ்வோர் சந்தியிலும் சோதனைச் சாவடிகளிலும் குச்சொழுங்கைகளிலும் மண்டிக்கிடப்பது எவரும் உணரக்கூடிய ஒன்றே.

இதற்கு இன்னொரு காரணம். முன்னர் செறிவாக அருகருகே இருந்த மக்கள் இப்போது இங்கொருவராய். அங்கொருவராய்ச் சிதறி இருந்தனர். ஒருவருக்கு ஏதும் நடந்தால் அது பற்றி அடுத்தவருக்கு தெரியவரலாம் அல்லது தெரியவராமலும் போய்விடலாம். ஒரு வட்டாரத்தில் மட்டும் ஆயிரத்துக்கு மேல் இருந்த இடத்தில் இப்போது முதலாம் வட்டாரத்தில் ஐந்து பேர். இரண்டாம் வட்டாரத்தில் ஆறுபேர் என்று செறிவின்றி தூரத்தூர இருந்தனர். இந்தப் பின்னணியில் வெறுமையின் வெறிச்சோடலும் காற்றின் அனாதரவான சோகக்குழைவும் ஒருவித அச்சத்தை ஊட்டுவதாய் இருந்தது.

தெருவில் செல்லும் பெண்கள் நிலம் நோக்கிய தம் பார்வையிலிருந்து மீளாதவராய் வேகமாகச் சென்றனர். தப்பித்தவறி நிமிர்ந்து பார்த்துவிட்டால் எங்காவது ஆமிக்காரன் நின்று தம்மைக்கைகாட்டி அழைக்கலாம் என்ற ஒருவகையான பீதிக்குள் அவர்கள் விழுந்தவர் போல் தெரிந்தனர். அவர்களைத் தொட்டுக்கொண்டு சென்றபிள்ளைகள் தாய்மாரிடமிருந்து தம் கேள்விகளுக்கு பதில் வராத போதும் சும்மா தொண தொணத்துக்கொண்டே சென்றனர்.

“குஞ்சியம்மாவும் யாழ்ப்பாணம் போயிற்றாவா. ம்மா?”

“......................”

“யாழ்ப்பாணம் போனவை எப்பயம்மா வருவினம்?”

“..................”

பதில் வராவிட்டாலும் அவர்களது கேள்விகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

தெருவில் நின்ற நாய்களின் முகங்களில் உற்சாகம்மங்கி பசிக்களை தெரிந்தது. தேடுவாரற்று கதியால் வேலிகள் மேல் கால்போட்டு மேய்ந்து கொண்டு நிற்கும் ஆடுகளை அவை ஒருவிதவெறியோடு பார்த்தன. கன்றுகளோடு சென்ற பசுக்களருகே நாய்கள் சென்ற போது அவை மூசிக்கொண்டு நாய்களின் சள்ளையில் இடித்து த் தூக்கி எறிந்தன.

ஏற்கனவே பசியோடு கிடந்த நாய்கள் இந்த எதிர்பாராத தாக்குதலைத் தாங்கமுடியாது வெகுநேரம் ஊளையிட்டன. எங்கு திரும்பினாலும் ஒருவித தனிமையும் பீதியுமே கைகோர்த்து வெளவால்களாய் கண்கள் முன்னால் தொங்குவது போல்... பசிக்களை மக்கள் மேலும் தொற்றியிருந்தது.

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 33

கையிருந்த உணவுப் பொருட்கள்தீர்ந்த நிலையில் மக்களுக்கு கைகொடுக்க எந்தக் 'கடைகண்ணியும்' அங்கே இருக்கவில்லை. கடைகளைப் பூ ட்டிவிட்டு எல்லாக் கடைக்காரர்களும் யாழ்ப்பாணம் போய்விட்டார்கள். மக்கள் இலைக்கஞ்சி. புளுக்கொடியல். கிழங்கு. பனாட்டு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கையில் புங்குடுதீவு கூட்டுறவுச் சங்க களஞ்சிய அறை உடைக்கப் பட்டு உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்ற செய்தி எங்கும் பரவிற்று.

மக்கள் முதலாம் வட்டாரத்திலுள்ள கூட்டுறவுச் சங்கத்தின் முன்னால் கூடினர். இளம் பெண்கள் அங்கே அதிகம் தலைகாட்ட வில்லை. வயது போனவர்களும் நடுத்தரவயதினரும். சிறுவர்களும் அங்கே கூடினர். ஒவ்வொருவருடைய கைகளிலும் பலவகையான பைகள் இருந்தன. இராணுத்துக்கும் மக்களுக்கு மிடையே தொடர்பை ஏற்படுத்தும் (?) ஈ.பி.டி.பி யைச்சேர்ந்தவர்கள் உணவை வழங்கிக் கொண்டிருந்தனர். (இது ஈபிடிபியின் அரசியல் ஆரம்பம்)

வேலை மும்முரமாக நடந்துகொண்டிருந்தபோது சற்றும் எதிர்பாராத நேரத்தில் பேரிடி மாதிரி ஓர்சத்தம் அங்கெழுந்தது. அங்க நின்ற சிறுவர்களும் பெரியவர்களும் பயத்தினால் நெஞ்சுதற என்ன நடந்தது என்று தெரியாமல் விழி பிதுங்கிநின்றனர்.

சிறிது நேரத்திற்குப் பின் தகவல் கசிந்தது.

கூட்டுறவு களஞ்சிய அறைஇருந்த இடத்திற்கு இரண்டொரு அறை இருந்த இடத்திற்கு இரண்டொரு வீடு தள்ளியிருந்த வீடொன்று ராணுவத்தினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது. ஏன் அப்படி அந்த வீடு தரைமட்டமாக்கப்பட்டது.

அதற்கான பதிலும் அங்கே கசிந்தது. அந்த வீட்டில்தான் விடுதலைப புலிகள் முகாம் ஒன்றை புங்குடுதீவில் அமைத்திருந்தார்களாம்.

இதை யார் ராணுவத்துக்குச் சொல்லிக் கொடுத்தது?

“சாமியாராக வந்ததும் நாங்களே சம்சாரியாக இருப்பதும் நாங்களே” என்று தங்கவேலு ஒரு சினிமாப் படத்தில் கூறியதுதான் அவன் நினைவில் ஓடிற்று.

எல்லாவற்றுக்கும் நாங்கள்தான் காரணமாக இருக்கிறோம். புலிகளின் முன்னால் நாங்களே விடுதலை வீரர்கள் அவர்கள் இல்லாத இடங்களில் நாங்கள்களே காட்டிக் கொடுக்கும் முன்னணி வீரர்கள்! இந்த விலாங்குத்தனம் எக்காலத்திலும். எங்கும். எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்குமா?

உணவுப் பொருட்களை வாங்கிய மக்கள் அங்கிருந்து மெல்ல மெல்ல அகன்று கொண்டிருந்தனர். அவர்கள் முன்னால் வீடொன்றை குண்டு வைத்து தரைமட்டமாக்கிய ராணுவத்தினர்.ஏதோ பெரிய சாதனையைச் செய்துவிட்டவர்கள் போல் பெரிதாக எக்காளமிட்டுச் சிரித்துக் கதைத்துக் கொண்டு நின்றனர். அவர்கள் முகங்களில் வெளிப்பட்ட சிரிப்புக்கும் மேலாக ஒருவித குரூரமும் துவேசமும் எரிந்துகொண்டிருந்தது.

அவர்கள் வாடையே தமக்கு ஆகாதென்பது போல் அங்கு வந்திருந்த இரண்டொரு பெண்கள் நடந்துசென்றனர். அவர்களைத் தொடர்ந்து அறுவற்றை மூஞ் சியையும் மோறக்கட்டையையும் தமக்குள் கறுவிக் கொண்டு சில கிழங்கள் சென்றனர்.

புங்குடுதீவில் தங்கிய மக்களில் 7ஆம் வட்டாரமான ஊரதீவிலேயே மக்கள் ஒப்பீட்டளவில் கூடுதலாக வாழ்ந்து வந்தனர். மிகவும் கஷ்டப்பட்டவர்களும் அங்கேதான் இருந்தனர். அவர்கள் உணவு வழங்கப்பட்ட முதலாம் வட்டாரமான சந்தையடிக்கு வருவதென்பது ஒரு நெடுந்தூரப் பயணமாகும். வல்லைவெளி போன்ற சில குறுநிலங்களைக் கடந்தே அவர்கள் வரவேண்டியிருந்தது. ஊரதீவுக்கு அருகே இருந்த மடத்துவெளியில்தான் ராணுவ முகாமும் இருந்தது.

ஊரதீவு மக்கள் தமக்கருகே ராணுவத்தின் முகாம் இருந்ததை ஆபத்தாகவே கருதினர். எங்குமே ராணுவம் மக்களின் பாதுகாப்புக்காக இருந்தது இல்லை அப்படி இருந்தது என்று நினைப்பது ஒருமாயையே.

ஊரதீவு மக்களின் குடிமனைப்பக்கம் ராணுவக்காரர்கள் தனித்தனியாகவும். சோடியாகவும்.சைக்கிள்களிலும் கால்நடையாகவும் திரியத் தொடங்கியது மக்களை அச்சுறுத்துவதாகவே இருந்தது.

ஒருநாள் அவர்கள் பயந்தது போலவே நடந்துவிட்டது. அன்று நள்ளிரவிருக்கும் ஐந்தாறு ராணுவத்தினர் பெண்கள் தனியே இருந்த வீடொன்றுக்குள் புகுந்தபோது. அவர்கள் போட்ட கூக்குரலில் அப்பகுதியில் இருந்த மக்கள் அனைவரும் அங்கு திரண்டுவிட்டனர்.

எதுவும் செய்வதறியாது ராணுவத்தினரால் பின்வாங்கி ஓடுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை.

இது கவிஞர் மு.பொ வின் நேரடி அனுபவம்.

துருவன்




# வன்னியில் புழமை வாய்ந்த குறுணிக் கற்காலக் கருவிகள்

எமது ஈழத்தீவில் பழைய கற்காலம் - என்ற மனிதனின் முதற் கருவிப் பயன்பாட்டுக் காலம் 1 இலட்சத்து 25 ஆயிரம் ஆண்டுகளில் நிலவியது என்பதை அறிவோம்.

பழைய கற்காலத்தின் இறுதியில் உலகளாவிய பனிபடர் யுகம் மாடுகளை வேட்டையாடக் கூடியவர்களாகவும், அவற்றை வளர்க்கக் கூடியவர்களாகவும் இக்கால மனிதர் வாழ்ந்தனர். இக்காலம் சிறிய கற்காலம் அல்லது குறுணிக் கற்காலம் எனப்படுகிறது. ஆங்கிலத்தில் மெஸோலிதிக் என இது அழைக்கப்படுகிறது.

இந்தியாவில் வடக்கில் பீகார், சோட்டா நாக்பூர் தாமோதர் பள்ளத்தாக்குப் பகுதிகளிலும், தமிழகத்தின் தென்மாவட்டங்களின் ஆற்றுப் படுக்கைகள், கடற்கரையில் நீர் ஒரு பகுதிகளிலும் வாழ்ந்ததற்கான சுவடுகள் காணப்படுகின்றன. அவர்கள் இச்சிறு கற்கருவிகளை தடிகளிலும், எலும்புகளிலும் பொருத்திப் பயன்படுத்தியுள்ளனர். தமிழகத்தின்- குமரி மாவட்டத்தின் முட்டம், திருநெல்வேலியின் - கூட்டப்புளி, கல்லாங்குளம், நாசரெத், குதிரைமொழி மெய்நாரைம், ஏரல், மதுரை களாகும். அது கி.மு 1000 ஆண்டுகளின் முன்வரை நீண்டிருந்தது. குறுணிக் கற்காலத்தை அடுத்து புதிய கற்காலம் நியோலிதிக் காலம் என ஆங்கிலத்தில் இது அழைக்கப் படுகின்றது. தமிழகத்தில் இக்காலச் சுவடுகள் மிக அரிதாகவே எடுக்கப்பட்டுள்ளன. ஈழத்தில் எடுக்கப்படவே இல்லை எனக் கூறப்படுகின்றது.

ஆனால், நாம் நிறையச் சுவடுகளைச் சான்றுகளை கொண்டுள்ள பெருங்கற்காலப் பயன்பாட்டுக்கு புதிய கற்காலம் அடித்தளமிட்டதாக அறிஞர்கள் கூறுகின்றனர். நவீன கருவிகள் படைக்கப்பட்ட இவர்கள் காலத்தில் மட்பாண்டங்கள் ஆக்கப்பட்டன. சாடிகள், தட்டுகள், கோப்பைகள், கொண்டில் பாத்திரங்கள், உருவச்சிலைகள், முதுமக்கள் தாழிகள் என்பன புதிய கற்காலத்தின் படைப்புகளாகும். முதுமக்கள் தாழி

ஆரம்பமானது. இதில் தொல்கால மனிதர்கள் பெருமளவில் அழிந்தனர்.

வடபகுதியின் பனிப்படலங்களின் மேற்பகுதிகள் இடம்பெயர்ந்து தெற்கு நோக்கி நகர ஆரம்பித்தன. மிகப்பெரிய பனியாறுகள் சரிவுகளைப் பிளந்துகொண்டும் - குன்றுகளின் உச்சிகளைக் கூறுகளாக்கியும், பாறைகளை உடைத்தவாறும் நொருக்கியவாறும், உடைந்த பாறைகளை எடுத்துக்கொண்டும், குன்றுகளுக்கும் சமவெளிகளுக்கும் மேலாக ஓடின. இதுவே பனிபடர்யுகம் ஆகும். இதனால் ஐரோப்பாவில் பனிபடர் காலமும், ஆசியாவில் நீண்ட கால மழையும் ஏற்பட்டன. இதனால் பேரழிவு ஏற்பட்டது.தப்பியோர் இடம்விட்டு ஓடினர். புதிய சூழலில் வாழத் தொடங்கினர்.- புதிய சூழலில் மனிதர்- புதிய புதிய கருவிகளைப் பயன் படுத்த ஆரம்பித்தனர். புதிய சூழலில் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையே இதற்குக்காரணமாகும். கடற்கரையோரம் வரை சிறிய கற்கருவிகளுடன் நீர்நிலைகளின் அருகில் உணவு சேமிப்பவர்களாகவும் மீன் பிடிப்பவர்களாகவும், ஆடு யின் கோடங்கிப்பட்டி, திருமங்கலம், கல்லப்பட்டி, காவேரி வடிகால்ப் பகுதியில் புதலூர், ஆனந்தக் காவேரி, செங்கற்பட்டின் அதிராம்பாக்கம் ஆகிய இடங்களில் குறுணிக்கற்கால மனிதர் வாழ்ந்த சுவடுகள் காணப்பட்டுள்ளன.

ஈழத்தின் பல பகுதிகளிலும் குறுணிக் கற்கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. தமிழீழத்தில் இரணைமடு புவிசரிதவியல் படையில் குறுணிக்கற்காலக்கருவிகள் காணப் பட்டுள்ளன. குவாட்ஸ் வகைக் கற்கள் இவை முக்கோணப் பிறை வடிவம், நீள் சதுரம் என்ற வடிவங்களிற் செய்யப்பட்டுள்ளன.

வன்னியின் மன்னார், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில், பூநகரியிலும்- காரைநகர் சத்திராந்தையிலும், குறுணிக் கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. காரைநகர் தவிர- யாழ்குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் குறுணிக்கற்காலக் கருவிகளில் காணப்படவில்லை. சரி குறுணிக்கற்காலம் எது தமிழகத்தில் குறுணிக்கற்காலம் 34 ஆயிரம் ஆண்டுகளிற்கு முற்பட்டதாகும். ஈழத்தில் அக்காலம் 30 ஆயிரம் ஆண்டுகள் இறந்தோர் உடலை வைத்து அவர்களுடன் புதைத்தது- தர்மர்களின் புதிய கற்கால பயன்பாடாகும் புதியகற்காலத்தின் இறுதியில் உலோகப் பயன்பாடும் ஆரம்பமாகிறது. செம்பு உலோகக் கருவிகள் இக்காலத்தில் பயன்படுத்தப்படத் தொடங்கின. இக்காலமே உலகின் முதல் ஒழுங்கமைக்கப்பட்ட நகர நாகரிகமானதிராவிடரின் சிந்துவெளி நாகரிகம் உருவம் பெற்ற காலமாகும்.

புதிய கற்கால இறுதியில் 3000ஆண்டுகளுக்கு முன்பதாக- தமிழ் மக்களின் நாகரிக வாழ்வின் தொடக்கமான பெருங்கற்காலப் பண்பாடு ஆரம்பமானது.ஈழத்தின் சகல பகுதிகளிலும் பெருங்கற்கால பண்பாட்டின் சான்றுகள் நிறைந்து கிடக்கின்றன. புதிய கற்காலத்திற்கு முன்பதான இடைக்கற்கால சான்றுகள் ஈழத்தில் கிடைத்தபின்- பெருங்கற்காலத்துக்கான சான்றுகளே ஈழத்தில் கிடைத்தன. புதிய கற்காலத்துக்கான சான்றுகள் வெற்றிகரமாக உள்ளன.

குரலோன்

# டாங்கிகளின் சக்கரங்களுக்குள் பாபிலோனியா

உலக அதிசயங்கள் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம் அந்த 07 அதிசயங்களில் ஒன்றுதான் பாபிலோனியாவின் தொங்கு தோட்டம் இது கி.மு 600களின் ஆரம்பத்தில் பாபிலோனிய பேரரசர் இரண்டாவது நெவுகெத்னேசர் இத்தோட்டத்தை








உருவாக்கியதாகக் கூறப்படுகின்றது. ஆனால் எகிப்திய பிரமிட்டுக்கள் போலன்றி ஏனைய 06 அதிசயங்களும் காலத்தின் மாற்றத்தால் அழிந்து உள்ளது. இன்றைய ஈராக் நாட்டின் தலைநகர் பாக்தாத்துக்கு 50 கிலோ மீற்றர் தூரத்தில் தொங்கு தோட்டம் இருந்ததாக கருதப்படுகிறது. அதாவது யூப்ரட்டிஸ் நதியின் கிழக்குக் கரையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த வரலாற்று சிறப்புமிக்க நகரம் வல்லாதிக்க நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி அதன் தன்மையும், வரலாற்று முக்கியத்துவமும் சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதாவது ஈராக்கை அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகள் ஆக்கிரமித்த போது போரின் பாதிப்பு இந்த வரலாற்று நகரத்தையும் சிதைத்துள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கவலை கொண்டுள்ளனர். காலத்திற்குக்காலம் உலக அதிசயங்கள் 07 என்றும் 08 என்றும் உலகம் பேசமுற்படும் இத்தருணத்தில், ஆரம்ப கால தரவுகளின்படி பாபிலோன் தொங்கு தோட்டம் எகிப்திய பிரமிட், துருக்கியின் ஆர்டிமிஸ் தேவதை கோயில், கிரீஸ் நாட்டின் சியஸ்சிற்பச் சிலை, துருக்கியின் ஹெலிக்ர்னாஸ் இருந்த கல்லறை, எகிப்து நாட்டின் பாராஸ் நகரில் இருந்த கலங்கரை விளக்கம், கிரீஸ் நாட்டின் ரோட்ஸ் நகரத்து வெற்றிச்சிலை. இவையே 07 உலக அதிசயங்களாகும். இவற்றில் பிரமிட்டுகளை தவிர ஏனைய அனைத்தும் மழை, வெயில், நில நடுக்கம் போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் காணாமல் போய் விட்டன. பாபிலோன் தோட்ட தரையில் இருந்து 75-80 அடி உயரத்தில் அமைந்திருந்ததாகவும் ஆரம்ப காலத்தில் இதனை அமைப்பதற்கு மலைகளில் இருந்து பாறைக் கற்களை வெட்டி எடுத்து வந்து தொங்கு தோட்டம் அமைத்ததாகவும் இதற்கு நெவுகெத்னேசர் மன்னன் அடிமைகளை பயன்படுத்தினார் என்றும் வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன. தோட்டத்திற்குத் தேவையான நீரை அருகில் உள்ள யூப்ரட்டிஸ் நதியில் இருந்து “செயின் பம்ப்” மூலம் பெற்றிருக்கின்றான். இதற்காக அவன் அந்த “செயின்பம்ப்” இயக்கு வதற்கும் மன்னன் அடிமைகளையே பயன் படுத்தியுள்ளான். இது தொடர்பாக பலவேறு கருத்துக்கள் காணப்படுகின்ற போதும் உலக அதிசயம் ஒன்றை நெவுகெத்னேசர் மன்னன் உருவாக்கியமை பெருமைக்குரியதே. பண்டைய தொழில்நுட்பம் வளர்ச்சி இல்லாத காலத்தில் மனித வலுவை மட்டும் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உலக அதிசயங்கள் தற்கால விஞ்ஞான உலக மனிதர்களின் திட்டமிடப் படாத செயற்பாடுகளால் அழிந்துவருகின்றமை கவலைக்குரியதே.

இந்த நிலையில் ஈராக்கின் தலைநகர் பாக்தாத்துக்கு ஐம்பது கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் அமெரிக்க யுத்த டாங்கிகளின். சக்கரங்களுக்கு அகப்பட்டு இந்த பண்டைய பாபிலோனியா சின்னாபின்னமாகிறது.

# வீடு



# உண்மையான நட்பை தேர்ந்தெடுங்கள்

உண்மையான நட்பானது சுயநலமற்றதாகவே இருக்கும். அன்பையும், கருணையையும், கோபத்தையும், குரோதத்தையும் நல்ல நண்பரின் நட்பின்மூலம் அறிந்துகொள்ளமுடியும். நாம் ஒரு தவறு செய்துவிட்டால் அந்தத் தவறைக் கண்டு அதை திருத்தி நம்மை நல்வழியில் கொண்டு செல்லக்கூடியவரே நல்ல நண்பராவார். எனினும் இன்று தாங்கள் ஏதாவது தவறுசெய்துவிட்டால் அதைவிடவும் மற்றவர்கள் பெரியதொரு தவறைசெய்யவேண்டுமென நினைப்பவர்கள் சிலர் நமது சமுதாயத்தில் உள்ளனர். இந் நிலையானது தூய்மையான நட்புடையோரை கண்டுகொள்ள முடியாமற் போன ஒரு துரதிர்ஷ்டமேயாகும். நட்பென்பது மிகவும் உன்னதமான ஓர் உறவாகும்.

நாம் பழகிவரும் நண்பர்கள் சிலவேளைகளில் எதிர்பாராத விதமாக நட்பை முறித்து விடுகிறார்கள்.

பழகிய நட்பு முறிந்துவிட்டால் மீண்டும் வளர்வதற்கு நட்பென்பது மரமல்ல. பழகிவரும் நண்பனுடன் ஏதோ ஒரு காரணத்திற்காக நட்பை முறித்துவிடும் நண்பன் முதல் உணர்ந்து கொள்ளவேண்டும். பழகிய நட்பை முறித்துவிட்டேன். நாங்கள் மீண்டும் நட்புடன் பழகுவோமா என்று- உண்மையில்த் தான் பழகிவரும் நண்பன் துரோகம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டால் அந்த நண்பனுடன் நட்பு எனும் ரீதியில் பழகுவதை முற்றாக நிறுத்திவிடவேண்டும். இல்லையெனில் நட்பு விரோதமாக மாறிவிடும்.

நண்பர்கள் நம் வாழ்வில் இருக்கத்தான்வேண்டும். அதற்காக கண்டவர்கள் எல்லோரையும் நண்பர்களாக எடுத்துக்கொள்ளக் கூடாது. சில நபர்கள் எமக்கு நண்பர்களாக இருந்து கொண்டு நம்மை நாசமாக்கி விடுவார்கள்.

ஒரு நபரைக் கண்டதும் இவர் உண்மையான நண்பர் என்று எடுத்துக்கொள்ளமுடியாது. பழகித்தான் உண்மையான நண்பன் என்று எடுத்துக்கொள்ளமுடியும். நாம் முதல் முதலாக புதிதாக ஒரு நபருடன் பழகி அவரை நம் வாழ்வில் நண்பனாக ஏற்றுக் கொள்வதற்கு முன்பு அந்த நபரைப்பற்றி ஆராயவேண்டும். அவர் எப்படிப்பட்டவர். அவருடைய குணங்கள் எப்படியானவை என்று ஆராயவேண்டும். ஆராய்ந்த பின்பு, நாம் அவரை நண்பனாக ஏற்றுக் கொள்வதற்கான குணம், பண்பு, நடத்தை சிறப்பாக இருந்தால் நாம் அவரை நம் வாழ்வில் நண்பனாக எடுத்துக்கொள்ளலாம்.

நண்பர்கள் நண்பர்களுக்கு மகிழ்வைத்தான் கொடுக்கவேண்டும். துன்பத்தை கொடுக்கக்கூடாது. ஆபத்துக்கு உதவாமல் ஒதுங்கிப் போகிறவன் நண்பனல்ல. உள் ஒன்று வைத்து புறம் ஒன்று கதைக்கும் சில நபர்களையும் நமது சமுதாயத்தில் காணக்கூடியதாகவுள்ளது. இப்படிப் பட்டவர்களை ஆங்கிலத்தில் Hypocrite என்று சொல்வார்கள். இப்படிப்பட்டவர்கள் வெளியில் கபடமாக நடிக்கக்கூடியவர்கள். உள்மனதில் நஞ்சுக் குணத்துடன் அதாவது அடுத்த நபர் வாழ்க்கையில் முன்னேறும் பட்சத்தில் அந்த நபரை வாழ்க்கையில் முன்னேறவிடாது தாழ்த்திவிடும் நோக்குடன் அவருடன்பழகி தாழ்த்திவிடுவார்கள். நமது சமுதாயத்தில் சில நபர்கள் ஒரு நபரிடம் உதவியைப்பெற்று வாழ்க்கையில் முன்னேறிய பின்பு யாரால் நான் வாழ்க்கையில் முன்னேறினேன் என்பதை நினைத்துப் பார்க்க மறந்துவிடுகின்றனர். தனக்கு உதவிசெய்தவர் வாழ்க்கையில் சிக்கல்களை சந்தித்து தவிக்கும் சந்தர்ப்பத்தில் உதவி செய்ய முற்படுவதில்லை இப்படியான வ்களை நண்பன் என்று சொல்ல முடியாது சுயநலவாதி SELFISH PERSON என்றுதான் சொல்லவேண்டும். சில நபர்கள் நண்பர்களாகப்பழகி தன் நண்பனை பாரிய பிரச்சினைகளில் மாட்டிவிட்டு தப்பி விடுவார்கள். இது நட்புக்குத் துரோகம் விளைவிக்கும் செயலாகும். சில நபர்கள் உதவியை பெறும் நோக்கத்துடன் நண்பனாக பழகுவதுண்டு. பழகிக் கொஞ்ச நாட்களிலையே அப்பாவி நண்பனிடம் இருந்து உதவியை பெற்றுவிட்டு குட்பாய் சொல்லிவிட்டு போய் விடுவார்கள். இது உதவியை எதிர்பார்த்துவரும் நட்பு ஆகும்.

நட்பு என்பது எல்லோருக்கும் நன்மையை கொடுக்கும் என்று சொல்லமுடியாது தீமையையும் கொடுக்கும். எனவே, உண்மையான நட்பை தேர்ந்தெடுங்கள்.

உண்மையான நட்பே என்றும் நிலையானது.

**இ.றஜித்**

## மனதில் உறுதி வேண்டும்

பெண்ணே எனியும் வேண்டாம்
உனக்கு இந்த எதிர்பார்ப்பு வாழ்க்கை.
பொங்கி எழு பெண்ணே
பொன்னான வாழ்வு
மிக விரைவில் உன் காலடியில்
பெண்மை என்றால் உண்மையான
உளத்துணிவு வேண்டுமெடி என்பதை
மனத்துள் வையெடி பெண்ணே.
பழங்கால மூட நம்பிக்கையோடு
உன் வாழ்வை இட்டுச் சென்று
இன்பமான வாழ்வை இருளடையச்
செய்யாதே.
சமயற்கலை தான் உனக்குக் கைவந்த
கலையென எண்ணி
சாதனைகளை காலடியில் போட்டு
மிதித்திடாதே பெண்ணே.
மனதில் உறுதி நீ கொண்டால்
இலை மறை காயாய் உன்னிடமுள்ள
திறமைகள் விரைவில் வெளிப்படுமெடி
பெண்ணே.
வீடு என்ற வட்டத்துக்குள்
முடங்கிக் கிடந்தது போதுமெடி பெண்ணே.
வெளியே வா உன் கண்களை திறந்து பார்
எத்தனையோ பணிகள் உன் வரவிற்காக
தலை சாய்த்துக் கிடக்கின்றன நாணற்
புற்களாய்.
பெண்ணே பயமெதற்கெடி
இன்று நாம் வாழும் காலம்
புலிப்படையின் காலமெடி
புயலென நீ புறப்படு
புதுமைகள் பல படைத்திடலாம் பாரினில்.

## இலட்சியம் நிறைவேற முயற்சி வேண்டும்

என்னதான் நாம் சிந்தித்த போதும் முயற்சியில்லாதபோது இலட்சியம் நிறைவேறுவது கடினமே. எந்தவொரு ஆணோ பெண்ணோ எப்படியும் வாழலாம் என்று இருப்பது தவறு. இப்படித்தான் வாழவேண்டும் என்று நினைப்பது சாலச் சிறந்தது. அந்த எண்ணம் அப்படியே நினைப்போடு மட்டும் நில்லாமல் செயல் வடிவம் பெறும் போதே நாம் இலட்சிய புருஷர்களாக பூமியில் பிரகாசிக்க முடியும்.

இக்கருத்தை ஆண் பெண் இருவரும் அலசி ஆராய்ந்து பார்க்கும்போது திருப்தியான விடைகிடைக்கும். நம் வாழ்வில் கிடைக்கும் ஒவ்வொரு நிமிடமும் இலட்சியங்களின் கருவாகும். அதனை திறமையான பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்தவேண்டும். உதாரணமாக ஒருவரை எடுத்துப்பார்ப்போம். அவர் நிறையப் படித்தவராக இருப்பார். நிறைய விசயங்கள் தெரிந்தும் இருப்பார். ஆனால் அவரிடம் நான் இப்படித்தான் வாழவேண்டும் என்ற குறிக்கோள் இல்லாமல் இருப்பார். அதனால் அவரிடம் படிப்பு இருந்தும் பயனில்லை. எதற்கும் முயற்சி வேண்டும். எம் சாதனைகளுக்கு வயது ஒரு தடையல்லவே. மனதில் துணிவிருந்தால் 60 வயது 20 ஆகிவிடும் அப்போது சாதனைகள் உங்கள் காலடியில். இயலாமை என்பது உடலில் அல்ல மனதிலே. உடல் வலுவாக இருந்தபோதும் மனம் தாழ்வுற்ற போது உடலினால் திறமை படைக்கமுடியாது.

ஒவ்வொரு ஆண்களும் பெண்களும் திறமைகளைப் படைக்க முற்படும் போது அடுத்தவரின் பேச்சுக்கோ பாராட்டுக்களுக்கோ மயங்கிவிடக்கூடாது. அப்படி நீங்கள் மயங்குவீர்களானால் நீங்கள் தொடங்கிய இலட்சியப் பாதை பாதியில் நிறைவேறாமலே முறியடிக்கப்படும். எமக்கு என்ன முக்கியம் என்பதை நாமே முயற்சியோடு எத்தனை தடவைகள் வந்தபோதும் அதனையும் தாண்டிப்பெறவேண்டும்.

எதனையும்நாம் எங்களுக்குத் தெரியும் என்று புழுகாமல் செய்துகாட்டவேண்டும். அப்போதுதான் அதன் பயன் எமக்குக் கிடைக்கும். எல்லாம் தெரியும் என்று முயற்சியில் லாமல் இருந்தால் அதனால் பயனில்லை.

**சு. சிவாஜினி**

## வெந்தயக் கோழி இறைச்சிக்கறி

**தேவையான பொருட்கள்:-**

2 கோப்பை எலும்பில்லாத கோழிஇறைச்சி சதுரங்களாக வெட்டியது.
1 மேசைக்கரண்டி மிளகாய்த்தூள்.
1/2 தேக்கரண்டி மஞ்சள்தூள்.
1 தேக்கரண்டி சோம்பு.
1 தேக்கரண்டி வெந்தயம், 1/4 கோப்பை தண்ணீரில் ஊறவைத்தது.
கைநிறைய கொத்தமல்லித் தழை.
1 தேக்கரண்டி வெள்ளை மிளகுத்தூள்.
1 மேசைக்கரண்டி திடீர் தேங்காய்ப் பால் மா.
1 மேசைக்கரண்டி இஞ்சிப்பூண்டு விழுது.
1 கோப்பை கிரீம்.
1/2 கோப்பை தக்காளி விழுது.
1/2 கோப்பை தயிர்.
1/2 கோப்பை எண்ணெய்.
உப்பு ருசிக்கேற்ப.




**செய்முறை:-**

எண்ணெய்யை சுடவைத்து அதில் இஞ்சிப்பூண்டு விழுது போட்டு பழுப்பு நிறமாகும் வரை வதக்கவும். இதில் கோழி இறைச்சியை போட்டு 5 நிமிடங்கள் வதக்கவும். இத்துடன் தயிர், தக்காளி விழுது போட்டு நன்கு கலந்து தண்ணீர் வற்றும் வரைக்கும் வேகவைக்கவும். இத்துடன் மிளகாய்த் தூள், மஞ்சள்த் தூள், வெள்ளை மிளகு, சோம்பு, வெந்தயம், கொத்தமல்லி, உப்பு தேங்காய்ப்பால்மா, ஆகியவற்றைக் கலந்து கோழி இறைச்சி நன்கு வேகும் வரைக்கும் சமைக்கவும். பிறகு இதனை எடுத்து கொத்தமல்லி போட்டுப் பரிமாறலாம்.

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

வீடு,
வெள்ளிநாதம், ஈழநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.




குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்-34

பெயர்:.......................................

முகவரி:.......................................

.......................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# இளைய நாதம்

## கோள்கள்

| | |
|---|---|
| மிகப் பெரிய கோள் | -வியாழன் |
| மிகச் சிறிய கோள் | -புதன் |
| அதிக துணைக்கோள்களையுடைய கோள் | -புதன் |
| மிகக் குளிர்ச்சியான கோள் | -புளூட்டோ |
| பூமியின் துணைக்கோள் | -சந்திரன் |
| மலட்டுக்கோள் | -செவ்வாய் |
| பிரகாசமான கோள் | -வெள்ளி |
| செங்கோள் | -செவ்வாய் |
| வெள்ளியின் வெப்பநிலை | -480°C |
| சூரியனுக்கு மிகத் தொலைவில் உள்ளகோள் | -புளூட்டோ |

சு.சுவேந்தன்

# எங்கள் குயில்

**குயில** என்றவுடன் நினைவுக்கு வருவது அதனுடைய குரல்தான். மிகவும் இனிமையான குரல்வளம் கொண்டது. இதனால் பல கவிஞர்கள் குயிலின் குரலை பெண்களின் குரலுடன் ஒப்பிட்டு கவி புனைகின்றனர். குயில் கருமை நிறம் கொண்டது. இதனால் இதனை கருங்குயில் என்றும் அழைக்கிறார்கள்.

எமது குயில் ஆசியன் குயில் அல்லது பொதுக் குயில் என அழைக்கப்படுகிறது. இது ஆசியாவில் இந்தியா, இலங்கை,தென் சீனா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றதுடன் அவுஸ்திரேலியாவில் கூட அரிதாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு இனிமையான குரலுடைய குயில் என தனித்துவப் பறவையாக விளங்கும் குயிலின் வாழ்க்கை மிகவும் சோதனையும் வேதனையும் நிறைந்ததாகக் காணப்படுகிறது. காரணம் குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது. அப்படியானால் அது எவ்வாறு முட்டையிட்டு குஞ்சு பொரிக்கிறது எனக் கேட்கிறீர்களா? அதற்காக அது பெரிய போராட்டமே நடத்துகிறது. மனிதனுடனல்ல; தனது பறவையினமான காகத்திடம்தான். காகம் முட்டை இடும் காலத்தில் தான் குயிலும் முட்டையிடும். ஏதாவது ஒரு மரத்தில்காகம் கஷ்டப்பட்டு கூடு கட்டி முட்டை இடும். காகம் முட்டையிட்டு விட்டு இரைக்காக எப்போது எழுந்து போகும் என ஆண் குயிலும் பெண் குயிலும் மறை



வில் இருந்து வேவு பார்க்கும். காகம் கூட்டை விட்டு எழுந்து இரைக்குப்போனால் உடனே பெண் குயில் காகத்தின் கூட்டில் முட்டையை இட்டுவிடும். முட்டையிட குயில் காகத்தின் கூட்டில் இடும் நேரம் காகம் வந்து விட்டால் காகத்துக்கும் குயிலுக்கும் பாரிய வாய்த்தகராறு வந்து கைகலப்பு ஏற்படும். இந்த நேரத்தில் ஆண்குயில் காகத்துடன் சண்டை இட்டுக் கொண்டே காகத்தை ஏமாற்றி தூரத்திற்குக் கொண்டுசென்றுவிடும். அதாவது 'மாரீசன் மான்' மாதிரி. இந்த இடைவெளியை பயன்படுத்தி பெண் குயில் கூட்டில் முட்டை இட்டுவிடும்.

கணக்கில் பலவீனமான காகம் தனது முட்டையுடன் குயிலின் முட்டையையும் சேர்த்து அடைகாத்து குஞ்சு பொரித்து வளர்த்துவிடும். குஞ்சுகள் வளர்ந்து பறக்கும் தருவாயில் இருக்கும்போது காகத்தின் குஞ்சுகள் கா...கா..எனவும் குயிலின் குஞ்சுகள் கூ...கூ... எனவும் கத்தும் போதுதான் காகத்தின் கூட்டில் இனப்பிரச்சினை ஏற்பட்டுவிடுகிறது. இதனால் கூ...கூ என கூவிய குயிலின் குஞ்சுகளை கூட்டில் இருந்து தூக்கிப் போட்டுவிடும் காகம். இதனால் ஒழுங்காக பறக்கக்கூட தெரியாத குயிலின் குஞ்சுகள் பழங்களை உண்டு வாழும்.இவ்வாறு ஒரு சோதனையான வாழ்க்கை குயிலுக்கு.

குயில்களுக்கு நீளமான வாலும் சிவப்புநிற கண்களும் உள்ளன. இது 45 சென்ரி மீற்றர் வரை வளரும்.இந்தக் குயில்கள் குகுலிடயா (cuculidiae) இனக் குடும்பத்தைச் சேர்த்தது. இதனுடைய உயிரியல் பெயர் யூடினாமிஸ் ஸ்கொலோபெசியா. **Eudynamis Scolopacea.**

## சொற்சிலம்பம் - 73

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| னா | ப் | ம | தி | ல் | ட்ா | தீ |
| டி | கு | நீ | பா | ம | சீ | ட் |
| ன | யா | ச் | சோ | ன் | ணி | கா |
| லை | அ | க | ய | சு | ங் | கொ |
| சோ | ட் | தா | ஷ் | ரா | ம | ந் |
| மு | வ | கா | சா | ய் | யெ | ஸ் |
| சி | லை | ய் | ஓ | கி | லி | கு |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -71 இன் விடைகள்

01. வத்திக்கான்
02. கனடா

## சொற்சிலம்பம் - 71 இன் பரிசுக்குரியவர்

ச.கோசலை,
மு/பாலிநகர் மகா-
வித்தியாலயம்,
வவுனிக்குளம்.

## சொற்சிலம்பம் - 71 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. தி.மகேஸ்வரன், வருவாய்ப்பகுதி, புளியங்குளம்.
02. அ.மிருனாளினி, இல.538 வளநகர், மல்லாவி.
03. பு.தர்ஷன், இல 631, இராமநாதபுரம், கல்மடு.
04. மு.ஜயந்தி, கிளி/பூநகரி ம.வி, பூநகரி.
05. சு.ரிஷிபா, இல,20 இரத்தினபுரம், கிளிநொச்சி.
06. நே.காஷ்மியா, தரம்-1, கிளிநொச்சி ம.வி, கிளிநொச்சி.
07. க.நளாயினி, தரம் -7, வட்டக்கச்சி ம.வி, வட்டக்கச்சி.
08. கு.தயாஸ்கர் தரம் -10, கனகபுரம் ம.வி, கிளிநொச்சி.

01. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று.
01) ........................................

02. பலஸ்தீனத்தின் தற்போதைய தலைவர்.
01) ........................................

சொற்சிலம்பம்-73
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ........................................
முகவரி :- ........................................
........................................

# ஆமையாரின் இனிப்புச் சுவை

பகுதி-01






பாதைகள் நன்றாக இருந்தாத்தான் பயணம் சிறக்கும. அபிவிருத்தியில் எப்போதும் முதலில் கவனிக்க வேண்டியது வீதியையே என்பார்கள். வீதிகளைப் பற்றி சரியாகச் சிந்திக்காத எந்தச் சிறந்த அபிவிருத்தித்திட்டமும் வெற்றிபெறமுடியாது. வீதிகளைப் பற்றி உரிய முறையில் சிந்திக்கவில்லையென்றாலே அது சிறந்த திட்டமாக இருக்கமுடியாது. எந்தப் புனரமைப்புக்கும், மீள் கட்டுமானத்துக்கும் ஆதாரமானவை வீதிகளே.

வீதிகள் செம்மையாக இருந்தால்தான் மேற்கொண்டு வேலைகளைச் செய்வதற்குப் பொருட்களைக் கொண்டுபோக முடியும்; விரைவுகொள்ள முடியும்; தொடர்புக்கும் பயணத்துக்கும் இயலும்.

வீதிகளைக் குண்டும் குழியுமாக வைத்துக்கொண்டு பாடசாலைகளைக் கட்டுகிறோம். புதிய அலுவலகங்களைத் திருத்துகிறோம். சேவை மையங்கள் இயங்குகின்றன.

மழைகாலத்தில் சேறும் சகதியுமாக இருக்கும் வீதியால் விழுந்தெழும்பி, சேற்றில் தோய்ந்து, சிரமப்பட்டுத்தான் பிள்ளைகள் பள்ளிக்குப் போகின்றனர். அப்படித்தான் போகும்படியாக வீதிகள் தீர்மானமாக வைக்கப்பட்டுள்ளன.

மூன்று கிலோ மீற்றர் தூரத்தைச் சைக்கிளில் கடப்பதற்கு இருபது நிமிடத்துக்கு மேல் தேவைப்படுகிறது. சில வீதிகளில். சில வீதிகளில் என்பதைவிட பலவீதிகளிலும் என்பதே சரி.

பலசேவை மையங்கள்- குறிப்பாக தொண்டர் நிறுவனங்கள் புதிய, பெறுமதி மிக்க வாகனங்களில் நிறையவும் ஓடித் திரிகின்றன.

பாழடைந்த தெருக்களின் வழி தினமும் படுசிரமப்பட்டே தங்களின் சேவைக்குப் போகிறார்கள். இந்த நிறுவனப் பிரதிநிதிகள் வீதி போடுவது தங்கள் பணியல்ல அது அரசைச் சார்ந்தது என்றவை வாதிடலாம். அதில் ஒருபக்க நியாயமும் இருக்கும். ஆனால் உதவி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் எதற்காக உ.தவுகின்றன? ஏன் அவை எங்கிருந்தோ எல்லாம் வந்து தொண்டு செய்கின்றன?

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவை சேவை புரிகின்றன; உதவுகின்றன; தொண்டு செய்கின்றன. வளர்ச்சியடையாத நிலைகளில் உதவுகின்றன; சேவை செய்கின்றன. தொடர்ந்து உதவியென்றும் சேவையென்றும் தொண்டென்றும் ஒரு மக்கள் கூட்டத்துக்குச் செய்து கொண்டிருப்பதைவிடவும் அதை வளர்ச்சியை நோக்கி உயர்த்திவிட்டால் சரியே.

அப்படி வளர்ச்சியை நோக்கி உயர்த்துவதற்கு சில விடயங்களில் கூடுதல் கவனம் தேவை. அதற்கு சில பிரச்சினைகள் உண்டு. தொண்டு நிறுவனங்கள் அரசின் அங்கமுமல்ல என்பதும் தெரியும்.

அரசியற் சட்டங்கள், தொண்டு நிறுவனங்களுக்கான வரையறைகள், இந்த நிறுவனங்களின் தீர்மானங்கள் என்பவையெல்லாம் மேலோட்டமான தொண்டோடும் உதவிகள், சேவைகளோடும் தொண்டு நிறுவனங்களை நிறுத்திவிடுகின்றன. மேலோட்டமான உதவி அவர்களைத் தொடர்ந்தும் அந்த நிலையிலேயே வைத்திருக்கும்.

அதாவது பாதிக்கப்பட்ட மக்களை கையேந்திகளாகவே தொடர்ந்தும் வைத்திருப்பது என்பதாகும். வளர்ச்சியடையாத சமூகங்கள் நிவாரணத்தை எதிர்பார்க்கும் தரப்பினர், உதவிகளுக்காகக் காத்திருக்கும் பக்கத்தினர் என உள்ளன.

இது சனங்களின் தேவைகளை முழுதாக நிறைவேற்றும் பொறுப்பு தொண்டர் அமைப்புகளுக்குரியது என்பதல்ல.

அரசாங்கம் செய்ய வேண்டியதை தொண்டர் நிறுவனங்கள் செய்யமுடியாது. அப்படிச் செய்யவேண்டிய அவசியமும் இல்லை.

ஆனால், அரசாங்கம் ஒன்று, தவறாகவோ பொறுப்பற்றோ, மக்கள் நலனில் அக்கறையற்றோ செயற்படும்போதே சனங்களின் அந்தரிப்பு நிலை உருவாகிறது.

சனங்களுடைய அந்தரிப்பே சகல தரப்பையும் தொண்டு செய்யவேண்டும் என்ற நிலையை நோக்கிக் குவிக்கிறது.

என்னதான் சொன்னாலும் இது ஒரு கட்டத்தில் எல்லோரையும் அபிவிருத்தி, புனரமைப்பு, மீள் கட்டுமானம் என்ற இலக்குகளை நோக்கித் தள்ளிவிடும்.

அப்படியொரு நிலை வருகின்றபோது ஒவ்வொரு தரப்பும் தன்தன் நிலைகளில் நின்று சிந்திக்காமல் பொது நன்மைகுறித்த சாத்தியங்களைக் குறித்தே சிந்திக்கவும் திட்டமிடவும் வேண்டும் என்பதே இங்கே சொல்லப்படுவது.

அவ்வாறான சிந்தனையொன்றே சாத்தியமானதும் வெற்றியளிக்கக் கூடியதுமான வழிகளைத் தரும்.

இங்கே இப்போதுள்ள எங்கள் சூழலின் நிலைமை ஒன்றுக்கொன்று சம்பந்தம் குறைந்த விதிகளையுடையதாயிருக்கிறது.

சில உதாரணங்களைப் பாருங்கள். பல பள்ளிகளில் கணினிகள் உள்ளன. அவற்றை இயங்கவைக்கும் வசதிகள் இல்லை. மின்சாரம், பயிற்றும் ஆசிரியர் என்ற வசதிகள் கிடையாது.

பல மருத்து வமனைகளில் வெறுமனே கட்டடங்கள் மட்டும் உள்ளன. உபகரணங்கள், மருந்துப் பொருட்கள், மருத்துவர் மற்றும் ஊழியர்கள் இல்லை அல்லது பற்றாக்குறை இதனால் அவை இயங்கமுடியாதுள்ளன.

இவற்றைவிட இங்கே ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ளது போல் வீதிகளின் நிலை படுமோசமாக இருப்பதால் எந்த வேலையையும் உரியவாறு செய்து முடிக்க முடியாமலுள்ளது. கடினமும் வீண் செலவீனமும் தாமதமுமான நிலைமைகள் சகல வேலைகளில் உருவாகியிருப்பதற்கான பிரதான காரணம் வீதிகள் சீரில்லை என்பதுதான்.

மாரியில் குளங்கள், நீர்த்தேக்கங்கள், சேற்றகழிகள், அறுத்தோடிகள், வாய்க்கால்களாக பல வீதிகள் இருக்கின்றன.

கோடையில் புழுதி கெம்பிப் பறக்கும் தெருக்களாக, மேடும், பள்ளமும் நிறைந்த தடைவழிகளாக இந்தத் தெருக்கள் மாறுகின்றன.

மாரியோ கோடையோ இந்தத் தெருக்களால் பயணிப்பது என்பது வெறுப்பூட்டும் அனுபவமே. வீண் நேரச்செலவும், எரிபொருள் விரயமும் தினமும் ஏற்படுகிறது.

உற்பத்திகளைச் சந்தைப் படுத்தவும் பொருட்களை விநியோகிக்கவும் சனங்களுக்கான தொடர்புக்கும் பயணத்துக்குமான ஒரு வழி நமது சூழலில் வீதிகள் தான்.

சில வீதிகளில் தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் பயணிக்கிறார்கள்.

சில வீதிகள் மிகத் தொலைவு கொண்டவை. சில வீதிகள் சில கிராமங்களுக்கு அல்லது சில இடங்களுக்கு ஒரேயொரு வழியானவை.

போகும் வழியைச் சரியாக வைத்திருக்கவில்லையென்றால் போய்ச் சேருமிடம் சரியாக இருக்காது என்பார்கள்.

சேருமிடத்தில் எத்தனைதான் வசதிகள் சிறப்புகளிருந்தாலும் அவற்றைப் பெறுவதற்கு அங்கே போக வசதியும் வழியும் வேண்டுமே.

வழிகள் சரியில்லை யென்றால் சிறப்புகளாற் பயனில்லை.

திரும்பத்திரும்ப பலரும் வீதிகள், பாதைகள் குறித்து வலியுறுத்தி எழுதியும் சொல்லியும் வருகிறார்கள்.

நடைமுறையில் எல்லாம் மந்தமாகத்தானிருக்கின்றன. அல்லது சாட்டுப்போக்குகளால் தட்டிக்கழிக்கப்படுகின்றன; புறந்தள்ளப்படுகின்றன.

ஒரு தடவை பொறுப்புவாய்ந்த ஒருவருடன் வீதிகளின் நிலைமை பற்றிக் கதைக்கும்போது அவர் சொன்னார், வருகின்ற காசு எல்லா வீதிகளையும் திருத்தப்போதாது அத்தோடு ஒவ்வொரு வீதிக்கும் ஒவ்வொரு தரமுண்டு. அந்தத் தரத்தின் அடிப்படையில்தான் அவற்றை செப்பனிட முடியும் என்று.

முதற்கூற்று நிர்வாக மொழியில் சரியானது. ஆனால் நடைமுறை சார்ந்து பார்க்கும் போது A தரத்திலான வீதி, B தரத்திலான வீதிகள்போன்று சில Cதரத்திலான வீதிகளும் சனப்புழக்கம், தொடர்புக்கு பிரதானமானவையாக இருக்கின்றன. முன்பு யுத்தகாலத்தில் இருந்த நிலை மையை இப்போது மீள்குடியேற்றக் காலத்திலும் பின்பற்ற வேண்டும் என்றில்லை.

C தரத்திலான வீதிகள் சில அதிகம் சனத்திரளைக் கொண்டிருக்கின்றன. இதைத் தரமுயர்த்தா விட்டாலும் பரவாயில்லை. இருக்கின்ற குண்டு குழிகளையாவது நிரப்பி விடுங்கள் என்றுதான் சனங்கள் கேட்கிறார்கள்.

உங்களுடைய தர மதிப்பீட்டையும் சொல்லுகிற நியாயங்களையும் ஒரு பக்கம் வைத்துவிட்டு யதார்த்தத்தை மதிப்பிட்டுச் செயலாற்றுங்கள் என்பது ஒரு அவசிய வேண்டுதல்.

எல்லாவற்றுக்கும் வீதிகளையே சொல்லிக் கொண்டிருந்தால் முன்னுக்கு ஓரடியையும் வைக்கமுடியாது.

சனத்திரள், குடிசனப் பெருக்கம் என்பவையே தேவை களை மதிப்பிடுபவை. இதை விளங்கிக்கொள்ளவேண்டும்.

குடிப்பெருக்கம் நிறைந்த பகுதியைவிட குடிசனம் இல்லாத வீதிகளுக்கு மின்சாரம் போவது போல வீதிகளும் இருக்கக்கூடாது.

இதற்கு பழைய சட்டங்களையும் கோவைகளையும் காட்டத்தேவையில்லை.

**கருணாகரன்**



# நித்திரை கழிய மற்ற நேரத்தையெல்லாம் நவக்கிரகங்களுக்கு குடுத்துப்போட்டு இருக்கிறம்...

உலா 20

எல்லாப்பிள்ளையளுக்கும் வணக்கம்! ஏதோ உந்த மழையும் ஓயுற மாதிரி தெரியேல்லை. அம்பாறை, மட்டக்களப்புப்பக்கம் கன பகுதிகளுக்கான பாதையளும் பாவிக்கேலாத அளவுக்குச் சேதமாகிக்கிடக்காம். கிழக்கு மாகாணத்தில 4, 5 நாடுகள் தங்களின்ர படையளோட திரியினம். இருந்தும் இன்னும் சனம் குறைந்தபட்ச வசதியளே கிடைக்காமல் கஷ்ரப்படுகிது. கிட்டடியில ஒரு அலுவலா தெற்குப்பக்கம் போன நேரம் கன வெள்ளைக்காற ஆமிமார் பெரிய ஒரு கப்பலில இருந்து பொருட்களை இறக்கிக்கொண்டிருந்திச்சினம். கப்பலில பெரீசா 'சுனாமி நிவாரணப் பொருட்கள்' எண்டு போட்டிருந்திச்சு. அப்பாடா ஒருமாதிரி எங்கட சனத்தின்ர துயரெல்லாம் தீரப்போகுது, எதுக்கும் அவையளுக்கு நாலு வார்த்தை நன்றி சொல்லுவோம் எண்டு கிட்டப்போனன். இதென்னடா கரைச்சல் ! மல்லர் மாதிரி இரண்டு இரண்டு ஆமியளாக ஒரு சின்ன டப்பாவை நாலு கையாலையும் கவனமாய் இறுக்கிப்பிடிச்சு இறக்கிக்கொண்டிருந்திச்சினம். அதென்ன அப்பிடிக் கவனமான டப்பா எண்டு பார்த்தால் 'சண்-கிறீம்' எண்ட திலை கிடந்திச்சு. விசயம் ஒண்டும் விளங்காமல் உதென்ன எண்டு அவையளையே கேட்டன். 'றிலீ.·.ப் கொன்வோய் (நிவாரணப்பொருட்கள்)' எண்டு பதில் வந்திச்சு. 'நிவாரணத்துக்கு ஏன் சண்-கிறீமைக் கொண்டு வாறீயள் ? ஏதாவது அவசரமா, அவசியமாய் தேவைப்படுறதைக் கொண்டு வந்திருக்கலாமெல்லே !'. 'நோ... யூ ஆர் றோங்க் மிஸ்ரர். வீடில்லாமல் மக்கள் வெளியாலை கனநேரம் வெய்யிலுக்கிள்ளை நிண்டால், அவையளுக்கு தோல் வருத்தம் வந்திடும். நீர் லோக்கல் பியூப்பிள்ளை ஒண்டு. உமக்கிது விளங்காது'. 'என்ர கடவுளே! உங்கட வெள்ளைத் தோலுக்குத்தான் பாதுகாப்புக்கு சண்-கிறீம் பூசிப்போட்டு வெளியிலை திரியோணும். எங்களின்ர தோல் வெய்யிலுக்குப் பழக்கப்பட்டிட்டிது. அது சரி ஆறடிக்கு மேலாலை வளர்ந்திருக்கிறீங்கள். ஒரு கிறீம் டப்பாவுக்கு இரண்டு பேர்க்கணக்கில 1500 பேர் நிக்கிறீயள். நான் வயசு போன கிழவனே உதைமாதிரி 50 டப்பா ஒரே தடவையில சுமப்பன். நீங்கள் உதென்ன கப்பல் பார்த்தவன் மாதிரி காரியம் செய்யிறீயள் எல்லாரும்?'. நான் சொன்னதை முன்னுக்கு கேட்டுக்கொண்டு நிண்ட ஒரு அதிகாரி தரத்தவர் சந்தோசமடைஞ்ச முகத்தோட வந்து என்ர கையைக் குலுக்கினார். 'ஓ...யூ.. லோக்கல் ஓல்ட் மான். நீங்க ரொம்ப புட்டிசாலி. இண்டையில இருந்து சிறிலங்காவுக்கான எங்கட legal adviser (சட்ட ஆலோசகர்) நீங்க தான் ! மாதம் ஆயிரம் டொலர் சம்பளம் !'. 'இஞ்சை தேவைப்படாத கிறீம் டப்பாவைத் தூக்கிறதுக்கு 2 பேர் தேவையில்லை எண்டு சொல்ல புட்டிசாலியா இருக்கத்தேவையில்லை. உதெல்லாம் எனக்கு விளங்கும். சோப்புப்போட்டு ஆக்களை எடுக்கிற உந்த வேலையை வேறஇடத்தில வைச்சுக் கொள்ளுங்கோ ! ', எண்டு சொன்னபடியே அந்த இடத்தை விட்டுக் கழண்டிட்டன்.

உதைச்சொல்லத்தான் ஒரு விசயம் ஞாபகத்துக்கு வருகிது. இந்தியாவின்ர பெரிய நகரங்களிலை எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பீட்டின்படி 62 வீதமான சனத்துக்கு ஜோர்ஜ் புஷ் அரசை நல்லாப் பிடிச்சிருக்காம். ஏதோ நல்லா உதவியள் கிடைச்சிருக்கு எண்டு நினைப்பியள். ஓமோம் எம்.ரி.வியிலை பாட்டுக்கள், அது இதெண்டு எக்கச்சக்கம் நற்பணியளாம். போனகிழமை இந்தியா முழுக்க 25 FM வானொலியளை அமெரிக்கா தொடங்கிறதுக்கு ஆரம்பகட்டமா அலுவல் குடுக்க வெளிக்கிட்டிருக்கு. பாருங்கோ காலத்தை ! இவையள் ஊரோட உளவாடும் கும்பலுக்கு உதவ, வேற ஆரோ இவையளின்ர நடுவீட்டுக்குள்ளையே... ம்... ம்... 62 வீதம் எண்டால் சும்மாவே ? காங்கிரஸ் இல்லாட்டி பாரதீய ஜனதாவுக்குக் கூட உவ்வளவு கிடையாது. என்னவோ நீதி, நியாயத்தை மதிச்சு மற்றவையளையும் மூச்சுவிட அனுமதிச்சு எல்லாரும் வாழத்தலைப்பட்டா எவ்வளவு நல்லது ! இன்னுமொரு விசயம் பிள்ளையள். ஈராக்கிலையும், ஆப்கானிஸ்தானிலையும் இருக்கிற அமெரிக்கப்படையளுக்கு ஒரு வருசத்துக்கு ஒதுக்கியிருக்கிற பாதுகாப்புச்செலவு 100 பில்லியன் டொலர் (100 000 000 000 டொலர்! என்ர கடவுளே, ஏ9 என்ன ஆசியாவைச் சுத்தியே சீனப் பெருஞ் சுவர் மாதிரி குந்து கட்டலாம்!). உவ்வளவோடை, ஆயிரம் பேருக்கு மேலை தங்கட ஆக்களையும் இழந்தும் நினைச்சதும் நடக்கேல்லை! நல்ல பேரும் கிடைக்கேல்லை! அந்தச் செலவோடை பார்த்தால் இலங்கைக்கு ஓமெண்ட தொகை 200இல ஒரு பங்குதான். அதிலையும் வந்து சேர்றது எவ்வளவெண்டு வந்தாப்பிறகுதான் தெரியும்.

உங்களில ஆருக்காவது என்ரை பக்கத்துவீட்டு பொன்னர்க்கிழவனைத் தெரியுமே ? இவரே கிழவர்... இவர் போய் அவரை கிழவர் எண்டிறாரெண்டு நினைக்கிறீங்களாக்கும். இதென்ன பெரிய வயசு ! எல்லாம் மனம் தான் பாருங்கோ ! ஆ . .அவர் பொன்னரோட போனகிழமை நல்லாய்த்தான் வாக்குவாதப்பட்டிட்டன். உந்த அழிவுகளைப் பற்றி கதைச்சுக்கொண்டிருக்கேக்கிள்ளை தான் நான் சொன்னன், 'பத்து வருசத்துக்கு முன்னால உலகமெல்லாம் இருந்த பாலைக்குடிச்சு முடிச்ச பிள்ளையார், இந்த சுனாமி அலையளை நடுவழியிலை வைச்சுக் குடிச்சு முடிச்சு உதவியிருக்கலாம்' எண்டு. 'இப்படி நாங்கள் கஷ்ரப்படோணும் எண்டு, எங்கட தலைவிதி இருந்தால் அதை ஆராலைதான் மாத்தலாம் ?', எண்டு பெரிய ஒரு பெருமூச்சோடை சொன்னார். 'கண்டறியாத மண்ணாங்கட்டி தலைவிதி ! அப்பிடி ஏதாவது அபூர்வம் நடந்து, உது மட்டும் தடுக்கப்பட்டிருக்கோணும்... ', என்ர ஆசையைச் சொன்னன். 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால், தெய்வம் ஏதுமில்லை ! நடப்பதையே நினைத்து விட்டால்...'. அவற்றை பாட்டைக் கேட்க எனக்குப் பத்திக்கொண்டு வந்திச்சு. எட கைகாவலுக்கு உதவாத கண்டறியாத பாட்டுகளைப் பாடிக்கொண்டு, மனுசற்றை மண்டையெல்லே வெடிக்கிது. 'எட 74 வயசில நான் இன்னும் உயிரோடை இருக்கிறன். எத்தினை வாழவேண்டியதுகள் எங்களை விட்டிட்டுப்போட்டுதுகள்'. 'ஏரம்பர் ! உம்மட ERAMPU எழுத்துகளின்ர கூட்டுக்கு 26ஆம் திகதி அண்டைக்கு கண்டமில்லை'. ' சும்மா கண்டமும், சமுத்திரமும் ! விசர்க்கதை ! அந்த டிச. 26 ஞாயிற்றுக்கிழமை ராசிபலன் பகுதியை நானும் கிட்டடியிலை திருப்பி எடுத்துப்பார்த்தனான், ஏதாவது கிடக்கோ எண்டறிய. ஒரு ராசிக்குக் கூட அப்பிடி ஒண்டுமே சொல்லப்படேல்லை. எல்லாம் முடிஞ்சாப்பிறகு குரு மேடும், கும்பமேடும் கையிலை கிடக்கு, கண்டுபிடிக்கலாம் எல்லாத்தையும் எண்டு கதை அளக்கினம் எங்களுக்கு. உதிலை ஒண்டுமே இல்லை எண்டு நான் சொல்லேல்லை. ஆனாலும், நம்பிற அளவுக்கு ஒண்டுமே இல்லை எண்டிறதைத்தான் சொல்லவாறன். இன்னும் சிலர் பழைய நேரத்தை அமுல்படுத்தினால் பிரச்சினை தீருமெண்டு சொல்லினம். அகலாங்கு, நெட்டாங்கு எல்லாம் மனுசரால ஆக்கப்பட்ட கற்பனைக் கோடுகள் எண்டிறது இந்த அறுந்த தேவாங்குகளுக்கு ஏன்தான் விளங்குதில்லையோ ? நான் தமிழன், அப்பிடியிருக்க என்ர பேரை இங்கிலிஷிலை எழுதி, என்ரை தலைவிதியை என்னண்டு சொல்லிறது ? அதுவும் தமிழ்ப்பெயரை ஆங்கிலத்திலை எழுதேக்கிள்ளை கிட்டத்தட்டத்தான் அது சரியாய் இருக்கும். இன்னுமொண்டுங்கோ! கனகராசா எண்டால் அதை கனGAறாஜா எண்டெல்லே எழுதினம். இல்லாட்டி கூட்டெண் பிழைக்கிதெண்டிட்டு பேரை silent letters ஐப்போட்டு சரிகட்டிறதே? அண்டைக்கு தெரிஞ்ச தம்பி ஓராள் தான் கட்டப்போற வீட்டுப் பிளானை என்னட்டைத் தந்து, ஐடியா கேட்டார். நான் பார்த்து அங்கையிஞ்ச கொஞ்சம் நீள அகலங்களை கூட்டிக்குறைச்சுபபோட்டன். அதுக்கு அவர் சொன்னார், அளவுகள் ஒற்றை இலக்கத்திலை இருக்கோணும் எண்டொரு சாத்திரம் இருக்காம். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய எங்கட மூத்த குடியளிட்டை உப்பிடியும் ஒரு சாத்திரம் இருக்காம். அவருக்குச் சொன்னன், 'அடியிலை ஒற்றை இலக்கங்களா இருக்கிற இந்த அளவுகளை எல்லாம் அங்குலமாப் போட்டால் இரட்டை இலக்க மாத்தானே கட்டாயம்வரும். காலா காலமா இருந்து வாற வழக்கம் எண்டால் கல், காதம் எண்ட அளவுகளையெல்லோ கடைப்பிடிக்கோணும். அடியும், அங்குலமும் வெள்ளைக்காரன் காட்டிக்கொடுத்ததெல்லே !

என்னவோங்கோ ! அவனவன் அங்கையிஞ்சை அதையிதைக் கண்டு பிடிச்சு ஈ-மெயில், இலையான்-மெயில் எண்டெல்லாம் அறிமுகப்படுத்தி, முன்னேறிக்கொண்டிருக்க நாங்கள் சும்மா இருந்துகொண்டு விஞ்ஞானத்துக்குப் பதிலா விண்ணாளம் கதைச்சுக் காலம் போக்கிக்கொண்டிருக்கிறோம். அவங்கள் மணிக்கூட்டைக் கண்டுபிடிச்சு, நேரா நேரத்துக்குத் தன்ர கடமையளைச் செய்து கொண்டிருக்கிறாங்கள். நாங்களோ அவன்ரை கண்டுபிடிப்பை வைச்சு, இருக்கிற 24 மணித்தியாலத்தில நித்திரை கழியமிச்சமிருக்கிற நேரம் எல்லாத்தையும் நவக்கிரகங்களுக்குபிரிச்சுக் குடுத்துப்போட்டு ஆவெண்டு கொண்டு இருக்கிறம். நீங்கள் நினைக்கக்கூடாது, இவர் ஆகலும் ஓவராப் போறாரெண்டு.இப்பத்தைய நிலைமை என்னை அப்பிடிச் சொல்லிற அளவுக்குக் கொண்டு வந்துவிட்டிது. அவங்கள் சந்திரனுக்குப் போனாங்கள் செவ்வாய்க்கு 'பாத்.·.பைன்டர்' அனுப்பினாங்கள் இன்னும் ஸ்பிறிற், ஹசினி எண்டு ஏதேதோ பேரிலையெல்லாம் அனுப்பித்தொலைக்கிறாங்கள் பூமிக்கு வெளியாலையும் மனுசர் வாழக்கூடின மாதிரி கிரகங்கள் இருக்கோ எண்டு அண்ட வெளியிலை உலாத்திக் கொண்டிருக்கிறாங்கள். நாங்கள் இஞ்சை '1இல செவ்வாய்க்குற்றம் உள்ள அவாவுக்கு, 2இல குற்றம் இருக்கிற அவரைத் தேடி அலைஞ்சுகொண்டிருக்கிறோம்'. அவனாரோ கண்டுபிடிச்ச மணிக்கூட்டை வைச்சுக்குறிப்பெழுதின ஒண்டுதான் நாங்கள் கண்டமிச்சம். நல்லகாரியம் ஒண்டுமே குறிப்பிட்ட நேரத்துக்கு நடக்கிறேல்லை. சொன்ன நேரத்துக்கு ஒரு இழவும் நடக்கிறேல்லை. அப்பிடியிருக்க பிறந்தநேரம் மட்டும் சரியாக் குறிச்சிருப்பினம் எண்டு எப்பிடி எதிர்பார்க்கிறது. சரி அப்பிடித்தான் casio high quality மணிக்கூட்டைத் துணைக்கு எடுத்துக்கொண்டாலும், கால் வெளியே வந்தாப்பிறகோ, தலை தாப்பிறகோ அல்லாட்டி கொடி வெட்டினாப்பிறகோ... எந்த நேரத்தை பிறந்த நேரம் எண்டு குறிக்கிறவை? அதிலை ஏதாவது பொது வழக்கம் தானும் இருக்கிதோ? எனக்குத் தெரிஞ்ச ஒருசிலர் பள்ளிக்கூடத்திலை பதியேக்கிளை தான், சும்மா ஒரு நாலு வயசெண்டு சொல்லி Birth certificate எடுத்தவை. தயவுசெய்து குறை நினைக்கக்கூடாது, ஒரு கேள்வி ஒண்டு கேக்கிறன். முந்தி அந்தநாளிலை என்ரை காலத்தில பிரபல்யமா இருந்த மூக்கம்மா, முனியம்மா எண்ட நடிகையளை உங்களுக்குத் தெரியுமோ ?...ஆ...சீ மன்னிக்கோணும் ! நான் உங்கட காலத்துக்கு வாறன். ஆர்உந்த பேயாசிங்கியோ, சாயாசிங்கியோ !. அந்தப்பிள்ளைக்கு செவ்வாய்தோசம், இஞ்சினைக்கிள்ளை வந்து ஆராவது தன்னைக் கட்டுவீங்களோ எண்டு அறிவிக்கிது எண்டு வைப்போம். பருத்தித்துறையில இருந்து காலி வரைக்கும் கண்டி-வீதி ஆம்பிளையளின்ர கியூவால நிரம்பி வழியுமோ இல்லையோ? ஒழுங்கா கியூவில நிக்கினமோ அல்லாட்டி கலவரம் வருகிதோ எண்டிற அளவுக்கு நிலைமை மாறிடும். எட இவ்வளவு சொல்லிற என்ரபுத்தியே அந்த நேரம் எப்பிடிப்போகுதோ தெரியாது. சும்மா பல்லைக்காட்டிறதை விட்டிட்டு, சொல்லவாற விசயத்தைப் பிடியுங்கோ! இயல்பாகவேசந்தர்ப்பங்களுக்கு ஏற்றமாதிரி சாத்திர, சம்பிரதாயங்களை ஏற்கனவே நாங்கள் மாத்தி வைச்சிருக்கிறம். அந்த மாற்றமும்,வழக்கங்களும் எங்கடஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஆதரவாக இருக்கோணுமே தவிர, ஆக்கினையளா இல்லை.

உப்பிடிநான் கதைபடேக்கிள்ளை எங்கட முன்வீட்டு செல்வம் ஆச்சி சொல்லுவா, 'அது அது அறிஞ்சவை தெரிஞ்சவை தான் கனகாலமா ஆராய்ச்சியள் செய்து, எங்கட முன்னேற்றத்துக்காகத்தான் ஏடுகளிலை எழுதி வைச்சிட்டுப் போனவை. அதுக்கு ஒருசிலர் பிழையா விளக்கம் குடுத்தாப்போல எல்லாம் பிழையெண்டு நாங்கள் அவசரப்பட்டு சொல்லக்கூடாது' எண்டு. எங்கட முன்னேற்றத்துக்காகத்தான் விட்டிட்டுப் போனவை எண்டால்... அந்த தீர்க்கமான உண்மையளை வைச்சு நாங்கள் முன்னேறியெல்லோ இருக்கோணும். உலகத்திலையே உருப்படாமக் கிடக்கிற இரண்டு நாடுகளும் (இலங்கையும், இந்தியாவும்) பெரிய சாத்திரக்கொம்புகள் இருக்கிற நாடுகள்தானே!ஆனாலும் பாருங்கோ! செல்வம் ஆச்சியைப் போலத்தான் நானும் கிட்டத்தட்ட அதைத்தான் சொல்லிறன். எல்லாமே எல்லாக் காலத்துக்கும் அறிவுச்சியாக நிலைபேற்றோட இருக்காது. இருக்கிற அறிவுநிலையிலை இருந்து மேலதிகமாச் சிந்தித்துப் பெறுகிறதுதான் ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிவு.

நிகழ்வுகளுக்கான மூல காரியங்களை அறிவியல் ரீதியாக, புலன்களால் அறியக்கூடியதாக விளங்கிக்கொள்ள முயற்சிக்கோணும்.




(20 ஆம் பக்கம் பார்க்க...)




# தேவதையைக்கண்டேன்



விதி படத்தைப்போல ஒரு பரபரப்பைத் தரக்கூடியவாறு இன்னொரு படமாக தேவதையைக் கண்டேன் வந்துள்ளது. விதியில் ஆணினால் ஏமாற்றப்பட்ட பெண் வருகிறாள். அவள் தன்னுடைய எதிர்பார்ப்புக்கு நீதிகோரி ஏமாற்றத்துக்கு நியாயம் கேட்டு நீதிமன்றுக்கு வருகிறாள். நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினை தொடர்பாக நடக்கிற விசாரணை மற்றும் விவாதக்காட்சிகள் மிகப் பிரபலமானவை. உண்மையில் அந்தப்படத்தில் காட்டப்பட்ட நீதிமன்றக் காட்சிகளைவிட அதில் பேசப்பட்ட வசனங்கள்தான் வெகுசனத்தைக் கவர்ந்திருந்தன. அதனால்தான் 'விதி' படத்தின் ஓடியோ கெசற் எல்லா இடங்களில் ஒலித்தன. இன் னும் அதற்கேயுரிய கவர்ச்சி குறைய வில்லை.

எல்லாவற்றையும் போர்த்தி மூடி நாகரிகம் பேணுகிற நாங்கள் 'விதி' படத்தில் பேசப்பட்ட பேசவே முடியாத வார்த்தைகளை விசமத்தனமான கேள்விகளை வெளிப்படுத்தமுடியாத இரகசியங்களை விரும்பிவிரும்பிக்கேட்டோம். இதில் பால் வேறுபாடு வயது வேற்றுமை எதுவும் இருக்கவில்லை. இதில் ஒருவரேனும் வெட்கப்பட்டதாகவோ கூச்சமடைந்ததாகவோ இல்லை.

ஒரு நண்பர் எப்போதும் சொல்வதைப்போல விதியில் பெண் அடையாளத்தைத் தூக்கலாகக் காட்டுவதாக ஒரு தோற்றத்தை ஏற்படுத்தினாலும் உண்மையில் அது பெண் தனது பிரச்சினைகளுக்கான நியாயத்தை தீர்வை அழுதுதான் பெறமுடியும் என்று காட்டியது.

பெண்களின் ஆளுமை போராட்டம் என்பவற்றால் பெண் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதற்கு எதிர்மறையானது அது.

விதியின் வசனங்கள்தான் பரபரப்பை ஏற்றி தமிழ் மக்களிடம் வியாபார ரீதியாக வெற்றியைப் பெற்றது.

இப்போது 'தேவதையைக் கண்டேன்' பெண்ணால் ஏமாற்றப்பட்ட அவமதிக்கப்பட்ட ஆணைக்கொண்டு ஆணின் நியாயத்தைக் கேட்டு வந்திருக்கிறது. இதன்முழுமையான நோக்கம் வியாபார ரீதியான வெற்றிதான்.

சர்ச்சைக்குரியமாதிரி, ஒரு விசயத்தை கையாள்வதன்மூலம் கூடுதலான கவன ஈர்ப்பைப் பெற வைக்கும் உத்தியுடன் படம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக இளைய தலைமுறையின் இரத்தத்தைச் சூடேற்றும் காரியம் இது.

ஏற்கனவே தமிழ்ச்சினிமாவில் பார்த்துப் பார்த்து, பார்த்தே சலித்துப்போன காதல்முறைகள் தான் இதிலும். அப்பாவியான படிக்காத ஏழை இளைஞன் ஒரு படித்த பணக்காரப்பெண்ணை விரும்புவதும் பிறகு இருவருக்குமிடையில் காதல் மலர்வதும்தான் கதையின் பாதி மீதி. இடையில் திருமணம் என்று வர அந்தப்பெண் அவனுக்குத் தண்ணி காட்டிவிட்டுப்போக முயல்கிறாள். அவன் தன்னுடை எதிர்பார்ப்பு ஏமாற்றமாகிவிட்டதை எதிர்த்து பொலிஸ் நீதிமன்றம் என்று போய் வாதிட்டு வெற்றிபெறுகிறான். இங்கே படத்தை ஒருவிதமாக யதார்த்தத் தளத்தில் நின்று பேசுவதாகக் காட்ட முயற்சிக்கப்பட்டுள்ளது. இந்த யதார்த்தம் மேம்போக்கானது. ஆழமற்றது.

ஏதோ சீரியஸான ஒரு விவகாரத்தைப் பேசுவதுபோன்ற பாவனை இதில் உண்டு. ஆழமாக யோசிக்கும்போது ஆணாதிக்கத்தை மேலும் நிறுவுகிற ஒருமுயற்சி இது எனலாம். அதேவேளையில் பெண்ணைப் பாதுகாப்பதற்கென்று சட்டங்கள் உள்ளன. பெண்ணுக்கென்று பரிவுகளும், ஆதரவும் சட்டத்திலும் நீதிமன்றிலும் இருக்கிறது. ஆணால் பாதிக்கப்படுகிற பெண் நீதி கேட்டால் அவருக்கு அவை உதவுகின்றன. ஆனால், பெண்ணால் ஆண ஏமாற்றப்படும் போது, பாதிக்கப்படும் போது ஆண்களுக்கென்று ஆதரவு தரவும் நியாயம் சொல்லவும் ஒன்றுமேயில்லை. சட்டத்திலும் சமூகத்திலும் அதற்கு ஆதரவும் இல்லை. இடமுமில்லை என்பதைச் சொல்லி ஒரு பக்க விழிப்பைக் கோருகிறது எனத் தெரியும்.

உண்மையில் நீதித்துறை மீதான கேள்வியை எழுப்புகிறது, நீதியிலுள்ள குறைபாட்டை விமர்சிக்கிறது இது என்பதைவிடவும் இளையவயது ஆண்-பெண் நிலைகளுக்கிடையில் 'கடி' எனப்படும் வாய்ச்சவடா லுக்கான வழிகளில் பண்டத்தை பரப்பியுள்ளது என்பதே சரி.

மேம்போக்காகப் பார்க்கும் போது துள்ளுவதோ இளமை, பாய்ஸ் 7G ரெயின்போகொலனி, காதல், மன்மதன் போன்ற படங்களுக்கு நிக ராகவோ ஏறக்குறையவோ வந்துள்ளதாக தெரிகின்றமாதிரி படம் உருவாக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வந்துள்ள சில படங்களில் தேறிவந்த பெண் ஆளுமைச் சித்திரிப்பு இங்கே அடித்துத் தூளாக்கப்பட்டுள்ளது.

இதில்வரும் பெண் பொறுக்கித்தனமானவளாகக் காட்டப்படுகிறாள். பெண்களின் ஒரு சாரார் இதே மாதிரி பொறுப்பற்றதனமாகவும திமிராகவும் சந்தர்ப்பவாதிகளாகவும் நடக்கிறார்கள் என்பது உண்மை. காதலிக்கும்போது ஒருவிதமாகவும் திருமணத்தின்போது இன்னொரு விதமாகவும் மதிப்பீடுகளும் தெரிவுகளும் மாறுபடுவதும் விலகல்கள் நிகழ்வதும் ஆண் பெண் என்ற இரு தரப்பிலும் நிகழும் பொதுவிடயம். இங்கே பெண்ணை மட்டும் எடுத்திருக்கிறார்கள் என்ற வாதத்தை யாரும் வைக்கலாம்.

எமது சமூக அமைப்பிலும் மன அமைப்பிலும் இன்றும் பெண்ணுக்கான இடம் நியாயமாக முழுமைப்படுத்தப்படவில்லை. அத்துடன் உடல் ரீதியான பாதிப்பும் அவளுக்கே அதிகம். அதனால்தான் பெண்ணுக்கு சட்டத்தில் பாதுகாப்பும் கருணையும் ஏற்படுவதுண்டு.

வர்க்க வேறுபாடுதான் எல்லாவற்றுக்குமான பிரச்சினை என்பதையும் படம் சொல்கிறது. அது கவனத்துக்குரியதோர் இடம். நீதிமன்றத்தில் தோற்றுப்போய், அவனிடம் அவள் மன்னிப்புக் கேட்டு வருகிறாள்.

வழமையான தமிழ்ச் சினிமாவில் எப்படியோ ஆபத்துக்கு முதல் அல்லது வணக்கத்துக்கு முன்பு இருவரும் இணைந்துவிடுவார்கள். இதில் அவன் அவளை நிராகரித்துவிட்டுப்போகிறான். உன்னை எதிர்பார்த்து நான் வழக்காட வரவில்லை. பொலிஸ், நீதிமன்றம் சாட்சிகள், விசாரணைகள் என்ற விவகாரங்களின் பின்தான் நமக்குள் காதல் இருந்தது என்று நிரூபிக்க வேணும். புரிந்துகொள்ள வேணுமா? என்று அவன் எழுப்பும் கேள்வியும் நியாயமானவை, கவனத் துக்குரியன.

பொருத்தமில்லாத பகிடி அறுவைகள் தேவையற்ற சண்டைக் காட்சிகள் மறைவிடங்கள் அம்பலமாகும் நடனக் காட்சிகளுக்கு காத்திருப்போருக்கு இந்தப்படம் ஏமாற்றம் தரும். பதிலாக சூடான வசனங்கள் உண்டு.

நீதிமன்றத்தில் முன்வைக்கப்படுகிற விவாதங்கள் பெரும்பாலும் இயல்பற்று பலவீனமாகவேயுள்ளது. அது சறுக்கல்.

மாறுதலான முயற்சிகளுக்கிடையில் 'தேவ்தையைக் கண டேன்'சாதாரணமான ஒருமுயற்சியே.

கமெராவைவிட வசனத்தையே கூடுதலாக நம்பி இந்தப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இசை, படத்தொகுப்பு எல்லாம் தனியடையாளம் பெறவில்லை.

ஆனால், திருப்பாச்சி, கஜேந்திரா, கில்லி போன்ற படங்களைவிட இது பரவாயில்லை என்பது ஒரு சிறு ஆறுதல். எப்படித்தான் சொன்னாலும் படம் நன்றாக ஓடினாலும் தரம் நோக்கிய நிலையில் இது அடிசறுக்கல்தான்.

— — — — — — — — ஆரதி


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
16
10
1914



மறைவு
04
01
2005

அமரர் திருமதி தையல்முத்து நாகனாதி
நெடுந்தீவு கிழக்கு

ஆயிரமாயிரம் உறவிருந்தாலும் — அம்மா
உங்களைப் போல் வந்திடுமா
அன்புத் தெய்வமே அறிவுப் பொக்கிசமே
ஆலமரமாய் நீங்களிருக்க — அம்மா
விழுதுகளாய் நாங்களிருந்தோம்
ஆலமரம் சாய்ந்ததம்மா — எங்கள்
ஆனந்தம் பறிபோனதம்மா.

தகவல்
க.கலைச்செல்வன்
(பேரன்)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

இல: 538 7ஆம் யூனிற்
இராமநாதபுரம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப் பிள்ளைகள்.

5473


(19 பக்கத்தொடர்ச்சி..)

அதை விட்டிட்டு நாலு பேர் சொல்லினம் எண்டிறதுக்காக தலையாட்டக்கூடாது. 1609ஆம் ஆண்டு தன்ர தொலைநோக்கியை வைச்சு கலிலியோ பூமியின்ர வடிவம், சூரியத்தொகுதியைப் பற்றியெல்லாம் சொல்லிப்போட்டார். அதுக்குப்பிறகும் அவர் புவியியல் தொடர்பாகச் சொன்ன கருத்துகள் பிடிக்காமல் வத்திக்கானில இருந்த பாப்பரசரின்ரை அதிகாரம் அவரை சிறையில தள்ளிச்சிது. அதெல்லாம் நடந்து 392 வருசங்களுக்குப் பிறகு வத்திக்கான் தங்கட பிழையை ஒத்துக்கொண்டிச்சு. கொப்பேணிகஸூம், கலிலியோவும் பூமி உருண்டை எண்டு சொல்லி கிட்டத்தட்ட எல்லாருமே நம்பினாப்பிறகு, 1960-1970களில தமிழ்நாட்டில இருக்கிற புத்திஜீவிகள் கூட்டம் 'அகத்தியர்' படம் எடுத்திச்சினம். அதிலை இமயமலையில நடந்த சிவபெருமானின்ரை திருமண வைபவத்துக்கு பூமியிலை உள்ள எல்லாச்சனமும் போனதாலை பூமி 'படார்' எண்டு ஒரு பக்கம் சரிஞ்சிடும். விசயம் பிசகப்போகுது, சனம் பயப்பிடுகிதெண்டு சிவபெருமான் பார்த்திட்டு, அகத்தியரை அடுத்த பக்கத்துக்கு போய் பலன்ஸ் பண்ணச் சொல்லிக் கேட்பார். அந்தாளும் பாவம்! முக்கியமான அலுவல், அதுவும் கடவுளே உதவி கேட்கிறா ரெண்டிட்டு, அந்த மனுசனும் பாவம் உம்மெண்டு மூஞ்சையை நீட்டிக் கொண்டு சோகப்பாட்டொண்டு பாடிக் கொண்டு, மற்றப்பக்கமாக நடந்து போவார். பாட்டோட அகத்தியர் போகப்போக தட்டை உலகம் எப்படி பலன்ஸ் ஆகுதெண்டு அந்தப்படத்திலை அவையள் animate பண்ணி படம் காட்டுவினம்.

பார்த்தீங்களே, என்னவிசயம் எண்டாலும் ஆதாரபூர்வமா தெரிஞ்சாத்தான் உண்மையெண்டு ஏற்றுக் கொள்ளலாம். அதைவிட்டிட்டு கொஞ்சம் அசந்தாலும், எங்கட காதிலையே பூச்சுத்தி பேப்பட்டம் கட்டிப்போடுவினம். நீங்கள் சிலநேரம் நினைப்பியள், இந்த மனுசன் உதைவிட திரும்ப வராமலே இருந்திருக்கலாம். எப்ப பார்த்தாலும் சும்மா குறை கண்டு பிடிச்சுக்கொண்டு, நொட்டை கதைச்சபடி தானெண்டு ! என்ர குஞ்சுகள் !.. உங்களைப்பற்றி நான் கதைக்காமல், கவலைப்படாமல் வேறஆர் ? நீங்களே சொல்லுங்கோ பார்ப்பம். அதுகும் நான் எங்கட எல்லாற்றையும் நன்மைக்காகத்தானே சொல்லிறன். என்னிலையும் உங்களுக்குப் பிடிக்காத விசயங்களை, எனக்கு நீங்கள் தாராளமா எழுதலாம். அப்ப நான் வாறன் என்ன ! பேந்து சந்திப்பம் (சும்மா என்னைத் திட்டிக் கொண்டு பத்திரிகைப் பக்கத்தைப் புரட்டவேண்டாம் !).

# சுண்டிக்குளம் மக்களுடன் சில மணிநேரம்



சுண்டிக்குளம் எனும் மீனவக் கிராமம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஓர் கிராமமாகும். இது தமிழர் தாயகப் பகுதியின் தொன்மைமிகு வரலாற்றுடன் தொடர்புடைய ஓர் கிராமமாகும். அதாவது முன்னைய காலத்தில் இக்கிராமம் ஒரு சிறிய துறைமுகமாகப் பயன்பட்டுள்ளது என இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இதைவிட ஆங்கிலேயர் காலம் தொட்டே இப்பிரதேசம் ஓர் பறவைகள் சரணாலயத்திற்குரிய பிரதேசமாகப் பேணப்பட்டு வந்துள்ளது. தற்போதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரும் பொருள் காப்புப் பிரிவினரால் பறவைகள் சரணாலயமாக இப்பிரதேசம் பேணப்பட்டு வருகின்றது.

இவ்வாறு சிறப்புமிக்க சுண்டிக்குளம் கிராமத்தை தரிசிக்கும் நோக்குடன் 01.02.2005 அன்று சென்றோம். தருமபுரத்தில் இருந்து கல்லாறு, பிரமந்தனாறு எல்லையிலுள்ள சுண்டிக்குளம் வீதியூடாக எமது பயணம் தொடர்ந்தது. இவ்வீதி புனரமைப்பு வேலைகள் நடை பெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் சுண்டிக்குளத்தில் இருந்து நான்கு கிலோ மீற்றருக்கு பாரிய மணல் தரவையாகவும்,



இடையே சுண்டிக்குளம் தொடுவாயையும் கடக்க வேண்டி ஏற்பட்டது. மிகவும் கடினமான பயணம். இவ் வீதியால் பயணிக்கும் போதுதான் பாலைவனத்தில் ஏன் ஒட்டகத்தை பாவிக்கிறார்கள் என்ற கேள்விக்கு அனுபவரீதியாக விடை கிடைக்கும். அவ்வாறு மணல் நிறைந்த வீதி பல ஆண்டுகளாக புனரமைக்கப் படாத ஆங்கிலேயர் காலத்து வீதி அது. சுண்டிக்குளம் பகுதி சுடுகாடாய் காட்சி தந்தது. ஒரு சில கட்டட இடிபாடுகள் தவிர வேறெவையும் அங்கில்லை. ஏன் அங்கே மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான அடையாளங்கள் வெகு குறைவு.

அதைவிட சுண்டிக்குளம் பகுதி என்பது கடற்கரையில் இருந்து 100மீற்றருக்கு உற்பட்ட பகுதிதான் குடியேற்றத்திற்கு உகந்த இடமாக இருக்கின்றது. இதில்தான் சுண்டிக்குளம், பேப்பாரபுட்டி, மக்கள் வாழ்ந்துள்ளார்கள். இவைதவிர்ந்த கடற்கரையில் இருந்து சுமார்1-1/2 -2கிலோ மீற்றர் வரை சதுப்பு நில தரவையும் மணல் வெளிகளும் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதியால் "300மீற்றருக்கு அப்பால் குடியமர்த்தல்" என்பது ஒரு சிக்கலான விடயமாகவே காணப்படுகின்றதை அவதானிக்க முடிந்தது. அதைவிட இப்பகுதி மக்கள் குடிசை வீடுகளில் வாழ்ந்துள்ளனர். இதனால் சுனாமி பேரலை தாக்கத்தின்போது உயிழப்பு குறைந்துள்ளது. தற்போது இம்மக்கள் கல்லாறில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கூடாரங்களில் தங்கியுள்ளார்கள். சுண்டிக்குளம் கிராமத்தை தரிசித்துக்கொண்டு கல்லாறில் உள்ள அகதிகள் முகாமுக்கு சென்றோம். அங்கே தமிழீழ நிர்வாக சேவையினர் இம்மக்களுக்கான அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்து பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை இக் கொட்டகைகளில் குடியமர்த்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர். சர்வதேச தொண்டா நிறுவனத்தின் அங்கத்தவர்கள் இம்முகாமில் உள்ள சிறுவர்களுடன் அளவளாவிக் கொண்டு 'மகிழ்வித்தல்' செயற்பாட்டை மேற்கொண்டிருந்தனர். கரைச்சி பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் அவர்கள் இம்முகாமின் சுகாதார நிலைவரம் தொடர்பில் ஆராய்ந்து கொண்டிருந்தார். தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் திரு.பூவண்ணன் அவர்கள் இம்முகாமை பார்வையிட்டுக் கொண்டிருந்தார். இவற்றை அவதானித்த நாம் பின்னர் கிராம சேவையாளரிடம் இம் முகாமின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகக் கேட்டோம்.

கல்லாறு முகாமில் 85இற்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. அவர்களின் அடிப்படைத் தேவைகள் பெரும்பாலும் பூர்த்தி செய்துவிட்டோம். இவர்களும் அடுத்த கட்டத் தேவையாக தொழில் செய்வதற்கான உபகரணங்களை வழங்க வேண்டும். அதற்காக விபரம் எடுக்கப்பட்டு உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவே இம்

**அ.பிரகாஷ்**
**மு.தமிழ்ச்செல்வன்**

மக்களை பொறுத்தவரை இன்று மிக முக்கிய தேவையாக உள்ளது. ஏனைய தேவைகளை நிர்வாக சேவையினர் தமிழீழ 24மணி நேரமும் தங்கி நின்று மேற்பார்வை செய்து வருகின்றனர். இவ்வாறு கூறிய கிராம அலுவலரிடம் குறுக்கிட்டநாம் "மக்களை ஏனைய சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை போன்று 300மீற்றர் தொலைவில் மீள் குடியமர்த்துவது என்பது சுண்டிக்குள பிரதேசத்தை பொறுத்தவரை சாத்தியமற்றது. ஏனெனில் அங்கு நில அமைவிடம் சதுப்பு நிலமாகவும், நீர் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. எனவே மக்களை எங்கு மீள் குடியேற்றம் செய்யப் போகின்றீர்கள்?" என கேட்டபோது மீள் குடியேற்றம் தொடர்பாக அம் மக்களின் விருப்பங்களையும் அறிந்துகொண்டு கல்லாறு பிரதேசத்தில் அல்லது அதற்கப்பால் குடியமர்த்த இருப்பதாகக் கூறினார்.

சுண்டிக்குள கிராமத்தில் 1974ஆம் ஆண்டு தொடக்கம் வாழ்ந்து வருகின்ற மாரிமுத்து பாலகிருஸ்ணன் சம்மாட்டியாரை சந்தித்தபோது தாங்கள் 1974ஆம் ஆண்டுகளில் தொழிலுக்காக வந்து போனதாகவும் பின்னர் படிப்படியாக குடியமர்ந்ததாகவும் தாங்கள் வந்தபோது இங்கு பத்து குடும்பங்கள் மாத்திரமே இருந்ததாகவும் ஐந்து மணிக்கு பின் சுண்டிக்குளப் பாதையில் யானைகள் வந்துவிடுவதால் தங்களால் எந்தவித அவசர தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்வதற்கு வரமுடியாது எனவும் கூறிய அவர் மேலும் தாங்கள் பிடிக்கின்ற மீன்களை போதியளவு உடனுக்குடன் சந்தைப்படுத்த முடியாத காரணத்தால் கருவாடு போட்டு பின்னர் கொழும்புக்கு ஏற்றுமதி செய்ததாகவும் கூறினார். அத்தோடு ஐந்தாம் ஆண்டுவரை உள்ள ஓர் பாடசாலையைத் தவிர அங்கு வேறு வகுப்புகளுக்கு பாடசாலை இல்லை எனவும் சிலர் தங்கள் பிள்ளைகளை வெளியிடங்களில் அனுப்பி படிப்பித்ததாகவும், ஏனையோர் ஐந்தாம் ஆண்டுடன் கல்வியை நிறுத்திக்கொண்டதாகவும் குறிப்பிட்டார். இவர் உடப்பு



பகுதியிலிருந்து வந்து குடியேறியவர். மேலும் மாதகல் பகுதியிலிருந்து சுண்டிக்குள பகுதியில் வந்து குடியேறிய செல்வராசா என்பவரை சந்தித்த போது அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

தாங்கள் இங்கு வந்து குடியேறியபோது ஒரு சில குடும்பங்களைத் தவிர வேறு எவரும் இல்லையென்றும் சிலர் தொழிலுக்காக சித்திரை மாதமளவில் வந்து ஐப்பசி அளவில் சென்றுவிடுவதாகவும்

இங்கு எந்த அரச திணைக்களங்களும் இல்லையென்றும் இன்று வரை தாம் வைத்தியசாலை மற்றும் அவசர தேவைகளுக்கு தாளையடி அல்லது தருமபுரம் வரவேண்டும் எனவும் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்ததாகவும் போராட்டகாலப்பகுதியில் விமானத்தாக்குதல்கள், மற்றும் கடற்படை தாக்குதல்களினால் பல உடமைகள், உறவுகளை இழந்ததாகவும் இப்போது சுனாமியாலும் இழந்து போயுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் தாங்கள் தொழில் செய்யவே விரும்புவதாகவும் அதற்கு தொழில் உபகரணம் இல்லையென்றும் உதவிகள் செய்தால் மீண்டும் தொழிலுக்குச் செல்ல பெரும் உதவியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார். ஒரு சிறிய மணல் பாதை மாத்திரமே இருந்ததாகவும் அதன் வழியே பெரும் சிரமத்தின் மத்தியில் வெளியிடங்களுக்கு வந்துபோனதாகவும் கூறியதோடு இப்போது இங்கு இருப்பதற்கான இடத்தினை பல கிராம மக்கள் சிரமதானம் மூலம் காடுகளை வெட்டித் தந்ததாகவும் குறிப்பிட்டார். தற்போது அவர்களின் தேவை அவர்களை மீண்டும் தொழில் செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தால் இதுவே அவர்களுக்குரிய ஆரோக்கியமான வழியாகும்.


## 41ஆம் நாள் நினைவலை

அன்னையின் மடியில்
16
06
1977

அன்னையின் மடியில்
17
01
2004



றெக்ஸ் ஜோய் நந்தா
றெ.சஞ்சைய்

ஆழியின் சீற்றத்தில் 26.12.2004

காதுகள் அடைத்திருக்க
கண்கள் பார்த்திருக்க
வீதியோரம் உயிர்கள் புரந்திருக்க – உன்
பாதவரவுக்காய் காத்திருந்தோம்
பரிதவிக்க விட்டுவிட்டாய்
உளமெல்லாம் அன்று மகிழ்வோடு சென்றாய்
இன்று என்னைக் காண வழியில்லை என்றாய்
கிறிஸ்மஸ் வடிவில் எமன் வந்து அழைத்தானோ?
கடல் கூட அசைவற்றுக் கிடக்கிறது – உன்
கலகலத்த மொழியின்றி
உன் பச்சிளங் குழந்தையின் சிரிப்பொலி கேட்டு
மனமகிழ்ந்தோமே உன்னுடன்
அவனையும் அழைத்து விட்டாயே!
மனங்கூட மௌனித்துக் கிடக்கிறதே
சொல்ல வார்த்தையின்றி
நீரவிழும் விழிகளோடு நித்தமும் நாம் வாடுவதா?
நெஞ்சில் நிறைந்து வாழ்கின்றாய் – அன்று

உன் எண்ணத்தைச் சொல்லிவிட மறந்து விட்டாய்
பேதலித்து நிற்கிறதே கணவர் உள்ளம்
கண்ணீர் முத்துக்களால் – உனக்கு
கவிவடிக்கச் செய்யவா – எம்மை
கவி படிக்கச் சொன்னாய் – நீ
சமைத்த உணவை நாம் உண்டு மகிழ்ந்தோமே
சோதரர் நாம் தவிக்கின்றோம்
கபடமற்ற உன் மனதை கடல் கொண்டு போனதுவோ?
ஏங்குகின்றோம் உன் வரவுக்காய்.

உன் பிரிவால் துயருறும் கணவர் றெக்ஸ்றோய்,
மகள் சபீனா, அப்பா றோக் செல்வநாயகம், அம்மா றாணி,
சகோதரர்கள் சாள்சன் (இத்தாலி) சபேசன் (இலண்டன்)
டயானா, டீனா, அண்ணி றஜனி (இத்தாலி)
மருமகன் கெபின் (இத்தாலி)

(5669)

வலையன் மடம்
முள்ளிவாய்க்கால்



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 06**

**பகுதி -34**

"ஓமோம்...இரண்டும் சேர்ந்து பெரிய ட்ரக் வந்து நிக்கிறத பார்த்துக் கொண்டிருக்கினம். ட்ரக் வந்து நிக்குது.....அந்த மனிசன் இறங்கி உள்ளுக்குப் போறான்... தன்னுடைய ட்ரக்கில் எல்லாத்தையும் ஏத்துறான்... எல்லாம் ஏற்றி முடிஞ்சதும் ட்ரக்கை ஓடிக்கொண்டு போறான்..." என்றான் டிப்ஸ்.

"எனக்கு விளங்குது" என்று அவனிடம் கூறினேன். டிப்ஸ் ட்ரக் பொம்மையை எடுத்து தான் எனக்குக் கூறியவற்றை செய்து காட்டினான்.




பின் நீண்ட நேரம் அமைதியாக இருந்தான்.

"இன்னும் ஐந்து நிமிடங்கள் இருக்கின்றன.... டிப்ஸ்" என்று நான் கூறியதை அவன் கவனித்ததாக தோன்றவில்லை.

"இன்னும் ஐந்து நிமிடங்கள் இருக்கின்றன என்று நான் சொன்னேன்" மீண்டும் நான் சொன்னேன். "ஓம்....நீங்கள் சொன்னது எனக்கு கேட்டது" சலிப்போடு டிப்ஸ் சொன்னான்.

"நான் ஐந்து நிமிடங்கள் இருக்கிறது என்று சொன்னது உங்களுக்குக் கேட்டிருக்குது. ஆனா... அது உங்களுக்குக் கேட்டத நீங்கள் வெளிக் காட்டயில்லை....அல்லவா?" நான் கேட்டேன்.

"ஓமோம்...ஆனாபிறகு வெளிக் காட்டினனான் தானே?"

"ஓம்....நான் திருப்பிச்சொன்ன பிறகுதான் நீங்கள் அப்பிடிச்செய்தனீங்கள்" என்றேன். இந்த மணித்தியாலம் திடுதிடுப் பென்று அல்லது எச்சரிக்கை எதுவுமில்லாமல் முடிந்து போகாமல் சுமுகமான முறையில் முடிவுக்கு வரவேண்டும் என்று நான் விரும்பினேன்.

"இது எல்லாத்தையும் ஐஞ்சு நிமிசத்துக்குள்ள செய்து முடிச்சுப்போடலாம்" என்றவன் மணலுக்கூடாக ஒருபாதையை அமைத்தான். அது வீடுவரை வந்து வீட்டைச்சுற்றிக் கொண்டு சென்றது. "மணலுக்குள்ளால போகயிக்க ஒருமாதிரி சத்தம் கேட்குது" என்றவன் என்னைப் பார்த்துவிட்டு வாய்விட்டுச் சிரித்தான். "ட்ரக் இப்ப நிரம்பியிட்டுது. அது ஒரு பாதையை ....ஒருவழிப் பாதையை கீறிவிடப் போகுது...இங்க மணலக் கொட்டப் போகுது" என்றவன் பொம்மை வீரர்களிடையே விரைவாகத் தேடி மூன்று பொம்மைகளைத் தெரிந்து, ட்ரக்கில் வைத்தான். பின் மணலால் அவர்களை மூடினான். "இது ஒரு வழிப்பாதை..... இந்த மூன்று பேரும் இந்த ட்ரக்கில் ஏறினார்கள்... அவர்கள் திரும்பி வரவேமாட்டார்கள்."

"அவர்கள் போனால் திரும்பி வர மாட்டார்களா?" என்றேன்.

"ஓமோம்.... ஒருபோதும் வரமாட்டார்கள்." என்றவன் ட்ரக்கை மணலுக்குள் தள்ளினான். மணலை அள்ளி ட்ரக்கை அந்த மனிதர்களோடு சேர்த்து மூடினான். இதனால் உருவாகிய மணல் கும்பியை வெறித்துப் பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தான்.

"டிப்ஸ் இங்க பாருங்க" என்று விட்டு, மூன்று விரல்களைத் தூக்கிக்காட்டியபடி இவ்வளவு நிமிடங்கள்தான். இருக்கின்றன" என்றேன்.

அவன் என்னைப் பார்த்தான். "இன்னும் மூன்று நிமிடங்கள்". பின் அந்த மணல் கும்பதின்மேல் மேலும் மணலை குவித்து அந்த ட்ரக் கையும் பெயர் குறிப்பிடாத மூவரையும் ஆழப் புதைத்து விட்டான்.

"இப்ப சிறிய வாத்தைக் கவனிப்போம்" என்று மென்மையாகச் சொன்னவன், "என்ன நடந்ததென்று கண்டனிதானே. அவர்கள் போய் விட்டார்கள்" என்றான். பின் சிறிய வாத்தை எடுத்து ட்ரக்கின்மேல் உருவாக்கியிருந்த மணல் கும்பத்தின்மீது வைத்தான். கையிலிருந்த மணலை தட்டிவிட்டுக்கொண்டான். மணல் பெட்டியை விட்டுவெளியே வந்தான்.

திடீரென்று, "இன்றைக்கு வலன்ரைன் நாள்" என்றரன்

"ஓம்.இன்றைக்குத்தான் அது". என்று பதில்சொன்னேன்.

" இரவு முழுவதும், பகல் முழுவதும் அவர்களை இங்கேயே இருக்க விடுங்கள். கீழே எடுத்து வைக்க வேண்டாம்" என்றான் அவன். "நீங்கள் வைச்சிட்டு போற அதே இடத்தில் அவை இருக்கவேணுமெண்டு நீங்கள் விரும்புறீங்களோ?"

"ஓமோம்" என்றான் டிப்ஸ். எனக்கு அண்மையாக வந்தான். நான் எனது முழங்காலின் மேல் வைத்துக்கொண்டிருந்த குறிப்புப் பொத்தகத்தை தொட்டான், "இத உங்கட குறிப்புகளில எழுதுங்கோ" என்றவன் தொடர்ந்து, "டிப்ஸ் வந்தான். இன்றைக்கு அவனுக்கு மணலில் விளையாடும் ஆர்வம் இருந்தது. வீட்டோடும் போர்வீரரோடும் இறுதித் தடவையாக விளையாடினான்...குட்பை" என்றான்.

தனது கோட்டையும் தொப்பியையும் எடுத்துக்கொண்டு விளையாட்டு அறையை விட்டு வெளியேறியவன். மண்டபம் நெடுக நடந்து வரவேற்பறைக்குள் நுழைந்தான். அவனது கோட்டையும் தொப்பியையும் போட்டுக் கொள்வதற்கு அவனது தாயார் உதவினார். வேறு ஒரு கதையுமில்லாமல் புறப்பட்டுப் போய்விட்டான்.

நான் எனது அலுவலகத்துக்குள் போய் எனது மேசையடியில் அமர்ந்தேன். என்னமாதிரி பிள்ளை இது! அவனுடைய குறியீட்டு நடத்தையைப் பற்றி எவரும் ஊகக் குறிப்புகளை தெரிவித்து பொருள் படுத்தலாம் என்பதோடு, அதனுடைய முக்கியத்துவம் பற்றி ஓரளவு துல்லியமாக நிறுவவும் கூடும். எனினும் இந்தக் கட்டத்திலே வாய் மொழி மூலமாக பொருள் கொள்வதென்பது அவசியமில்லாததாகவும், வழக்கற்றுப் போய்விட்ட ஒன்றாகவும் மட்டுமல்லாது வரையறை செய்கின்ற ஒன்றாகக் கூடத் தோன்றியது. மேலும் தகவல்களை பெற முயற்சிப்பதும் அவ்வாறான ஒன்றாகவே



தோன்றியது. NP என்னுடைய கருத்தின் படி இந்த உளவியல் சிகிச்சை வகையின் குணப்படுத்தல் ரீதியான பெறுமதியானது, தனக்கு இரண்டு அடிப்படை உண்மைகளை உணர்விக்க முயலும் ஒரு உறவில், தான் இயலுமை கொண்டவனும் பொறுப்புள்ளவனுமான நபராக இருப்பதை, ஒருபிள்ளை பட்டறிந்துகொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும். எந்த ஒரு மனிதப் பிறவியுடையவும் அக உலகத்தைப் பற்றி அந்த நபரே அறிந்திருக்கும் அளவுக்கு வேறு எவரும் ஒரு போதும் அறிந்திருக்க முடியாது என்பது இந்த இரண்டு அடிப்படை உண்மைகளில் முதலாவதாகும். பொறுப்புள்ள சுதந்திரம் என்பது அந்த நபரின் உள்ளேயே தோன்றி வளர்வதாகும் என்பது இரண்டாவது உண்மையாகும். முதலில் ஒரு பிள்ளை தன்னைப்பற்றித் அதிகமதிகம் புரிந்துகொள்ளுதலில் இருந்து பிறக்கும் சுயமரியாதை மற்றும் மேன்மை பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும். அதன் பின்னரே மற்றவர்களுடைய ஆளுமைகள், உரிமைகள் மற்றும் முரண்பாடுகள் பற்றி புரிந்துகொள்ளமுடியும்.

(தொடரும்....)

---

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பெயருடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப் பட்டது.

"கடல் கோள் எம்மைக் கொண்டது மீண்டும் கடலை நாம் கொள்வோம்."

"கடலம்மா உனக்கென்ன கோபம் திரும்பியும் உன்னிடமே வருவோம்"

என்ற உணர்வுடன், கடலை மீண்டும் கொள்ளும் வலியுடன் மக்கள் எழுச்சி கொள்வதற்காய் இன்னும் பலரை இணைத்துக் கொண்டு அரங்க செயற்பாட்டுக் குழுவின் 'ஆற்றுப்படையணி' களமிறங்கியது.

கிளிநொச்சி, முல்லை, யாழ் மாவட்ட ஆசிரியர்கள், கல்வியற் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக அரங்கியல் மாணவர்கள் என்று பலர் அவல நீக்க ஆற்றுப் படையரங்கின் ஆற்றுப்படையணியில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தப் பணியின் போது நாளாந்தம் இவர்கள் பெறும் அனுபவங்கள் மூலம் அரங்கும் வளர்கிறது மக்களும் பயன்பெறுகின்றனர்.

இது உபதேசிக்கும் நடைமுறையல்ல அவர்களுடன் சேர்ந்து போவது, அவர்களின் சுமைகளில் பங்கு கொண்டு வழிப்பட களமமைக்கும் வேலையிது.

இறந்தவர்களின் அஸ்தியைக் கொண்டுபோய் கங்கையில், கடலில் கரைத்து ஆத்ம சாந்திக்காய் சடங்கு செய்து பிரார்த்திப்பது தமிழர்களின் பண்பாட்டில் ஓர் அம்சம்.

முல்லைத்தீவில் அரங்கை நிகழ்த்தியபோது 60 வயதுத் தந்தையொருவர் சொன்னார் "நாங்கள் உயிரோடை பிள்ளையைக் கரைச்சிட்டம் கடல்ல, உந்தக் கடல்ல தான் தொழில் செய்யவேணும், செய்வம்". உறுதி கலந்து தொனித்தது இந்தக்குரல்.

போராடிவென்று வாழ்ந்த தனது அனுபவத்தில் நம்பிக்கை தரும் அந்தமொழிகளை அவர் உதிர்த்திருக்கிறார்.

இந்த நம்பிக்கை தரும் நிலைமைகள் அல்லது மாற்றங்கள் திடீரென்று நிகழ்ந்துவிடுவதல்ல. நீண்டகால ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்கொண்ட போராட்டத்தில் புடம் போடப்பட்டவர்கள் தமிழ் மக்கள். ஆற்றுப்படையரங்கின் படிப்படியான நகர்வுகள் இவர்களை மெல்ல மெல்ல மீட்டு வருகிறன. எதிர்காலம் பற்றிய நம்பிக்கைக்கும் கற்பனைக்கும் இட்டுச் செல்வது இதன் நோக்கமாகிறது.

அரங்கச்செயற்பாட்டுக்குழுவுக்கும் மக்களுக்கும் ஏற்கெனவே இருந்த உறவு காரணமாக அவர்கள் ஆற்றுப் படையாளிகளுடன் கதைக்கத் தொடங்கினர். "பத்துக் கறியோடை சாப்பிட்ட மாதிரிக் கிடக்கு" என்று திருப்திப்பட்டனர்.

தமது பிள்ளைகளைப் பற்றி அவர்கள் கவலைப்பட்ட படியினால் பிள்ளைகளுடன் வேலையில் ஈடுபாடு காட்டினோம். இதற்காகவே ஆசிரியர்கள் கூடுதலாக அணிதிரட்டப்பட்டனர். ஆசிரியர்களைப் பார்த்ததே அவர்களுக்கு புத்துணர்ச்சியாக இருந்தது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து மாசாரில் வந்திருந்த மக்களிடம் சென்றபோது பிள்ளைகள் சிலர் மிரண்டுகொண்டு நிண்டனர். தாய்மார் "இவை ரீச்சர்மார் தான்" என்று சொன்ன பிறகுதான் அவர்கள் அருகில் வந்தனர்.

தாளையடியில் இருந்து இடம் பெயர்ந்து வந்திருக்கும் ஆறுவயதுச் சிறுமியின் ஆசிரியை சுனாமியில் இறந்துபோய்விட்டார். "என்ர ரீச்சர் வந்தோண்ணைத்தான் பள்ளிக்கூடம் போவன்" என்று அடம்பிடித்துக் கொண்டிருந்தவள்; எமது ஆற்றுப் படை ஆசிரியர்கள் வந்தபோது விளையாட்டுக்களால் ஈர்க்கப்பட்டு சிரிக்கத்தொடங்கிவிட்டாள். அதைக் கண்ட 60 வயது அம்மா ஒருவர் "இண்டைக்குத்தான் இந்த முகாமில சிரிப்புச் சத்தம்கேட்குது." என்று பரவசப்பட்டுக்கொண்டார்.

பிள்ளைகளுடன் அரங்கை ஆரம்பித்து அவர்களை சிரிக்கவும் உடலை அசைக்கவும் வைத்து சுறுசுறுப்படைய வைக்கும்போது துயர் இறுகிப்போய் இருக்கும். வளர்ந்தவர்களும் அரங்கில் மெல்லமெல்ல கலக்கும் நிலை அடுத்தபடியாக நிகழ்கின்றது.

செம்பியன்பற்றில் இருக்கும் அம்மா ஒருவர் "இப்படிப் பிள்ளையள் விளையாடினால் உடம்பும் நல்லா வரும் புத்தியும் வளரும்தானே" என்று கூறினார். "அவை மட்டுமல்ல பெரியாக்களையும் பாருங்கோ இப்படி பங்கு பற்றி சந்தோசமாய் இருக்கினம். நீங்கள் இப்படிச் செய்யிறதுதான் எங்களுக்கும் நல்லது. அடிக்கடி வந்தீங்கள் எண்டால் நல்லது." என்றும் குறிப்பிட்டார்.

தங்கள் சுமைகள் நீங்கள் பெறும் இன்பத்தை அனுபவிப்பவர்கள் ஆற்றுப்படையாளிகளை வாழ்த்தி அனுப்புவது நல்ல அனுபவம்.

மாசாரில் தங்கியுள்ள ஒரு 50 வயது தாய் "கடவுளைப்போல வந்தீங்கள் நீங்கள் நல்லாய் இருக்க வேணும்"என்று வாழ்த்தியனுப்பினார்.

நெஞ்சு நிறைய சுமந்து வைத்துள்ள பேரனர்த்த அனுபவத்தை வெளிப்படுத்தி ஆறுதல் அடைய அவர்களுக்கு நம்பிக்கையான உறவுகள் தேவைப்படுகின்றனர். எமது ஆற்றுப்படையினர் சென்றபோது ஒரு தந்தை "இந்த வாகனம் ஒண்டுதான் சாமான் இல்லாமல் ஆட்களை கொண்டு வந்து இறக்கிப் போட்டுபோகுது" என்று சந்தோசப்பட்டார்.

பொற்பதி, குடத்தனை என்ற இடத்தில் ஆற்றுகையில் கலந்து கொண்டு கடற்பாட்டுக்கள் பாடி உற்சாகம் அடைந்த 24 வயது இளைஞர் ஒருவர் "நாங்களும் தொழில் இல்லாமல் கிடந்து யோசிச்சு பைத்தியம் பிடிச்சிருக்கும், நீங்கள் வந்து இப்படியெல்லாம் செய்யிறதால சந்தோசமாய் கிடக்கு. பிள்ளையளுக்கு மட்டுமில்ல எங்களுக்கும் நல்லம் என்று மகிழ்ந்துபோனார்.

இந்தவேலையில் ஈடுபடும் அரங்காளிகள் அரங்கில் ஏற்படும் மாற்றம், வளர்ச்சி என்பவற்றை அனுபவித்து, உணர்ந்து கற்றுக்கொள்கின்றனர்.

சொல்லப்போனால் சுனாமிக்கு முதல்நாள் வரை நாங்கள் அரங்கில் பயன்படுத்திய எந்த மூலகங்களையுமே பயன்படுத்த முடியாத நெருக்கடி அல்லது சவால்தான் எங்களுக்கு ஏற்பட்டது. இசைக்கருவிகளையோ வேட உடைகள், முகமூடிகளையோ கொண்டு சென்றால் பிள்ளைகள் பயப்படக் கூடும்; பெரியவர்கள் தமது சோகத்துக்குள் அமிழ்ந்து போகக் கூடும் என்று யோசிக்கவேண்டியிருந்தது. எனினும் அரங்கு செயற்பட வேண்டியதேவை முன்னின்றது. எது வந்தபோதும் அந்த மக்களிடம், பிள்ளைகளிடம் கொடுப்பதற்கு எமது உடலும் மனமும் தயாராய் இருந்தது. இப்போதைக்கு அதனையே கொடுப்பது என்றும் யோசனை வந்தது. முடிவானதும் வெறுங்கையராய், வெளிமனத்தராய் களமிறங்கினர்.

"என்ர உடம்பை அவைக்குச் சொந்தமாக்கிப்போட்டினம், அவை தான் உடம்பைப்பயன்படுத்தினவை" பிள்ளைகள் சொல்லிச்சினம் அடுத்த முறை வரேக்கை 10கை கொண்டு வாங்கோ 2கை நாங்கள் பிடிக்கக் காணாது எண்டு. என ஆற்றுப்படையாளி ஒருவர் குறிப்பிட்டார்.

பெரியவர்கள் சிலருடன் கதைத்துக் கொண்டிருந்தோம் "ஆரம்பத்துக்கு பத்துப் பேருக்கு ஒரு வள்ளம் தரப்போகினமாம். எங்கடசனம் தனித்தனி தொழில் செய்து பழகினது. உது சரிவருமோ" என ஆதங்கப்பட்டனர். அவர்களின் ஆதங்கம் நியாயமானதே. சொந்தக்காலில் தனித்து நின்று முன்னேற விரும்பும் அவர்களது நம்பிக்கைக்கும் உடனடியாக எதிர்கொள்ளக்கூடிய வளப்பற்றாக்குறைக்கும் இடையில் சமநிலை காணவேண்டியதேவை உள்ளது.

"விடுதலைப்புலிப்பிள்ளையள் தான் இண்டைக்கு எங்களைக் கவனிக்கினம். இடைக்கால அரசு இருந்துதெண்டால் இவ்வளவுக்கு எங்கட நிலைமை வேற. சிறிலங்கா அரசு எங்களுக்கு நல்ல நிவாரணம் தரும் எண்டு கனவில் கூட நாங்கள் நினைக்கேல்ல என்று ஒரு முதியவர் தெளிந்து மொழிந்தது கண்டோம்.

அந்த மக்களின் இந்தக் கூற்றுக்கள் சுனாமி அனர்த்தத்தின் பின்னான அரங்கின் அடுத்த கட்ட தேவையையும் எமக்குப்படிப்பித்தது. அவர்களிடையே குழுவாக வேலை செய்து பயன்பெறும் உயரிய பண்பாட்டை ஏற்படுத்தி ஒற்றுமையுடன் தேசநிர்மாணத்திலும் விடுதலைப் பணியிலும் பங்கு கொள்ள வைக்கவேண்டிய வேலை அரங்கின் முன்னே விரிந்து கிடப்பதை வாசல் திறந்து காட்டுகிறது.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*பாவலா!*
*அம்பாறை செயலணிக் குழு கூட்டத்திற்கு ஜே.வி.பி அழையா விருந்தாளியாக நுழைகிறதே அவர்களுக்கு வெட்கம் இல்லையா?*

*பிரபா,*
*திருவையாறு.*

பதவிப்பதர்களாக அரசிலுக்கு வந்தபின் வெட்கமேது? மானமேது?

*பாவலா!*
*எனது பிள்ளைகள் இரண்டையும் ஆசிரியர்களாக ஆக்க வேண்டும் என்ன செய்யலாம்?*

*ராதிகா,*
*ஆனந்தபுரம்.*

முதலில் ஆசிரியர்களுக்கு நல்ல மாணாக்கர்களாக இருக்கக் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுங்கள் நல்ல மாணவனே சிறந்த ஆசானாக இருக்கமுடியும்.

*பாவலா!*
*ஜே.வி.பி, சி.சு. கட்சி முறுகல் எதில் முடியும்?*

*சங்கீதா,*
*யாழ்ப்பாணம்.*

முறுகல் விரிசலாகும்- விரிசல் உடைசலாகும்.

*பாவ்லா!*
*இலங்கை இந்திய உறவு தற்போது எவ்வாறு உள்ளது?*

*தர்சன்,*
*வட்டக்கச்சி.*

ஆண்டான்- அடிமை உறவுமாதிரி... வலியாரும் மெல்லாரும் கொள்ளும் உறவு மாதிரி...

*பாவலா!*
*மக்கள் தொண்டன் எவ்வாறு இருக்கவேண்டும்?*

*சிவநேசன்,*
*புதுக்குடியிருப்பு.*

அரசியல்வாதியாகாமல் இருக்கவேண்டும்.

*பாவலா!*
*அரசியல் ஒரு சாக்கடை என்கிறார்களே அதில் தாங்கள் குதித்திருக்கிறீர்களா?*

*சுகி,*
*மல்லாவி.*

சாக்கடையில் வீழ்ந்து சாகும் துணிச்சல் எனக்கில்லை.

*பாவலா!*
*தாங்கள் பழமை விரும்பியா? புதுமைவிரும்பியா?*

*அனுசியா,*
*பண்டாரிக்குளம்.*

பழைமை மறந்த புதுமையும் புதுமையற்ற பழைமையும் எவராலும் விரும்பப்பட மாட்டாது.

*பாவலா!*
*பெண்களை சீண்டி இன்பமடையும் ஒரு சில இளைஞர்களிற்கு தங்களின் அறிவுரை என்ன?*

*சின்னத்தம்பி,*
*சாவகச்சேரி.*

-அரைமதி- கால்மதியாக வாழ்ந்து பெறுமதியற்றுப் போகாதீர்கள்...

*பாவலா!*
*காசி ஆனந்தனின் கவிவரிகளில் தங்களைக் கவர்ந்தவை?*

*சூரர்,*
*கிளிநொச்சி.*

உணர்ச்சிக் கவிஞரின் கவிவரிகள் எல்லாமே உணர்வைச் சிலிர்க்க வைப்பவைதான்.

*பாவலா!*
*சங்கரியார் கொழும்பில் அண்மையில் குழறுபடி செய்துள்ளாரே?*

*கார்த்திகேசு,*
*மல்லாவி.*

அது குழறுபடியல்ல குழப்படி... அறளைக் குழறல் என்று கூடக் கூறலாம்.

*பாவலா!*
*யாழ்ப்பாணத்துக்கு எப்போது யாழ்தேவி வரும்?*

*பிரியங்கா,*
*புளியங்குளம்.*

சுதந்திரம் பெற்றதும்...!?

*பாவலா!*
*வெளிநாடுகளில் ஒரு சில தமிழ் இளைஞர்கள் தறிகெட்டு நடப்பது பற்றி?*

*யாழினி,*
*மீசாலை.*

குறி தவறிச் செல்ப வர்கள் தறிகெட்டுத்தான் நடப்பார்கள்.

*பாவலா!*
*வவுனியாவில் கூட கொள்ளையர்கள் கைவரிசை காட்டுகிறார்களே அவர்களை அடக்கமுடியாதா?*

*பிரதீபா,*
*கச்சாய்.*

அடக்க வேண்டியவர்கள் அடக்கமாக இருப்பதனால் அவர்கள் கை நீளுகிறது... அவ்வளவுதான்...!



# தெருப்பேச்சு

(உண்மையில் கேட்டது)

எட...எப்படா கோண்டாவில்லால வந்தனீ-

நேற்று வந்தனான். விதானையட்ட ஒரு விசயமா ஆளைப்பிடிக்கேலாமக் கிடக்கு.

ஏன் என்ன பிரச்சினை.

உனக்குத் தெரியாதே சுனாமியில பாதிக்கப்பட்ட ஆக்களுக்கு சலுகை அடிப்படையில கல்வி, தொழில் வாய்ப்புகளைக் குடுக்கினமாம்.

ஆர் இலங்கை அரசோ.

இலங்கை அரசு சிபார்சு செய்துதர வெளிநாடுகள் குடுக்கு தெல்லே.

அ....அ... பிறகு... கோண்டாவிலுக்கு சுனாமி எப்ப வந்தது.

விசரா உன்னைப் போலயும் பேய்க்கிலான் இருக்குதோ...ங. அந்த நேரம் நான் முல்லைத் தீவில நிண்டதா ஒரு பதிவை எடுத்துப்போட்டால் வெளிநாடு போகலாம் எல்லே.

எட இப்படி ஒண்டிருக்கே. நானுந்தான் அங்க நிண்டனான். ஆனா எங்கட பக்கம் சுனாமி வரயில்லையே. உந்தக்கதையவிடு. இப்ப வெளிநாடுகள்ள அகதி அந்தஸ்தில உள்ளவையே இதைச்சாட்டி வந்துபோகினம் தெரியுமே. அவயட இடங்களச் சுனாமி எட்டியும் பாக்கேல்லயெண்டு ஆர் சொல்லுறது. இப்ப ஆயிரக்கணக்கில இந்தச் சலுகையப்.... பயன்படுத்தி வெளிநாட்டு வேலைக்கு வெளிக்கிடுகினம். வெளிநாட்டில படிக்கவும் போகினமாக்கும்.

ம்...எல்லாம் நேரந்தான். நாடு நாடெண்டு நாட்டைக் கட்டிப்பிடிக் கட்டும் வெளிநாடு போய் வந்தாத்தானே சாமரம் மஞ்சம் பல்லக்குப் பரிவாரம் போ....போ.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-106



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்-106**

..................................................
..................................................
..................................................
..................................................

பெயர் : ..................................................
முகவரி : ..................................................
..................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -105



**யோ.கபிலன்,**
**மாறாயிலுப்பை,**
**நெடுங்கேணி.**

### பரிசுக்குரிய வரிகள்

*இனியும் ஒப்பாரி பாடுவதால் பயனேது?*
*ஒருதரம் யப்பானிய வரலாற்றை புரட்டுங்கள்*
*அழிந்த கடல் மடியில் மீண்டும் வாழ்வு பெற*
*கைகோர்த்து விரையுங்கள் மனுக்குலமே!*

### பாராட்டுக்குரிய வரிகள்

*தேசத்தின் விடியலுக்காய் உழைத்திருந்தபோது*
*கடலன்னை பொங்கியெழுந்ததுவே*
*உறவிழந்து கதறியழும் உள்ளங்களே*
*கலங்கிடாதீர் தமிழ் ஈழமே உமக்கு உறவல்லோ.*

ரா.சுகந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*"ஐ.நாவின் செயலரே சுனாமியின்*
*கோரத்தால், உறவுகளை, இழந்து*
*கதறியழும் எம் மரண ஒலிகள்" உம்*
*மனச்சாட்சியை, உலுப்பவில்லையா?*

க.தங்கராசா,
கனகாம்பிகைக்குளம்.

*மலையாக திரண்ட சுனாமி அலையில்*
*விலையாக போனவர் நினைவுகள் மீள*
*விடியல்கள் காத்திருக்கு விழிநீரை துடையுங்கள்*
*விடிகின்ற திசை நோக்கி புதுப்பாதை அமையுங்கள்.*

பாரதி,
வட்டக்கச்சி.

*வரலாறு காணாத துயரம் வந்து ஒரு மாதம்*
*உருண்டு ஓடியதோ!*
*உறவுகளே கலங்காதீர் விழி நீரை துடைத்து*
*எழுந்திடுவீர் புதுவாழ்வு படைக்க.*

இ.நிஷாந்தி,
முரசுமோட்டை.

*ஆழிப்பேரலையே அள்ளிச் சென்றாயே- எம் உறவுகளை*
*தேம்பி அழுதாலும் தேற்ற முடியவில்லை- எம் மனதை*
*தேடுகிறோம்- விதைத்த புதைகுழியில்- எம்*
*உறவுகளின் வதனங்களை.*

ச.சிவனேஸ்வரி,
புளியங்குளம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு




இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது